இஸ்லாம் வழங்கும்

பெண்ணுரிமைகள்

காலம் கடந்தவையா? நவீனமானவையா?

பழமையானவையா? புதுமையானவையா?

டாக்டர் ஜாகிர் நாயக்

தமிழில்

முஹம்மத்

சாஜிதா புக் சென்டர்

248, தம்புசெட்டித் தெரு,

முதல்மாடி, சென்னை - 600001

போன்: 044-2522 4821

இஸ்லாலம் வழங்கும்

பெண்ணுரிமைகள்

காலம் கடந்தவையா? நவீனமானவையா?

[அ]

பழமையானவையா? புதுமையானவையா?

விலை: ரூபாய் 40.00

❑நூலின்பெயர்: இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள் ❑ஆசிரியர்: டாக்டர் ஜாகீர் நாயக் ❑வெளியீடு: ஸாஜிதா புக் சென்டர், 248, தம்புசெட்டித் தெரு, முதல்மாடி, சென்னை–600001 ❑முதல் பதிப்பு: ஜுலை 2008 ரஜப் 1429 ❑பக்கங்கள்: 112 ❑கணிணி அச்சாக்கம்: அஹத் கிராஃப்வே, மதுரை ❑அச்சு: ஸாஜிதா அச்சகம், சென்னை ❑விலை: ரூபாய் 35.00

Price: Rs ***35.00***

❑Title of the Book: Adham AS
❑Compiled By: Moulawi Syed Abdur Rahman Umari
❑First Edition : July 2008 - Rajab 1429 ❑Published by: Sajidha Book Centre, 248, ThambuChetty Street, First Floor, Chennai-1
❑Pages :96 ❑Price: Rs.**35.00**

பதிப்புரை

வான்மறை குர்ஆன் பல்வேறு வரலாற்றுச் சம்பவங்களைப் பற்றி கூறுகின்றது. போகிறபோக்கில் சொல்லிவிட்டுச் செல்கின்ற கதைகளாக இல்லாமல் இறைநம்பிக்கையை மனதில் தேக்கியுள்ள முஃமின்களுக்கு உத்வேகமூட்டும் அவர்களை மேலும்மேலும் உழைக்கத்தூண்டும் கிரியாஊக்கியாக திகழுகின்றன.

வரலாற்றுச் சம்பவங்களில் இருந்து எவற்றை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியும் குர்ஆன் குறிப்பிடுகின்றது. மூஸா அலைஹிஸ் ஸலாமுக்கு ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அண்ணனா தம்பியா என்றெல்லாம் யோசித்துக்கொண்டு காலத்தைக் கழிப்பதை குர்ஆன் ஆதரிக்கவில்லை.

ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய வரலாற்றை குர்ஆன் கற்றுக் கொடுக்கும் முறையிலேயே இங்கு வாசகர்களுக்கு அளித்துள்ளோம். நேர்வழிகாட்ட வந்த நூல் என்றால் நாம் வாழும் இன்றைய வாழ்க்கைக்கு அது பயனளிக்கவேண்டும். வெறுமனே சம்பவங்களின் கோர்வையாக இருந்தால் அதனால் நமக்கு எந்தப்பயனுமில்லை. அவ் வகையில் குர்ஆன் வடிவில் ஒரு பேரருளையே நாம் பெற்றுள்ளோம்.

இஸ்லாமியப் பணியாற்ற எமக்கு கிடைத்த இவ்வாய்ப்பைக் கொண்டு மறுமையில் அல்லாஹ்விடமிருந்து நற்கூலியை எதிர்பார்க்கிறோம். இந்நூலை விரைவாக எழுதிக்கொடுத்து உதவிய சகோதரர் அப்துர் ரஹ்மான் உமரி அவர்களுக்காக இறைவனிடம் துஆ செய்கிறோம். அல்லாஹ் அவருடைய பணியை அங்கீகரிப்பானாக!. அவருடைய பாவங்களை மன்னிப்பானாக!.

முஹம்மத் ஜகரிய்யா
ஸாஜிதா புக் சென்டர்
சென்னை

முன்னுரை

‘‘இறைவனுக்குக் கீழ்ப்படிகின்ற முஸ்லிமான ஆண்களுக்கும் இறைவனுக்குக் கீழ்ப்படிகின்ற முஸ்லிமான பெண்களுக்கும் இறைநம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் கட்டுப்படுகின்ற ஆண்களுக்கும் கட்டுப் படுகின்ற பெண்களுக்கும் நேர்வழி நிற்கின்ற ஆண்களுக்கும் நேர்வழி நிற்கின்ற பெண்களுக்கும் பொறுமையாளர் களான ஆண்களுக்கும் பொறுமையாளர்களான பெண்களுக்கும் இறைவனுக்கு பயப் படுகின்ற ஆண்களுக்கும் இறைவனுக்கு பயப்படுகின்ற பெண் களுக்கும் தானதருமங்கள் செய்கின்ற ஆண்களுக்கும் தானதருமங்கள் செய்கின்ற பெண்களுக்கும் நோன்பு நோற்கின்ற ஆண்களுக்கும் நோன்பு நோள்கின்ற பெண்களுக்கும் தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்கின்ற ஆண்களுக்கும் தமது கற்பைப் பாதுகாத்து கொள்கின்ற பெண்களுக்கும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருகின்ற ஆண் களுக்கும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருகின்ற பெண்களுக் கும் மன்னிப்பையும் மாண்புமிக்க கூலியையும் அல்லாஹ் சித்தப் படுத்தி வைத்துள்ளான்’’ (அல்குர்ஆன் 33:35).

‘‘பெண்களுக்கு இஸ்லாம் உரிமைகள், நவீனமானவையா? காலங் கடந்தவையா?’’ என்பது நமக்கான தலைப்பு.

தலைப்பைப் பற்றி பர்க்கும்முன் அதிலுள்ள வார்த்தைகளின் பொருளை விளங்கிக் கொள்வோம். ஆக்ஸ்போர்ட் அகராதி ‘பெண் ணுரிமை’ (Women's Rights) என்றால் ‘மற்றவர்களுக்கு இருப்பதைப் போன்றே பெண்களுக்கும் சமூக, சட்ட உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது!’ என வரையறுக்கின்றது. Modernize என்றால் ஆக்ஸ் போர்ட் அகராதியின்படி ‘நவீனப்படுத்துவது, புதிய ரசனைக்கு ஏற்ப வார்ப்பது, நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப இணங்கிச் செல்வது’ எனப்பொருள்.

வெப்ஸ்டர் அகராதியின்படி ‘நவீனப்படுத்துவது, புதிய வடிவத்தை வழங்குவது, உதாரணமாக கருத்துகளுக்கு புதிய வடிவம் கொடுப்பது’

எனப் பொருளாகின்றது.

ஆக, நவீனத்துவம் என்றால், ‘புதிதாக கற்றுக்கொண்ட அறிவிற்கு இணங்க தற்காலத்தைய சூழ்நிலையை சிறப்பானதாக உருவாக்க செய்யப்படும் முயற்சியே நவீனத்துவம் ஆகும்!’. தற்போது நாம் காணும் இந்த சூழல் மட்டுமே ‘நவீனத்துவம்’ ஆகாது.

இப்போது நமக்கு முன்னால் உள்ள கேள்வி என்னவென்றால், நம்முடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும் மனிதகுலம் முழுமைக்கும் புதியதெரு வாழ்வியல் திட்டத்தை வழங்குவதற் காகவும் ‘நவீனத்துவத்தை’ கைக்கொள்ளலாமா, கூடாதா? என்பதே!.

இங்கு நான் புதிய கொள்கைகளைப் பற்றியும் புதிய சித்தாந்தங் களைப் பற்றியும் எதுவும் குறிப்பிட விரும்பவில்லை. அறைகளில் வசதியாக அமர்ந்துகொண்டு கருத்துகளை உருவாக்கி உலகிற்கு வழங்கும் நவீன சிந்தனையாளர்கடிளப் பற்றியும் இங்கு நான் எதுவும் குறிப்பிட விரும்பவில்லை. அவர்களுக்கும் செயல் உலகுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கின்றது.

செயல் வடிவில் எதையும் நிரூபித்துப் பார்க்க நினைக்காமல் குளிரூட்டப்பட்ட அறைகளில் உட்கார்ந்துகொண்டு தங்களுடைய சித்தாந்தங்களை உருவாக்குகிறார்கள். அவற்றின் அடிப்படையில் பெண்கள் தங்களுடைய வாழ்க்கை எப்படியெல்லாம் அமைத்துக் கொள்ளவேண்டும் என்று தீர்ப்பு வேறு வழங்குகிறார்கள்.

செயல் உலகில் சாதித்துக்காட்டப்பட்டஅனுபவங்களின் அடிப் படையில் திட்டவட்டமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு நான் என்னுடைய கருத்தை நிரூபிக்க ஆசைப்படுகிறேன்.

ஒரு சித்தாந்தம் உண்மையிலேயே சிறந்ததா? நல்ல விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதா? என்பதை அதனுடைய மின்னும் கவர்ச்சி யான தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடாமல் செயல் உலகில் அது சாதித்துக்காட்டிய சாதனைகளைக்கொண்டுதான் மதிப்பிட வேண்டும். அதில் என்ன உள்ளது என்பது அப்போதுதான் தெரியும்.

நாம் நம்முடைய கொள்கைகளை உரைகல்லில் உரசிக்கொண்டே இருக்கவேண்டும். இல்லையென்றால் அவை நம்மை வழிகேட்டுக்கு வெகு எளிதாக அழைத்துச் சென்றுவிடும். ஒருகாலத்தில் மிகப்பெரிய சிந்தனையாளர்களும் ‘உலகம் தட்டையானது’ என்றே நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

‘பெண்களுக்கு இஸ்லாம் என்னென்ன உரிமைகளை’

வழங்குகின்றது என்பதை மேற்குலகமும் பத்திரிகைகளும் முன்னிலைப்படுத்தும் இஸ்லாமை மனதில்கொண்டு நீங்கள் ஆராயப் புகுந்தால் கண்டிப்பாக 'அவ்வுரிமைகள் இப்போது தேவைப்படாத காலங்கடந்த உரிமைகளே! என்ற முடிவிற்குத்தான் வருவீர்கள். அவர்கள் காட்டும் விளக்கைக்கொண்டு இஸ்லாத்தை நீங்கள் பார்த்தால் அம்முடிவிற்குத்தான் வரவேண்டியிருக்கும்.

உண்மை நிலவரம் என்னவென்றால், 'பெண்களுக்கான விடுதலை' எனும் அழகான போர்வையில் பெண்களை அவமானப்படுத்தும் செயல்களும் அவளை அசிங்கப்படுத்தும் காரியங்களும் அவளுடைய உயிரையும் ஆன்மாவையும் ஒழித்துக்கட்டும் செயல் களும்தான் மேலை நாடுகளில் நடக்கின்றன!.

பெண்களுக்கு அவர்களுக்கான உரிமைகளை வழங்குங்கள் என்று மேற்குலகம் இஸ்லாதிதிடம் பரிந்துரைக்கின்றது. ஆனால், அவர்கள் உலகில் என்ன நடக்கின்றது? பெண்களுக்கு அவர்கள் என்ன வழங்கியிருக்கிறார்கள்?. யதார்த்தத்தில் பெண்களை அவர்கள் 'கால் கோர்ள்களாகவும்' 'தாசிகளாகவும்' மாற்றியிருக்கிறார்கள். ஆண்கள் நினைத்தபடி அனுபவிக்கப்படுகின்ற போகப்பொருட்களாக அவர்களை மாற்றியிருக்கிறார்கள். கலை, கலாச்சாரம் என்ற அழ கழகான போர்வைகளை போர்த்திமூடி, எந்நேரமும் கலவியைத்தேடி அலைகின்ற, ஆபாசத்தை வியாபாரமாக்கி சம்பாதிக்க நினைக்கின்ற வெறியர்களின் கைப்பொம்மைகளாக மாற்றியிருக்கிறார்கள். பெண்களுக்கு அதைப்பற்றிய உணர்வே எழாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

இஸ்லாம் என்ன செய்தது?. இன்றைக்கு ஆயிரத்து ஐநூறு ஆண்டு களுக்கு முன்னால் 'அறியாமைக் காலத்தில்' புரட்சிகரமான மாற்றங் களை இஸ்லாம் கொண்டுவந்தது. பெண்களுக்கு அவர்களுடைய உண்மையான உரிய உரிமைகளைப் பெற்றுத்தந்தது. அவர்களுக் கான இடத்தை போராடிப் பெற்றளித்தது.

தொடக்க காலத்தில் இருந்தே இஸ்லாம் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. பெண்களைக் குறித்து நம்முடைய சிந்தனை களையும் நம்முடைய எண்ணங்களையும் நம்முடைய உணர்வுகளை யும் நம்முடைய வாழ்க்கை முறைகளையும் மேம்படுத்தவேண்டும். சமூகத்தில் பெண்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்பதே இஸ்லாத்தினுடைய தொடர்முயற்சி ஆகும்.

நம்முடைய தலைப்பை நாம் காணும் முன் ஒருசில அடிப்படைக் குறிப்புகளை மனதில் கொள்ளவேண்டும்.

இன்று உலகின் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு முஸ்லிம்கள் ஆவர்.

வெவ்வேறு சமூக அமைப்புகளில் முஸ்லிம் சமுதாயம் பிரிந்துள்ளது. அவ்வனைத்து சமூகங்களின் வாழ்க்கை முறையும் கண்டிப்பாக மாறுபடவே செய்யும். சில சமூகங்களில் இஸ்லாமிய அடிப்படையிலான வாழ்க்கை முறை கடைப்பிடிக்கப் படுகின்றது, என்றால் சில சமூகங்கள் இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் பற்றி கவலையே படுவதில்லை.

‘இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள்’ என்ன? என்பதை நாம் முஸ்லிம் சமூகங்களில் இன்று நிலவும் போக்கைக்கண்டு தீர்மானிக்க இயலாது. இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படை ஆதாரங்களைக் கொண்டே தீர்மானிக்க இயலும்.

திருக்குர்ஆனும் நபிமொழிகளும்தான் இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படை ஆதாரங்கள் ஆகும். இறைவனால் வழங்கப்பட்ட வேதம் குர்ஆன் ஆகும். இறைவனின் தூதரான முஹம்மத் அவர் களுடைய பொன்மொழிகளும் செயல்வழிகளும் நபிமொழிகள் ஆகும். நபிமொழிகளை சுருக்கமாக நாம் ஸுன்னத் என்கிறோம்.

குர்ஆனில் முரண்பாடுகள் கிடையவே கிடையாது. அவ்வாறே நபி மொழிகளிலும் முரண்பாடுகள் கிடையாது. அவ்விதமே குர்ஆனும் ஊர்ஜிதமான நபிமொழிகளும் முரண்படுவது கிடையாது.

சில சமயங்களில் ஏதேனும் விஷயத்தைப் பற்றி மார்க்க அறிஞர் களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. குர்ஆன் மற்றும் ஸுன்னாவுடைய அடிப்படைப் போதனைகளை ஒட்டு மொத்தமாக முன்வைத்துப் பார்த்தால் அவ்வேறுபாடுகளை வெகு எளிதாக களைந்துவிடமுடியும்.

ஓரிடத்தில் சாராம்சத்தை மட்டும் சொல்லிவிட்டுச் சென்றாலும் இன்னோர் இடத்தில் அதனை விரிவுபடுத்தி விளக்கிவிடுவது குர்ஆனின் முறையாகும். ஒரு விஷயத்தைப் பற்றி குர்ஆன் என்ன சொல்கின்றது என்பதை முழுமையாக அறிய வேண்டுமென்றால் அவ்விஷயம் தொடர்பாக பல்வேறு இடங்களிலும் அது கூறியுள்ள எல்லா கருத்துகளையும் ஒன்றாகத் தொகுத்தே நாம் முடிவு செய்ய வேண்டும். ஒருசிலர் அவ்வாறு செய்யாமல் ஏதேனும் ஒரு பகுதியில்

இருந்து இறைவசனங்களை எடுத்துக்காட்டி தங்களுடைய கூற்றுக்கு ஆதாரம் சேர்க்க முயல்கிறார்கள். இது தவறான நடைமுறையாகும்.

அல்லாஹுதஆலாவின் திருப்பொருத்தத்தை அடைய முயற்சிக்க வேண்டும்; தம்முடைய உலக வாழ்க்கையை இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ளவேண்டும்; தம்முடைய ஆன்மாவை திருப்திப் படுத்தவேண்டும்; வெறுமனே புகழ்ச்சிக்காக எந்த காரியத்தையும் செய்யக்கூடாது; அதாவது தற்பெருமைக்கு மனதில் ஒருசிறிதும் இடம் கொடுத்துவிடக்கூடாது --- இவை அனைத்தையும் ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் மனதில் கொண்டு செயல்படவேண்டும்.

இஸ்லாம் ஆண்களுக்கு இணையான உரிமைகளை பெண்களுக்கும் வழங்குகின்றது. ஆனால், இவை சம உரிமைகள் கிடையாது.

இஸ்லாமிய போதனைகளின்படி பார்த்தால் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பூர்த்தி செய்துகொள்ளக் கூடியவர்கள். அவர்களிடையே பங்களிப்பு நிலவ வேண்டும். தத்தமது கடமைகளை அவர்கள் இஸ்லாமிய அடிப்படையில் நிறைவேற்ற முன்வராவிட்டால் அவர்களிடையே இணக்கமும் நிலவாது; முன்னேற்றமும் ஏற்படாது.

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகளை ஆராய்வதற்காக அவற்றை நாம் ஆறு தலைப்புகளில் வகைப்படுத்துகிறேன். அவையாவன:-

(1) ஆன்மீக உரிமைகள்

(2) பொருளாதார உரிமைகள்

(3) சமூக உரிமைகள்

(4) கல்வி உரிமைகள்

(5) சட்ட உரிமைகள்

(6) அரசியல் உரிமைகள்

இவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம்.

இஸ்லாமிய சகோதரன்

ஜாகீர் நாயக்

1. சமய, ஆன்மீக உரிமைகள்

ஏராளமான உரிமைகளை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருந் தாலும் சமய, ஆன்மீக உரிமைகளை மட்டும் முதலில் காண்போம்.

மேற்குலகில் இஸ்லாமைக்குறித்து பல்வேறு தவறான கருத்துகள் நிலவிவருகின்றன. அவற்றில் ஒன்று சொர்க்கம் தொடர்பானது. சொர்க்கம் என்பது ஆண்களுக்கே மட்டுமே உரியது; அங்கே பெண் களுக்கு எந்த வேலையும் இல்லை; பெண்களால் சொர்க்கத்துக்குள் நுழையவே முடியாது. இத்தகைய எல்லா கருத்துகளையும் இஸ்லாம் நிராகரிக்கின்றது. இவற்றை மறுக்கும் ஏராளமான வசனங்களை குர்ஆனில் நாம் காணமுடியும்.

ஆண்களிலும் பெண்களிலும் இறைநம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல்களை யார் செய்கிறார்களோ அவர்கள் அனைவருமே சொர்க்கத்தில் நுழைவார்கள். அவர்கள் எள்ளளவும் வஞ்சிக்கப்பட் மாட்டார்கள். (அல்குர்ஆன் 4:124).

திருமறை குர்ஆனில் வேறோர் இடத்திலும் இதேபோன்றதொரு வசனம் காணப்படுகின்றது. அங்கே இறைவன் கூறுகிறான்:-

''நல்ல செயலை செய்தவர் - அவர் ஆணாக இருந்தாலும் சரியே, பெண்ணாக இருந்தாலும சரியே, இறைநம்பிக்கை கொண்டவராக இருந்தால் அவர் தூய்மையான வாழ்க்கையை வாழச்செய்வோம்; அவர்கள் செய்த சிறந்த செயல்களுக்கு ஏற்ப நிறைவான கூலியை மறுமையில் அவர்களுக்கு வழங்குவோம்''. (அல்குர்ஆன் 16:97).

ஆணாக இருப்பதோ பெண்ணான இருப்பதோ சொர்க்கத்திற்கு செல்ல காரணமாக அமையாது. சொர்க்கத்துக்கு போக வேண்டு மென்றால் முஃமினாக இருக்கவேண்டும் என்றே இஸ்லாம் சொல் கின்றது. இஸ்லாமிய போதனைகள் காலங்கடந்தவை; நவீன காலத் திற்கு பொருந்தி வராதவை என்று இப்போது கூறமுடியுமா?

பெண்களுக்கு ஆன்மா இருக்கின்றதா? இல்லையா? பெண்களுக்கு

ஆன்மா இல்லை என்றே இஸ்லாம் சொல்கின்றதாக மேற்குலகின் ஊடகங்கள் சித்தரித்து வருகின்றன. பெண்களுக்கு ஆன்மா என்பதே கிடையாது என்று கிறிஸ்துவம்தான கூறுகின்றது. ஆனால், இஸ்லாமும் அவ்விதமே கூறுவதாக மக்கள் தொடர்பு சாதனங்கள் தொடர்ந்து கூறிவருகின்றன.

கிபி.பதினாறாம் நூற்றாண்டில் ரோமதேசத்தில் கூடிய கிறிஸ்துவ அறிஞர் பெருமக்கள் பெண்களுக்கு ஆன்மாவே இல்லை என்ற ஒருமித்த கருத்துக்கு வந்தனர். (இந்த கருத்துக்கு ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய போதனைகளில் இடமே இல்லை என்றுதான் முஸ்லிம்கள் கருதுகிறார்கள்).

இஸ்லாமைப் பொருத்தவரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்தவிதமான பாகுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மை! திருக்குர்ஆனின் அத்தியாயம் அந்நிஸாவின் முதல் வசனத்திலேயே அது தெளிவாக்கப்பட்டுள்ளது.

‘‘மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த அந்த இறைவனுக்கே பயப்படுங்கள். அந்த ஆன்மாவிலிருந்து அவன் அதனுடைய துணையைப் படைத்தான்; பிறகு, அவர்களிலிருந்து நிறைய ஆண்களையுட் பெண்களையும் படைத்தான். எந்த அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி நீங்கள் உங்கள் உறவுகளிடையே சத்தியம் செய்து கொள்கிறீர்களோ அந்த அல்லாஹ்வுக்கே பயப் படுங்கள். அவனோ உங்கள் அனைவரையும் கண்காணித்துக் கொண்டே உள்ளான்’’. (அல்குர்ஆன் 4:1).

அல்லாஹ¯த் தஆலா வேறோர் இடத்தில் கூறுகையில்...

‘‘உங்களில் இருந்தே உங்களுடைய துணைகளை அவன் உண்டாக்கினான். உங்களுடைய துணைகளில் இருந்து மகன்களை யும் பேரன்களையும் உண்டாக்கினான். தூய்மையான பொருட்களை உங்களுக்கு உணவாகக் கொடுத்தான்’’. (அல்குர்ஆன் 16:72).

இன்னுமோரிடத்தில் கூறுகையில்...

‘‘வானங்களையும் பூமியையும் முதன்முதலில் உண்டாக்கியவனே, உங்களில் இருந்து உங்களுடைய துணைகளை ஏற்படுத்தினான். கால்நடைகளிலும் இணைகளை ஏற்படுத்தினான். இவ்வாறாக, உங்களுடைய இனத்தை பெருகச் செய்கிறான். இந்த அகிலத்தில் எந்தப் பொருளும் அவனுக்கு இணையாக இல்லை. யாவற்றையும்

கேட்பவனாகவும் எல்லாவற்றையும் அறிபவனாகவும் அவன் உள்ளான்". (அல்குர்ஆன் 42:11).

ஆண்களுக்கு மட்டும் ஆன்மா உண்டு, பெண்களுக்கு ஆன்மாவே கிடையாது என்ற வகையிலான பாகுபாட்டை எல்லாம் இஸ்லாம் சொல்லவுமில்லை; அவ்வாறு கருதவுமில்லை என்பதை மேற்கண்ட இறைவசனங்களிலிருந்து விளங்கிக் கொண்டோம். இஸ்லாமியப் போதனைகளில் நவீனம் இருக்கின்றதா? இல்லை, பழங்கால சட்டங்களா என்பதை இப்போது நீங்களே முடிவு செய்து கொள்ள லாம். முதல்மனிதர் ஆதமை படைத்தபோது நடந்தவற்றை இறைவன் கூறும்போது...

"என்னுடைய கைகளால் அவரைப்படைத்து அவரில் என்னுடைய ரூஹை அதாவது உயிர்மூச்சை ஊதியவுடன் நீங்கள் அனைவரும் நெடுஞ்சாண்கிடையாக ஸஜ்தாவில் விழுந்துவிடவேண்டும்". (அல்குர்ஆன் 15:29) என வானவர்களிடம் இறைவன் அறிவித்தான்.

இதே விஷயத்தை அத்தியாயம் ஸஜ்தாவில் கூறும்போது,

"அவன் அ(ம்முதல் மனிதரான ஆதம் என்ப)வரை செம்மையாக உருவாக்கி அவரில் தன்னுடைய ரூஹையும் ஊதினான். உங்களுக்காக செவித்திறனையும் கண்களையும் இதயத்தையும் உண்டாக்கினான். ஆனால், நீங்களோ மிகவும் குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்". (அல்குர்ஆன் 32:9).

இந்த வசனங்களில் ரூஹை அதாவது உயிர்மூச்சை ஊதினான் என்று கூறப்பட்டுள்ளதைப் பார்த்து யாரும் தவறான முடிவுக்கு வந்துவிடக் கூடாது. இறைவன் முதல் மனிதரின் உடலில் தன்னை வெளிப் படுத்தினான் என்றோ, அவதரித்தான் என்றோ அர்த்தம் கொள்ளக் கூடாது. தனிப்பட்ட கவனமும் அக்கறையும் கொண்டு தன்னுடைய நேரடிப்பார்வையில் முதல் மனிதரை இறைவன் உண்டாக்கினான் என்பதையே இங்கு குர்ஆன் சொல்லவருகின்றது. அல்லாஹ்வுத் தஆலாவுடைய அந்த ஆற்றலையும் வல்லமையையும் மனதில் கொண்டால் எத்தனைய மனிதனும் இறைவனை நெருங்க முடியும்.

ஆக, எந்த ரீதியில் ஆராய்ந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு கிடையாது. ஆதம், ஹவ்வா இரண்டுபேரையும் குறித்துத் தான் குர்ஆன் பேசுகின்றது. இருவரையும் சரிசமமாக வைத்தே பேசு கின்றது.

அவ்வாறே பூமிப்பரப்பின் மீதாக மனிதனுக்கு இறைவனுடைய பிரதிநிதித்துவமாகிய கிலாஃபத் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் என்ற இனத்துக்குத்தான் இந்தச் சிறப்பு வழங்கப்பட்டுள்ளது.

''ஆதமுடைய சந்ததியை நாம் கண்ணியப்படுத்தினோம்; அவர்களை நிலத்திலும் நீரிலும் சுமந்து சென்றோம்; தூய்மையான பொருள்களிலிருந்து அவர்களுக்கு உணவையும் வழங்கினோம்; நாம் படைத்த உயிர்கள் அனைத்தையும் விட அவர்களுக்கு மேலான சிறப்பை வழங்கினோம்". (அல்குர்ஆன்17:70).

ஆதமுடைய சந்ததி - அது ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம்- இருபாலருக்கும் இங்கே கூறப்பட்டுள்ள சிறப்புகள் பொருந்தும்.

வேறு ஒரு கோணத்தில் இருந்தும் நாம் இந்த பிரச்சனையை ஆராயலாம். உலக மனிதர்கள் வேதம் எனக் கருதும் சில நூற்களில் சொர்க்கத்தில் இருந்து ஆதம் வெளியேற்றப்பட்டதற்கும் ஆதமுடைய வீழ்ச்சிக்கும் அந்தப் பெண்ணான ஹவ்வாதான் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக பைபிளில், சொர்க்கப் பூங்காவில் இருந்து ஆதம் வெளியேறியதற்கு பெண்தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு முற்றிலும் நேர்மாற்றமான கருத்தையே இஸ்லாம் முன்வைக்கின்றது.

நீங்கள் குர்ஆனைவாசித்துப் பார்த்துர்கள் என்றால் பல இடங்களில் இவ்வரலாற்றைப் பற்றி கூறப்பட்டுள்ளதைக் காணலாம். உதாரண மாக, அத்தியாயம் அஃராஃபின் பத்தொன்பதாம் வசனத்தில் இதைக் காணலாம். ஆதமையும் ஹவ்வாயையும் ஒரெ இடத்தில் வைத்துத்தான் இவ்விடங்களில் கூறப்பட்டுள்ளது. இருவருமே தவறிழைத்தனர். இருவருமே தமது தவறுக்கு வருந்தி பாவமன்னப்பு கோரினர். இரு வரையும் ஒருசேர அல்லாஹ் மன்னித்தான்

இவற்றைப் படித்தகையோடு நீங்கள் பைபிளுடைய தொடக்கநூல் (ஆதியாகம்) மூன்றாவது அத்தியாயத்தை வாசித்தும் பாருங்கள். நடந்த சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் ஹவ்வாவையே பொறுப் பாக்கி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளதைக் காண்பீர்கள். ஹவ்வா குற்றவாளி என்று சொன்னதோடு நிற்காமல் அனைத்து மனிதர்களும் பிறவியிலேயே குற்றவாளிகள் என்ற சித்தாந்தத்தையும் உருவாக்கினர்.

16. அவர் பெண்ணிடம்,
'உன் மகப்பேறின் வேதனையை
மிகுதியாக்குவேன்.
வேதனையில் நீ குழந்தைகள்
பெறுவாய்.
ஆயினும் உன் கணவன் மேல் நீ
வேட்கை கொள்வாய்.
அவனோ உன்னை ஆள்வான்'
என்றார். (தொடக்க நூல் அத்தியாயம் மூன்று).

சொர்க்கத்தில் இருந்து வெளியேறியதற்கு காரணமே பெண்தான்! அதற்காகத்தான் அவளுக்கு மகப்பேற்றின் துன்பம் கொடுக்கப்படுகின்றது. பெண் என்பவள் எந்த அளவுக்கு கீழ்த்தரமாகவும் அவமானப் பிறவியாகவும் சித்தரிக்கப்படுகிறாள் என்பதற்கு இந்த ஓர் உதாரணமே போதும். மறுபக்கம் அதே வேதனையைப் பற்றிக் கூறும் குர்ஆன் பெண்ணின் பெருமைக்கும் மேன்மைக்கும் அதை குறியீடாக்குகின்றது. கீழ்வருகின்ற இறைவசனங்களை வாசித்துப் பாருங்களேன்.

''மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த அந்த இறைவனுக்கே பயப்படுங்கள். அந்த ஆன்மாவிலிருந்து அவன் அதனுடைய துணையைப் படைத்தான்; பிறகு, அவர்களிலிருந்து நிறைய ஆண்களையும் பெண்களையும் படைத்தான். எந்த அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி நீங்கள் உங்கள் உறவுகளிடையே சத்தியம் செய்து கொள்கிறீர்களோ அந்த அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். அவனோ உங்கள் அனைவரையும் கண்காணித்துக் கொண்டே உள்ளான்''. (அல்குர்ஆன் *4:1*).

''பெற்றோரின் உரிமைகளைப்பேணி நடக்குமாறு நாம் மனிதனுக்கு உபதேசித்துள்ளோம். அவனுடைய தாயோ பலவீனத்தின் மீது பலவீனத்தைச் சுமந்தவனாக அவனை வயிற்றிவ் சுமந்தாள். பால்குடி மறப்பதற்கோ இரண்டு வருடங்கள் ஆகிப்போனது. (இதன் கரணமாகவே) எனக்கு நன்றி செலுத்துமாறும் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்துமாறும் (அவனுக்கு உபதேசித்தோம்) என்னிடமே (ஒருநாள்) நீ மீண்டு வரவேண்டியிருக்கும்''. (அல்குர்ஆன் *31:14*).

''பெற்றவர்களிடம் ரெுந்தன்மையொடு நடந்துகொள்ளுமாறு நாம் மனிதனுக்கு உபதேசித்தோம். அவனுடைய தாய் கஷ்டப்பட்டு அவனை கருவில் சுமந்திருந்தாள்; கஷ்டப்பட்டு அவனை

பிரசவித்தாள்; கருவில் சுமந்த காலமும் பால்குடி காலமும் முப்பது மாதங்களாம்!'' (அல்குர்ஆன் 46:15).

தாய்மை அடைவதை இஸ்லாம் எந்த அளவுக்கு பெருமையாகக் கருதுகின்றது என்பதை மேற்கண்ட வநகஹனத்தின் மூலம் அறியலாம். இதன் காரணமாகவே பெண்ணை மிக உயர்வான இடத்தில் இஸ்லாம் வைக்கின்றது. இவற்றைப் படித்த பின்பு உக்ளுடைய மனதில் என்ன தோன்றுகின்றது? பெண்களுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகள் யாவும் காலங்கடந்தவை என்று எண்ணத் தோன்றுகின்றதா?.

அல்லாஹ்விடத்தில் கண்ணியத்தையும் மதிப்பையும் பெற வேண்டுமென்றால் இறையச்சம் கட்டாயம் தேவை. இறையச்சம் உடையவர்களே இறைவனிடத்தில் கொளரவம் பெறுகிறார்கள். அல்குர்ஆன் இதை வெகுஅழகாக விளக்குகின்றது.

''ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து, மனிதர்களே! நாம் உங்களைப் படைத்தோம். பின்பு நீங்கள் ஒருவரையொருவர் அறிமுகப் படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக, உங்களை குலங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் யார் அனைவரையும் விட அல்லாஹ்வுக்கு அதிகமாக பயப்படுகிறாரோ அவரே உண்மை யில் அல்லாஹ்விடம் மதிப்பைப் பெற்றவராவார்!. அல்லாஹ¬த் தஆலாவோ அனைத்தையும் அறிந்தவனாகவும் யாவற்றையும் உணர்ந்தவனாகவும் உள்ளான்'' (அல்குர்ஆன் 48:13).

பிறந்த இனமோ, குலமோ, நிறமோ, பேசும் மொழியோ, ஈட்டிய செல்வமோ கண்ணியத்தைப் பெற்றுத்தராது. அல்லாஹ்விடம் கண்ணியத்தைப் பெறவேண்டுமென்றால் ஒரே ஒரு பொருள் இருந்தால்தான் முடியும். அதுவே இறையச்சம் அதாவது தக்வா!. நீங்கள் பிறந்த இனத்தின் காரணமாக நீங்கள் அல்லாஹ்விடம் தகுதி யையும் பெற மாட்டீர்கள்; தண்டனையையும் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

வேறோரிடத்தில் குர்ஆன் முழங்குதைக் கேளுங்கள்.

''அவர்களுடைய இறைவன் அவர்களுக்கு பதிலுரைத்தான்: ஆணோ பெண்ணோ உங்களில் யார் நற்செயல் புரிந்தாலும் அதனை நான் ஒருக்காலும் அழித்துவிட மாட்டேன். அவர்கள் ஒருவருக் கொருவர் உறுதுணையாகத் திகழ்கிறார்கள். இன்னும் யார்யாரெல் லாம் சொந்தஇடம் துறந்து புலம்பெயர்ந்தனரோ, தங்களுடைய

வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனரோ, என்னுடைய பாதையில் துன்பங்களையும் தொல்லைகளையும் சகித்துக் கொண்டனரோ, போராடினரோ, கொலை செய்யப்பட்டனரோ அவர்கள் செய்த குற்றங்களை எல்லாம் அவர்களை விட்டு நான் அகற்றி விடுவேன்; நீரோடைகள் கீழோடும் சொர்க்கத்தில் அவர்களை நுழைவிப்பேன். அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கான வெகுமதியாகும் இவை!. அல்லாஹ்விடமோ அழகிய வெகுமதிகள் உள்ளன". (அல்குர்ஆன் 3:195).

இன்னும் கேளுங்கள்:-

"இறைவனுக்குக் கீழ்ப்படிகின்ற முஸ்லிமான ஆண்களுக்கும் இறைவனுக்குக் கீழ்ப்படிகின்ற முஸ்லிமான பெண்களுக்கும் இறை நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் கட்டுப்படுகின்ற ஆண்களுக்கும் கட்டுப்படுகின்ற பெண்களுக்கும் நேர்வழி நிற்கின்ற ஆண்களுக்கும் நேர்வழி நிற்கின்ற பெண்களுக்கும் பொறுமையாளர்களான ஆண்களுக்கும் பொறுமை யாளர்களான பெண்களுக்கும் இறைவனுக்கு பயப்படுகின்ற ஆண் களுக்கும் இறைவனுக்கு பயப்படுகின்ற பெண்களுக்கும் தான தருமங்கள் செய்கின்ற ஆண்களுக்கும் தானதருமங்கள் செய்கின்ற பெண்களுக்கும் நோன்பு நோற்கின்ற ஆண்களுக்கும் நோன்பு நோள்கின்ற பெண்களுக்கும் தமது கற்பைப் பாதுகாத்துக்கொள்கின்ற ஆண்களுக்கும் தமது கற்பைப் பாதுகாத்து கொள்கின்ற பெண் களுக்கும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருகின்ற ஆண் களுக்கும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருகின்ற பெண் களுக்கும் மன்னிப்பையும் மாண்புமிக்க கூலியையும் அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்துள்ளான்" (அல்குர்ஆன் 33:35).

ஒழுக்கக் கடமைகள் ஆகட்டும்; ஆன்மீக விஷயங்களாகட்டும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இஸ்லாம் எற்தவிதமான பாகுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்பதையே இவ்வசனங்கள் அனைத்தும் ஒருசேர நின்று நமக்கு உணர்த்துகின்றன. அவ்விதமே அவர்கள் செய்தாகவேண்டிய கடமைகளிலோ அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளிலோ இஸ்லாம் எவ்வித பாகு பாட்டையும் வைக்கவில்லை. தொழுவதும் நோன்பு நோற்பதும் ஜகாத் கொடுப்பதும் ஆண்கள் மீது கடமையான உள்ளதைப் போலவே பெண்கள் மீதும் கடமையாக உள்ளது.

இருப்பினும், பெண்களுக்கென்று ஒருசில சிறப்புச் சலுகைகளை

கூடுதலாக இஸ்லாம் வழங்கியுள்ளது.

மாதந்தோறும் வரும் விடுமுறைக் காலங்களில் பெண்கள் தொழத் தேவையில்லை என்று இஸ்லாம் விடுவித்துள்ளது. அத்தொழுகைகள் அவர்கள் மீது கடமையாவதே இல்லை. அவ்வாறே, மாதவிடாய்க் காலங்களிலும் பிரசவத்தீட்டு காலங்களிலும் பெண்கள் நோன்பு வைக்கத் தேவையில்லை. வேறு ஏதாவது சமயங்களில் விடுபட்ட றோன்புகளை நோற்றுக் கொள்ளுமாறு கூறுகின்றது.

இவை அனைத்தையும் நான் உங்களுக்கு முன்னால் வைத்து விட்டேன். இப்போது நீங்களே சொல்லுங்கள். பெண்களுக்கு இஸ்லாம் வழங்குகின்ற உரிமைகள் காலங்கடந்தவையா? அல்லது இன்றும் தேவைப்படுகின்ற நவீன உரிமைகளா?.

2. பெண்களுக்கான பொருளாதார உரிமைகள்

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள ஆன்மீக உரிமைகளையும் ஒழுக்க உரிமைகளையும் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள சமய, மார்க்க உரிமைகளையும் சலுகைகளையும் கண்டுவந்தோம்.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளைப் பற்றி இந்த அத்தியாயத்தில் பார்ப்போம். இஸ்லாம் பெண்களுக்கு பொருளாதார விஷயத்தில் எற்த அளவுக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது என்றும் பார்ப்போம்.

நம்முடைய கவனத்தைக் கவருகின்ற முதல் விஷயம் இஸ்லாம் இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்நைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே பெண்களுக்கு ொருளாதார உரிமைகளை வழங்கி விட்டிருக்கின்றது என்பதே! பல்றேு வகைப்பட்ட உரிமைகளை அவை தமக்குள் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, ஒரு பெண் அவள் கல்யாணமாகாத கன்னிப் பெண்ணாகவும் இருக்கலாம், கல்யாணமான மங்கையாகவும் இருக்கலாம். சுயவிருப்பத்தில் தன்னுடைய சொத்தை தான் விரும்பிய வழியில் செலவழிக்கலாம்; விரும்பிய பொருட்களையோ, சொத்தையே, நிலத்தையோ வாங்கலாம். விற்கலாம். தனக்கு உரிமையான பொருளைக்கொண்டு ஓர் ஆண் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் ஒரு பெண் செய்யலாம். எல்லாவகையான உரிமையும் அவளுக்கு உண்டு!.

தன்னுடைய சொத்தை தான் நினைத்த வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம் எனும் உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வழங்கிவிட்டது. ஆனால், இவ்வுரிமையை பிரிட்டிஷ் அரசாங்கம் 1870 ஆம் ஆண்டில் தான் பெண்களுக்கு வழங்கியது.

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இவ்வுரிமையை

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிவிட்டதால் இவ்வுரிமையை காலங் கடந்த பழைள உரிமை என்றுகூட சொல்லலாம். ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வழங்கப்பட்டு விட்டதால் இவ் வுரிமை இன்று தேவையில்லை என்றாகிவிடுமா? காலம் கடந்ததாகி விடுமா? நவீன உலகத்தில் பெண்களுக்கு இவ்வுரிமை தேவையே இல்லாமல் போய்விடுமா?.

வேலைக்குச் சென்று வருமானம் ஈட்டுவதைப் பொருத்த மட்டிலும் இஸ்லாம் அவ்வுரிமையையும் பெண்களுக்கு வழங்கி யுள்ளது. வேலைக்கு போகக்கூடாது என்று எங்குமே குர்ஆனோ ஹதீதோ குறிப்பிடவே இல்லை. ஷரீஅத்தின் வட்டத்திற்குள் வேலை அமையவேண்டும்; ஷரீஅத் விரும்புகின்ற நடைமுறைகளைக் கைக்கொள்ளவேண்டும், அவ்வளவே!. அவற்றிலும் குறிப்பாக பர்தாவோடு வேலைக்குச் செல்லவேண்டும்.

ஆனால் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளவேண்டும். பெண் ணுடைய அழகையும் கவர்ச்சியையும் வெளிப்படுத்தும் எத்தகைய வேலையையும் இஸ்லாம் ஒருக்காலும் அனுமதிப்பதில்லை. நடிப்பு, நடனம், மாடலிங் அல்லது இவைபோன்ற வேறு வேலைகள். தன்னுடைய அழகையோ மென்மையையோ வெளிப்படுத்தி பிறரை ஈர்த்து சம்பாதிக்கும் எற்த வேலையானாலும் அதைச்செய்ய இஸ்லாம் அனுமதிப்தே இல்லை.

ஒருசில வேலைகளையே ஹராம்; செய்யக்கூடாது என்று இஸ்லாம் கட்டம் கட்டியுள்ளது. அவ்வேலைகளை ஆண்களே செய்யக்கூடாது. அப்படியிருக்கும்போது அவ்வேலைகளை பெண்கள் செய்வதற்கு கண்டிப்பாக அனுமதி இல்லை. மது வியாபாரம், சூதாட்டம், கிளப் போன்ற வேலைகள். இவற்றைச் செய்ய ஆண்களுக்கே அனுமதி கிடையாது.

தூய்மையானதோர் இஸ்லாமிய சமூக அமைப்பில் பலதரப்பட்ட வேலைகளை எளிதாக முஸ்லிம் பெய்கள் கைக்கொள்ள முடியும். மருத்துவத்துறையையே எடுத்துக் கொள்ளுங்களேன். பெண்களுக்கு மருத்துவம் பார்ப்பபதற்கு பெண்மருத்துவ நிபுணர்களும் பெண் நர்ஸ¬களும் நமக்குத் தேவைப்படுகிறார்கள். அவ்வாறே கல்வித் துறையிலும் பெண்களுடைய பங்களிப்பு மிக அதிகமாக தேவைப் படுகின்றது.

இன்னொரு பக்கம் பார்த்தீர்களென்றால் பொருளாதாரம் சார்ந்த எல்லாப் பொறுப்புகளையும் இஸ்லாம் ஆண்களின் மீதே சுமத்தி யுள்ளது. குடும்பம் நடத்தத் தேவையான வருமானத்தை ஈட்டுகின்ற பொறுப்பை ஆண்களின் மீது சுமத்தியுள்ளதே ஒழிய பெண்கள் மீது அப்பொறுப்பை இஸ்லாம் சுமத்தவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தன்னுடைய சொந்த வாழ்க்கையை நடத்தத் தேவையான பொருளைக்கூட அவள் தானாக ஈட்ட வேண்டிய தில்லை. ஒருவேளை சூழ்நிலை மாறிப்போய் வெளியே சென்று சம் பாதித்தே ஆகவேண்டும என்று கட்டாயத்திற்கு ஒரு பெண் தள்ளப் பட்டால் அவளை ஒருபோதும் இஸ்லாம் தடுத்து நிறுத்துவதில்லை.

முன்னே நாம் குறிப்பிட்ட வேலைகள் அல்லாமல் பெண்கள் வேறு பல வேலைகளையும் செய்யலாம். தன்னுடைய வீட்டில் இருந்த வாறும் அவள் பல்வேறு பணிகளை மேற்கொண்டு சம்பாதிக்கவும் செய்யலாம்.

தொழிற்சாலைகள், மற்ற அலுவலக வேலைகளைப் பொருத்த மட்டில் நாம் ஏற்கனவே குறிப்புட்ட இஸ்லாமிய வரம்புகளைக் கண்ப்பாக பேணியாகவேண்டும். அவ்வரம்புகளைப் பேணி சம்பாதிக்க முடியும் என்றால் இஸ்லாம் அனுமதிக்கவே செய்கின்றது. ஆண்களும் பெண்களும் வேலை செய்யும் பிரிவுகள் தனித்தனியாக இருக்கவேண்டும்; பர்தாவைக் கட்டாயம் பேணவேண்டும். ஆண் களும் பெண்களும் சமூக வாழ்வில் கலப்பதை ஒருபோதும் இஸ்லாம் வரவேற்பதில்லை!.

அவ்வாறே வியாபார வணிகத்துறைகளில் பெண்கள் ஈடுபடுவதை இஸ்லாம் தடைசெய்யவில்லை. எனினும், அந்நிய ஆண்களைச் சந்திக்க வேண்டும்; அவர்களோடு வியாபாரம் செய்தாகவேண்டும் அல்லவா?. அச்சமயங்களில் திருமண உறவு தடை செய்யப்பட்ட ஆண்களான தந்தை, மகன், கணவர் போன்றோரின் துணையையும் அவர்களது ஒத்தாசையையும் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்த நிபந்தனைகளோடு வியாபாரத்தில் ஒரு பெண் குறிப்பிட்ட அளவு ஈடுபட முடியும் என்றால் அதை இஸ்லாம் அனுமதிக்கின்றது.

முஃமின்களின் அன்னையான கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை நாம் இங்கு முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளலாம். மக்கா மாநகரில் அவர்கள் புகழ்பெற்ற வியாபாரப் பெண்மணியாக விளங்கினார்கள். ஆனால், அவர்களது வியாபாரத்தை அவர்கள்

சார்பாக அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்கொண்டு வந்தார்கள்.

நன்கு உன்னிப்பாக பார்த்தீர்கள் என்றால் குடும்பத்தில் பெண்ணுக் குரிய பொருளாதார பாதகாப்பை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஏற்கனவே சொலன்னதைப் போல சம்பாதிக்கும சுமையை பெண் ணின்மீது இஸ்லாம் சுமத்தவில்லை. குடும்பத்துத் தேவையான பொருளை சம்பாதிப்பதை இஸ்லாம் அக்குடும்ப ஆண்களின் மீதே விதியாக்கியுள்ளது.

திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணின் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பு அவளுடைய தந்தையையும் அவளுடைய சகோதரர்களையும் சார்ந்தது. தங்களால் முடிந்தவரை அவளுடைய தேவைகளை அவர்கள் நிறைவேற்றியே ஆகவேண்டும். திருமணத் திற்குப் பிறகு, இப்பொறுப்பு அவளுடைய கணவனைச் சேருகின்றது. அவளுக்குத் தேவையான உணவு, உடைகள், இருப்பிடம், அவளுடைய பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவற்றை அவளுடைய கணவன் செய்தே ஆகவேண்டும். கணவன் இறந்துவிட்டால் அவளுடைய மகன் இப்பொறுப்பை ஏற்கவேண்டும். பொறுப்புகளை சுமக்கவேண்டிய ஆண் ஒருவர் உயிரோடு இருக்கும்வரை எல்லாப் பொறுப்புகளையும் அவ்வாணே சுமந்தாக வேண்டும். அப்பெண் ணுக்கு எப்பொறுப்பும் கிடையாது. அவளாக இஷ்டப்பட்டு ஏதேனும் வேலை செய்து சம்பாதித்தாலும் அதை அந்தக் குடும்பத் திற்கு செலவு செய்யவேண்டும் என்ற அவசியம் கிடையாது. அவள் தான் சம்பாதித்ததை யாருக்கு வேண்டுமானாலம் கொடுக்கலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

கல்யாணத்தை எடுத்துக்கொண்டாலும் இஸ்லாமிய நியதிகள் சரியாக பின்பற்றப்படும் ஒரு திருமணத்தில் பெண்ணே பயனாளியாக இருக்கிறாள். அவள் தனக்குத் தேவையான மஹரை வரப்போகின்ற கணவரிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்கிறாள்.

‘‘மனப்பூர்வமாக பெண்ணுக்குத்தரவேண்டிய திருமணக் கொடையைக் கொடுத்துவிடுங்கள்! அவளான ஏதேனும் அதிலிருந்து உங்களுக்கு அளித்தால் அதை விருப்போடு அனுபவியுங்கள்’’ (அல்குர்ஆன் 4:4).

மஹர் என்று அழைக்கப்படும் திருமணக்கொடை இஸ்லாமில் முக்கியமானது. அது இல்லாமல் திருமணமே செல்லுபடியாகாது.

நம்முடைய இஸ்லாமிய சமூகத்தில் இந்த மஹர் நடைமுறையிலேயே இல்லை என்பதை வேதனையோடு குறிப்பிடுகிறேன். லட்சக் கணக்கில் செலவு செது நடத்தப்படும் திருமணங்களில் நூறு ரூபாய் இரு நூறு ரூபாய் மஹர் எழுதப்படுகின்றது.

இவ்வளவுதான் மஹர் கொடுக்கவேண்டும் என்று எந்த வரைமுறையையும் இஸ்லாம் ஏற்படுத்தவில்லை. அதிகபட்ச அளவையோ குறைந்தபட்ச அளவையோ தீர்மானிக்கவில்லை. எனினும் இரண்டு குடும்பத்தாருடைய பொருளாதார நிதி சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மஹர் தீர்மானிக்கப்படவேண்டும். ஐநூற்றி ஒரு ரூபாய், ஆயிரத்தி ஒரு ரூபாய் என்றெல்லாம் எழுதுவது இஸ்லாமையே கேவலப்படுத்துவதற்கு ஒப்பாகும்!.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் பிற சமூக கலாச்சாரத்துக்கு பலியாகிப்போய்விட்ட காரணத்தால் மஹர் விஷயத்தில் மிகக்கீழ்த்தரமான வேடிக்கைக் கூத்துகள் எல்லாம் நிகழுகின்றன. மஹரை ஆகக்குறைவாக தீர்மானிக்கிறார்கள். அதேசமயம், வரப் போகின்ற மணப்பெண் ஏகத்துக்கும் சீர்செனத்திகளை அள்ளிக்கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். டிவி, பிரிட்ஜ், தூங்கும் கட்டில், அவ்வளவு ஏன், சாப்பிடப் பயன்படுத்தும் தட்டையும் கிளாஸையும் கூட பெண் வீட்டிலிருந்து வாங்கிக்கொள்கிறார்கள்.

தங்களுடைய வசதிக்கு ஏற்ப மஹர் கொடுக்கவேண்டும் எனும் சிந்தனை மாப்பிள்ளை வீட்டார்களுக்கு எழுவதில்லை. ஆனால், தங்களுடைய வசதிக்கு ஏற்றவாறு சீதனத்தை மட்டும் எதிர்பார்க்கிறார்கள். என்னடா இது கொடுமை!. படிப்புக்கேற்ற வேலை என்பது போல படிப்புக்கேற்ற ‘கூலி’ (வரதட்சணை) என்பதும் தொடருகின்றது. ஒருலட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று ‘தகுதி’க்கேற்ப ‘மார்க்கட்’டே ரேட்டை நிர்ணயம் செய்துவிடுகின்றது. படிக்காத மாப்பிள்ளைக்கு இவ்வளவு! படித்த மாப்பிள்ளைக்கு, கிராஜுவேட்டுக்கு, போஸ்ட் கிராஜுவேட்டுக்கு என்று ஒவ்வொரு மாப்பிள்ளைக்கும் ஒரு ‘விலை’ இருக்கின்றது.

வரதட்சணைக்கும் இஸ்லாமுக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை. நேரிடையாகவோ மறைமுகமாகவோ வரதட்சணை வாங்குவதையும் கொடுப்பதையும் இஸ்லாம் ஆதரிக்கவில்லை. எந்தவித நெருக்கடிக்கும் ஆளாகாமல் பெண்ணின் தந்தை தானாக விருப்பப்பட்டு

ஏதேனும் அன்பளிப்புகளை வழங்கினால் ஏற்றுக்கொள்ளலாம். சமூக பழக்க வழக்கங்களும் மறைமுக நெருக்கடியைத் தருகின்றன. இஸ்லாம் இதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

திருமணத்தின்போது தான் பெற்ற மஹரை ஒரு பெண் தன்னிஷ்டப் படி என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எங்கு வேண்டுமானா லும் முதலீடு செய்யலாம். அதில் இருந்து கிடைக்கின்ற பங்குப் பணத்தை அவள் கணவனுக்கோ கணவனுடைய குடும்பத்திற்கோ தந்தாகவேண்டிய அவசியமில்லை.

வருமானம் ஈட்டவேண்டிய தேவை பெண்ணுக்கு அறவே இல்லை. அப்படியே சம்பாதித்தாலும் அது முழுக்க முழுக்க அவளுக்கே சொந்தம். தன்னுடைய வீட்டாருக்காக ஒரு நயா பைசாவையும் அவள் செலவழிக்க வேண்டியதில்லை. தான் விரும் பியபடி எங்கு வேண்டுமானாலும் எதற்காக வேண்டுமானாலும் அவன் அதை செலவழிக்கலாம்.

மனைவி என்னதான் பணக்காரியாக இருந்தாலும் வசதி படைத்த வளாக இருந்தாலும் அவளுக்கான உணவையும் இருப்பிடத்தையும் ஆடைகளையும் அளிப்பது கணவன்மீதே கடமையாகும். இதுதான் இஸ்லாமிய நியதி!. வருமானம் ஈட்டுவதை இஸ்லாம் ஆணின் மீதே கடமையாக்குகின்றது. அக்கடமையை அவன் எப்பாடு பட்டாவது நிறைவேற்றி ஆகவேண்டும்.

மனைவிக்கு தலாக் கொடுத்து பிரிய நினைத்தாலும் 'இத்தா' வின் காலத்தில் அவளுக்கான செலவினங்களையும் கணவனே அளித்தாக வேண்டும். பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கான எல்லா செல வினங்களையும் கணவனே அளிக்கவேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இஸ்லாம் பெண்ணுக்கு வாரி சுரிமையை வழங்கிவிட்டது. குர்ஆனை திறந்து நீங்கள் வாசித்துப் பார்த்தால் அல்பகறா, அந்நிஸா, அல்மாஇதா போன்ற அத்தியாயங் களில் ஒரு பெண் மனைவி எனும் நிலையில், தாய் எனும் நிலையில், மகள் எனும் நிலையில் எவ்வளவு பங்கை சொத்தில் இருந்து பெறு கிறாள் என்பது தெளிவாக விளக்கப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். அவர்களுக்காக பங்குவிகிதத்தை அல்லாஹ் குர்ஆனிலேயே விளக்கி விட்டான்.

பெண்களுக்கு இஸ்லாம் வழங்குகின்ற சொத்துவிகிதம் நியாய

மானதாக இல்லை எனும் கேள்வி கட்டாயம் எழுப்பப்படும் என்று நான் நினைக்கிறேன். அதற்கான பதிலை இங்கு நாம் காண இயலாது. இன்ஷா அல்லாஹ் வேறோர் இடத்தில் அதற்கான பதிலைக் காண்போம்.

உ. பெண்களுக்கான சமூக உரிமைகள்

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள சமூக உரிமைகளைப் பற்றி இந்த அத்தியாயத்தில் நாம் காண்போம். பல தலைப்புகளின் கீழாக அவற்றை நாம் வகைப்படுத்திக் கொள்ளலாம்.

(அ) மகள் எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகள்.

(ஆ) மனைவி எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகள்.

(இ) தாய் எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகள்.

(ஈ) சகோதரி எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கும் உரிமைகள்.

பெண்களுக்கு இஸ்லாமின் மூலம் கிடைத்த சமூக உரிமைகளைப் பட்டியலிடும் போது முதலில் 'மகள்' என்று நாம் ஆரம்பிக்கிறோம். ஏனென்றால், மகளின் உயிருக்கான பாதுகாப்பை முதற்கண் இஸ்லாம் வழங்கி, அவளைக் கொலை செய்வதையும் உயிரோடு புதைப்பதை யும் தடுத்து நிறுத்தியது. மகளாகட்டும் மகனாகட்டும் இஸ்லாம் இப் பாதுகாப்பை இருபாலருக்கும் வழங்கியே உள்ளது. இருபாலரையும் கொலை செய்யக்கூடாது என்று தடை செய்துள்ளது.

இதோ குர்ஆன் கூறுவதைக் கேளுங்கள்...

"உயிரோடு புதைக்கப்பட்ட பெண்கள் விசாரிக்கப்படும் போது... எக்குற்றத்திற்காக நீங்கள் கொலை செய்யப்பட்டீர்கள்? என்று வினவப்படும்போது..." (அல்குர்ஆன்81:8,9).

அல்லாஹுத்தஆலா மேலுமோரிடத்தில் கூறுகிறான்...

"நபியே! நீங்கள் கூறுங்கள்: 'வாருங்கள் இங்கே! உங்கள் இறைவன் உங்களுக்கு தடை செய்தவற்றைப் பற்றிக் கூறுகிறேன். அவனோடு

எதனையும் எவரையும் நீங்கள் (இறைமையில்) இணையாகக் கருதக் கூடாது; உங்களைப் பெற்றவர்களோடு பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்; வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தை களைக் கொன்றுவிடக் கூடாது. நாமே உங்களுக்கு உணவளிக் கிறோம்; அவர்களுக்கும் உணவளிக்கிறோம்” (அல்குர்ஆன் 6:151).

பதினேழாம் அத்தியாயமான பனூ இஸ்ராயீல் அத்தியாயத்திலும் இதே போன்றதொரு கட்டளை நமக்குக் கிடைக்கின்றது.

“வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்து விடாதீர்கள்!. உங்களுக்கம் நாமே உணவளிக்கிறோம்; அவர் களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொன்றுவிடுவது படுபயங்கரமான பாவமாகும்!” (அல்குர்ஆன் 17:31).

அரபுப் பாலவைனத்தில் இஸ்லாம் உதயமாவதற்கு முன்னால் இருந்த நிலையை ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால் இறுகிப்போன உள்ளத்துடன் கொஞ்சங்கூட கவலைப்படாமல் அம்மக்கள் எத்தனை எத்தனை குழந்தைகளை உயிரோடு புதைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது தெரியவரும். இறைவனுடைய மாபெரும் அருளால் இஸ்லாம் அத்தகைய கொடுமைகளை எல்லாம் குழி தோண்டிப் புதைத்தது. அராபிய பண்பாட்டில் நிலவிவந்த இக்கொடுமையை என்னவோ இஸ்லாம் ஒழித்துவிட்டது. ஆனால், மற்ற சமூகங்களின் நிலை?. உலகின் பல பாகங்களிலும் இப்பழக்கம் இன்றும் தொடரத் தானே செய்கின்றது.

நம்முடைய இந்தியாவிலோ இக்கொடுமை தன்னுடைய பயங்கர மான வடிவில் இன்றும் படமெடுத்து ஆடிக்கொண்டுள்ளது. உலகளாவிய தொலைத்தொடர்பு ஊடகமான பி.பி.ஸி ஓர் அறிக் கையை தயாரித்து உலகின் பார்வையில் வைத்தது. அவ்வறிக்கையின் பெயர் ‘அவளைச் சாகவிடுங்கள்!’ (Let`her`Die). Emly Beckenen எனும் பி.பி.ஸி ரிபோர்ட்டர் பிரிட்டனில் இருந்து இந்தியாவிற்கு வந்து பலநாட்கள் சுற்றியலைந்து ஆராய்ந்து அறிக்கையை தயாரித்து அளித்தார். கொஞ்ச காலத்திற்கு மன்பு இந்நிகழ்வு ஸ்டார் டிவியிலும் காட்டப்பட்டது. தொடர்ந்து பலமுறை காட்டப்பட்டுவிட்டது. நீங்களும் இந்நிகழ்வை பார்த்திருக்கலாம்.

கருக்கொலை தொடர்பான புள்ளிவிபரங்கள் அந்நிகழ்வில் காட்டப் பட்டன. அதன்படி ஒரு நாளில் குறைந்தபட்சம் மூவாயிரம் கருக்கொலைகள் நடைபறுகின்றன. ஸ்கேன் செய்துபார்த்து கருவில்

இருப்பது பெண்சிசு என்று தெரியவந்தால் உடனடியாக பெற்றோர்கள் அக்கருவைக் கலைத்துவிடுகிறார்கள்.

அந்த புள்ளிவிபரம் உண்மையாக இருக்குமென்றால் இந்தியாவில் வருடந்தோறும் 10 லட்சம் பெண்கள் உலகிற்கு வருமுன்பே கொலை செய்யப்பட்டு விடுகிறார்கள்.

தமிழ்நாடு, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் வெளிப்படையாக கருக்கொலை பற்றிய அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. 'ஐநூறு ரூபாய் செலவு செய்யுங்கள்; ஐந்து லட்சம் ரூபாய் சேமித்துக் கொள் ளுங்கள்' என்றெல்லாம் பலகைபோட்டு விளம்பரம் செய்யப் பட்டுள்ளதை நீங்கள் அம்மாநிலங்களில் காணமுடியும்!.

இந்த விளம்பரத்திற்கு என்ன பொருள் என்று விளங்குகின்றதா?. ஐநூறு ரூபாய் செலவு செய்து ஸ்கேன் செய்து கருவில் உள்ளது என்ன என்று பார்த்துக் கொள்ளுங்கள்!. பிறக்கப்போவது பெண் எனத் தெரிந்தால் உடனே கலைத்துவிடுங்கள். எதிர்காலத்தில் அவளுக்காக செலவு செய்யப்போகும் ஐந்து லட்சம் ரூபாய் உங்களுக்கு மிச்சமாகிவிடும். அதாவது நீங்கள் தந்தாகவேண்டிய வரதட்சணை மிச்சமாகிவிடும்.

குழந்தைகளைக் கொலை செய்வது இன்றைக்கு நேற்று நிகழ்கின்ற புதுப்பழக்கமல்ல!. பல்லாண்டுகளாக இக்கொடுமை தொடர் கின்றது. 1901 ஆமாண்டு எடுக்கப்பட்ட இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தருகின்ற புள்ளிவிபரத்தை நீங்கள் எடுத்துப் பாருங் கள். அன்றைய நிலவரப்படி 1000 ஆண்களுக்கு 972 பெண்கள்தாம் இருந்திருக்கிறார்கள்.

அதன்பிறகு 1981 ஆமாண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக் கெடுப்பைப் பார்த்தால் இந்த விகிதாச்சாரம் அதிகரித்திருப்பதை கண்டுகொள்ளலாம். 1981 ஆமாண்டு 1000 ஆண்களுக்கு 934 பெண்களே இருந்திருக்கிறார்கள்.

பெண்களுடைய எண்ணிக்கை இவ்வாறு குறைந்துகொண்டே போவது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. 1991 ஆமாண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 1000 ஆண்களுக்கு 927 பெண்களே இருக்கிறார்கள். கல்வியும் விஞ்ஞானமும் முன்னேற்றமடைகின்றது என்றால் இக்கொடுமை குறைந்தல்லவா போயிருக்கவேண்டும்? ஆனால், விஞ்ஞான வளர்ச்சி இக்

கொடுமையை மேலும் வளர்ப்பதற்கு அல்லவா துணை செல்கின்றது!.

குழந்தைகளைக் கொன்றொழிப்பது பாவம் என்று இஸ்லாம் சொல்கின்றது. ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி இஸ்லாம் கொலை செய்வதை வன்மையாகக் கண்டிக்கின்றது; பெரும்பாவம் என்று சொல்கின்றது. இப்போது சொல்லுங்கள். இஸ்லாம் பெண்களுக்கு மீட்டுத் தந்திருக்கின்ற இந்த உரிமை பழைய உரிமையா? பழங்காலத்திற்கு மட்டும் பொருந்தக் கூடியதா?. அல்லது இக்காலத்திற்கும்/எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய நவீனத் தன்மை வாய்த்ததா?.

கருவில் இருப்பது பெண் குழந்தை என்றால் அல்லது பிறந்தது பெண் குழந்தை என்றால் அதனைக் கொலை செய்துவிடாதீர்கள் என்று மட்டும் இஸ்லாம் கூறவில்லை. அதையும் தாண்டி, பிறந்தது ஆண்குழந்தை என்றால் குதூகுலத்தோடும் ஆட்டம்பாட்டத் தோடும் சந்தோஷமாகக் கொண்டாதீர்கள்; பெண் குழந்தை என்றால் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு சோகச்சித்திரமாக மாறிவிடாதீர்கள் என்றும் வலியுறுத்துகின்றது.

கருக்கொலை, சிசுக்கொலை போன்றவற்றை 'நாகரீக உலகம்' என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டுள்ள இந்நிகழ்கால உலகில் சர்வ சாதாரணமாக குற்றஉணர்வின்றி செய்யப்பட்டு வரும் செயல்கள் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்அரேபியவில் தொடரத்தான் செய்தன.

இதோ, அக்காட்சிகளை வான்மறை குர்ஆன் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது, பாருங்கள்.

"இவர்களில் ஒருவருக்கு பெண்குழந்தை பிறந்திருக்கின்றது பற்றி 'நற்செய்தி' சொல்லப்பட்டால், அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கின்றது. துக்கத்தால் அவருடைய தொண்டை அடைத்துக் கொள்கின்றது. இந்தக் 'கேவலமான செய்தி' கிடைத்துவிட்டதே என்பதற்காக இனி, யார் முகத்திலும் விழிக்கக்கூடாது என்று அவர் மக்களை விட்டு ஒதுங்கிச் செல்கிறார். அவமானப்பட்டுக்கொண்டு அப்பெண்குழந்தையை வைத்திருப்பதா அல்லது உயிருடன் அதை மண்ணில் புதைத்துவிடுவதா என்று சிந்திக்கிறார்!" (அல்குர்ஆன் **16:58,59**).

நம் நாட்டில் இன்று நம்முடைய கண்களுக்கு முன்னால் நடைபெறுகின்ற காட்சிகளை இவ்வசனங்கள் படம் பிடித்துக் காட்டுவதைப் போல இருக்கின்றதா? காலங்கள் பல கடந்தாலும் மனித இயல்பு என்னமோ மாறாமல் அப்படியேதான் இருக்கின்றது.

அத்தோடு நில்லாமல் பெற்றெடுத்த மகளை நன்முறையில் வளர்த்து ஆளாக்கி, சிறப்பான கல்வியை அவளுக்கு அளிப்பதையும் இஸ்லாம் கடமையாக ஆக்கியுள்ளது. முஸ்னது அஹ்மதுவில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸ் கருத்துப்படி இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்,

''தான் பெற்றெடுத்த இரண்டு மகள்களை யார் நன்முறையில் வளர்த்து ஆளாக்குகிறாரோ அவர் இறுதித்தீர்ப்பு நாளன்று என்னோடு இவ்வாறு இருப்பார்!'' எனக் கூறியவர்களாக அண்ணலார் தம்முடைய இரண்டு கைவிரல்களை ஒன்றுபோலச் சேர்த்துக் காட்டினார்கள்.

இன்னுமோர் ஹதீதில் பெருமானார் குறிப்பிட்டுள்ளார்கள்:

''தான் பெற்றெடுத்த இரண்டு பெண்மக்களை யார் நன்முறையில் வளர்த்து ஆளாக்கினாரோ, அவர்களை பாராட்டி சீராட்டி வளர்த்தாரோ, அவர்கள் மீது பாசமழை பொழிந்தாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார்!''

மகன்களுக்கிடையிலும் மகள்களுக்கிடையிலும் பாரபட்சம் *(Partialality)* காட்டுவதையும் இஸ்லாம் எதிர்க்கின்றது. ஒரு ஹதீதில் வந்துள்ளதாவது,

''ஒருமுறை அண்ணல் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் ஒரு மனிதர் தன்னுடைய மகனை கொஞ்சினார். தன் மடியில் உட்கார வைத்துக்கொண்டார். அதே சமயம் தன்னுடைய மகளை கண்டுகொள்ளவே இல்லை. இதைக் கண்ட அண்ணலார், 'நீ ஒரு அநியாயக்காரன்!. உன்னுடைய பெண்ணோடும் நீ இவ்வாறு நடந்துகொண்டிருக்கவேண்டும்' எனக் கூறினார்கள்.

வாயால் உபதேசித்ததோடு அண்ணலார் நின்றுவிடவில்லை. செயல்களால் அவர்கள் வாழ்ந்தும் காட்டினார்கள்.

அடுத்து, மனைவி எனும் நிலையில் ஒரு பெண் பெறக்கூடிய சமூக உரிமைகளைப் பற்றிப் பார்ப்போம்.

இஸ்லாமிய வருகைக்கு முன்பாக இவ்வுலகில் கோலோச்சிக் கொண்டிருந்த சமயங்களை நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால் ஏறக்குறைய எல்லா சமயங்களும் பெண்ணை சாத்தானின் தூண்டு கருவியாகவே கருதி வந்துள்ளதைக் காணலாம். அதாவது, ஷைத்தான் பெண்ணைப் பயன்படுத்தி பெண்ணின் மூலமாக தனிதர்களை வழிகெடுக்கிறான்.

இஸ்லாமில் பெண்ணைக் குறித்து இதற்கு முற்றிலும் நேர்மாற்ற மான கருத்தொன்று நிலவுவதைப் பார்க்க முடியும். இஸ்லாம் என்ன சொல்கின்றது, தெரியுமா? ஷைத்தானிடமிருந்து உங்களைக் காக்கின்ற கேடயமாக்கும் பெண் எனக் கூறுகின்றது. ஓர் ஆண்மகன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் ஷைத்தானின் தீய எண்ணங்களைவிட்டும் அவனைக் காப்பவளாக அப்பெண் மாறிவிடு கிறாள். அவனுடைய இச்சைகளை முறையான வழிகளில் திருப்திப் படுத்தி அவனை இறைவனுடைய வழியில் சிந்திக்க வைப்பவளாகவும் மாறிவிடுகிறாள்.

முஸ்லிம்கள் ஆதாரப்பூர்வமான நபிமொழித் தொகுப்பாக ஏற்றுக்கொண்டுள்ள நூலான புகாரி-யில் இடம் பெற்றுள்ள ஒரு ஹதீத் நமக்கு இந்தத் தகவலையே தருகின்றது.

“திருமணம் செய்துகொள்ள சக்தி படைத்துள்ள முஸ்லிம்கள் அனைவரும் கட்டாயம் திருமணம் செய்துகொள்ளவேண்டும். அதன் மூலமாக அவர்கள் தமது கண்களை (கள்ளப்பார்வையை விட்டும்) தடுத்துக் கொள்ள வழிபிறக்கும். தமது வெட்கஸ்தலத்தை பாது காத்துக் கொள்ளமுடியும். தமது கற்பை பேணிக்கொள்ளமுடியும்” என்று இறைவனின் தூதர் கூறியுள்ளார்கள்.

நபித்தோழர் அனஸ் வாயிலாக பதியப்பட்டுள்ள நபிமொழி ஒன்றில்...

“திருமணம் செய்துகொண்டவர் தனது சமயநம்பிக்கையில் பாதியை பாதுகாத்துக் கொண்டார்”.

இந்த நபிமொழியைக் கேட்ட நண்பர் ஒருவர்: ‘அப்படியென்றால் இரண்டு கல்யாணம் செய்துகொண்டால் என்னுடைய இறை நம்பிக்கை முழுமை அடைந்துவிடுமா?’ எனக் கேட்டார்.

அறிவுகெட்டத்தனமான கேள்வி இது!. நபிமொழியில் கூறப் பட்டுள்ள செய்தி நூற்றுக்கு நூறு உண்மையாகும். ஒரு மனிதன் திரு மணம் செய்துகொண்டால் அவன் தீயவழியில் செல்லாது பாது காக்கப்படுகிறான். தன்னுடைய இயல்பான இச்சையை முறை கேடான வழிகளில் தீர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. தீய செயல், விபச்சாரம், முறையற்ற உறவு, ஓரினப்புணர்ச்சி போன்ற தீமைகளைவிட்டு அவன் பாதுகாக்கப்படுகிறான். உலகத்தில் பாதிக்குற்றங்கள் இது தொடர்பாகத்தான் நிகழ்கின்றன என்பதை மனதில் கொள்ளுங்கள்.

திருமணத்திற்குப் பின் கணவன்-மனைவி, தாய்-தந்தை என்ற வகையில் பொறுப்புகள் கூடிவிடுகின்றன. இஸ்லாம் இந்தப் பொறுப் புகளையும் சாதாரணப் பொறுப்புகளாக கருதவில்லை. இவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது. இப்பொறுப்புகள் கல் யாணத்திற்குப் பிறகுதான் வருகின்றன. ஆகையால் இவவகையிலும் கல்யாணம் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆகையால், கல்யாணம் செய்துகொள்வதால், ஒன்றோ, இரண் டோ, மூன்றோ உங்களுடைய பாதி ஈமான்தான் முழுமை அடை கின்றது.

கணவன் எனும் ஆணுக்கும் மனைவி எனும் பெண்ணுக்கும் இடையே இயற்கையாகவே அன்பும் பாசப்பிணைப்பும் தோன்று கின்றது என குர்ஆன் கூறுகின்றது. குர்ஆனைத் திறந்து பாருங்கள்.

‘‘நீங்கள் நிம்மதியையும் அமைதியையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுடைய இனத்தில் இருந்தே உங்களுக்கான துணையை உண்டாக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்!. சிந்தித்து ஆராய்வோருக்கு இதில் ஏராளமான அத்தாட்சிகள் உள்ளன!’’ (அல்குர்ஆன் 39:21).

திருமண ஒப்பந்தத்தை ‘உறுதிமிக்க ஒப்பந்தம்’ என அத்தியாயம் அந்நிஸாவின் 21ம் வசனம் குறிப்பிடுகின்றது. அதே அத்தியாயத்தின் பத்தொன்பதாவது வசனத்தில்...

‘‘நன்முறையில் அவர்களோடு வாழ்ந்து வாருங்கள்!. ஒருவேளை அவர்கள்மீது உங்களுக்கு வெறுப்பு மண்டினால் - நீங்கள் ஒரு விஷ யத்தை வெறுக்கக் கூடும். அல்லாஹ்வோ அதில்தான் ஏராளமான நன்மைகளை வைத்திருப்பான்’’ (அல்குர்ஆன் 4:19).

இருமனம் ஒன்றுகூடினால்தான் திருமணமே சாத்தியமாகும். மணமகனும் மணமகளும் அத்திருமணத்தை மனமொப்பி ஏற்றுக் கொண்டால்தான் திருமணமே கூடும். மணமகளை கட்டாயப்படுத்தி சம்மதிக்கவைக்க அவளைப் பெற்ற தந்தைக்கும் உரிமை கிடையாது.

ஒரு இளம்பெண்ணைக் கேட்காமலேயே அவளுக்குப் பிடிக்காத இடத்தில் அவளுடைய தந்தை திருமணத்தைப் பேசி முடித்து விட்டார். அப்பெண் இறைவனின் தூதரை அணுகி முறையிட்டாள். அதைக்கேட்ட அண்ணலார் அத்திருமணம் செல்லாது என அறிவித்துவிட்டார்கள். ஸஹீஹ் புகாரியில் பதிவாகியுள்ள சம்பவம் இது!.

அஹ்மத் இப்னு ஹம்பல் ஹதீதுத் தொகுப்பிலும் இதுபோன்ற தொரு நபிமொழியை நம்மால் பார்க்கமுடிகின்றது. ஒரு பெண் இறைத்தூதரிடம் வந்து தன்னுடைய தந்தை தன்னைக் கேட்காமலேயே தன்னுடைய திருமணத்தை நிகழ்த்திவிட்டார் என்று முறையிட்டார். தனக்கு அதில் இஷ்டமில்லை என்றும் அவர் கூறினார். உடனே, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்பெண் விரும்பினால் அத்திருமண உறவைத் தக்க வைக்கலாம்; விருப்பமில்லை என்றால் திருமண உறவை முறித்துக் கொள்ளலாம் என்றும் கூறிவிட்டார்கள்.

திருமணம் என்றால் மணமக்கள் இருவருடைய சம்மதத்தையும் இஸ்லாம் கட்டாயம் பெறச் சொல்கின்றது என்பதை இவற்றிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

இல்லத்தை உருவாக்குவதும் இல்லறத்தை நடத்துவதும் பெண்ணின் பொறுப்பாக இஸ்லாம் கருதுகின்றது. ஒரு வீட்டை 'இல்லமாக' ஆக்குவது பெண்தான்!. மேலை நாகரீகத்தில் பெண்மணியை 'இல்லத்துணைவி' (House wife) என்று அழைக்கிறார்கள். இது தவறான செல்லாடலாகும். பெண் என்ன வீட்டையா கல்யாணம் செய்து கொண்டுள்ளாள்?. மக்கள் என்ன ஏது என்று யோசிக்காமலேயே இவ்வார்த்தையை புழங்கிக்கொண்டுள்ளார்கள். 'ஹவுஸ் வைஃப்' என்றால் 'வீட்டின் மனைவி' என்றல்லவா பொருள்?.

ஆகையால், சகோதரிகள் இனிமேல் தங்களை 'ஹவுஸ் வைஃப்' என்று அழைத்துக்கொள்வதற்குப் பதிலாக 'ஹவுஸ் மேக்கர்' என்று அழைத்துக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மனைவி என்பவள் ஒரு வேலைக்காரி அல்ல, கணவனுக்கு எந்த வகையிலும் இளைக்காத சம உரிமை படைத்தவள் அவள் என்று இஸ்லாம் கூறுகின்றது.

'தன்னுடைய வீட்டாரோடு நன்முறையில் நடந்துகொள்பவரே உங்களில் சிறந்தவர்!' என்று ஒரு ஹதீஸ் முஸ்னது அஹ்மத் நபிமொழி நூலில் பதிவாகியுள்ளது.

சமூக உரிமைகளை முன்வைத்து பார்க்கும்போது இஸ்லாமில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்தவகையான பாகுபாடும் வேறுபாடும் கிடையவே கிடையாது. ஒரெ ஒரு விஷயத்தைத் தவிர!. அது தலைமைத்துவம். கணவனையும் மனைவியையும் குர்ஆன் ஒன்றாகவே ஒரே தட்டில் வைத்துப் பார்க்கின்றது. அதேசமயம், குடும்பமாக இருக்கட்டும் கோத்திரமாக இருக்கட்டும் தலைமை தாங்க வேண்டியது ஆணே!.

"கணவர்களுக்கு பெண்கள்மீது இருக்கும் உரிமைகளைப் போலவே அவர்கள் மீது பெண்களுக்கும் உரிமை உண்டு!. ஆயினும் ஆண் களுக்கு அவர்களைவிட உயர்வு உண்டு. அல்லாஹ் ஆற்றல் மிக்க வனாகவும் ஞானம் பொருந்தியவனாகவும் உள்ளான்" (அல்குர்ஆன் 2:228).

இறைவசனத்தின் இந்த இடம் வரை நான் மற்றவர்களோடு ஒத்த கருத்து கொண்டுள்ளேன். ஆனால், பொதுவாக இவ்வசனத்தை எல்லோருமே தவறாகவே விளங்கி வைத்துள்ளார்கள். அதிலும் குறிப் பாக ஆண்களுக்கு பெண்களைவிட ஒருவித உயர்வும் மேலாண்மை யும் இருக்கின்றது என்றே அனைவரும் தவறாக விளங்கிக்கொள் கிறார்கள். ஒரு இறைவசனத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமென் றால் முழுக்குர்ஆனையும் முன்வைத்து அவ்விஷயத்தில் குர்ஆ னுடைய கருத்து என்ன என்று ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். அத்தியாயம் அந்நிஸாவில் அல்லாஹு¯த்தஆலா கூறுகிறான்.

"பெண்களை விட ஆண்கள் உயர்ந்தவர்கள்!" (அல்குர்ஆன் 4:34).

'கவ்வாம்' என்ற சொல் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. கவ்வாம் என்றால் உயர்ந்தவர், சிறந்தவர் என்றே அனைவரும் பொருள் கொள் கிறார்கள். கவ்வாம் எனம் சொல் இகாமஹ் என்ற சொல்லில் இருந்து பிறந்துள்ளது. உதாரணமாக தொழுகைக்கு முன்னால் நாம் இகாமத் கொடுக்கிறோம். அதாவது தொழுகைக்காக எழுந்து நில்லுங்கள்

என்று பொருள். அப்படியெனில், இகாமஹ் என்றால் நிற்பது எனப் பொருளாகின்றது. அப்படி என்றால் கவ்வாம் என்பதற்கு பெண்ணைவிட ஆண் உயர்ந்தவன் எனப் பொருளாகாது. சிறந்தவன் என பொருள் கொள்ளக்கூடாது. பெண்ணைவிட ஆணுக்கு பொறுப்புகள் அதிகமாக உள்ளன என்றே பொருள் கொள்ளவேண்டும்.

புகழ்பெற்ற குர்ஆன் விரிவுரையான இப்னு கஸீரை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால் அந்நூலில் இவ்வாறே எழுதப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். 'பெண்ணைவிட ஆணுக்கு கூடுதலான பொறுப்புகள் உள்ளன என்பதே இவ்வநனத்தின் பொருளாகும். பெண்ணை விட ஆண் சிறந்தவன் என்றோ உயர்ந்தவன் என்றோ பொருள் அல்ல!' என்று அவ்வுரையாசிரியர் கூறுகிறார். இருவரும் மனப்பூர்வமாக ஒத்துப்போய் ஒன்றுபட்ட மனோநிலையுடன் இப்பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும்.

"அவர்கள் உங்களுக்கு ஆடைகளைப் போன்றவர்கள். நீங்கள் அவர்களுக்கு ஆடைகளைப் போன்றவர்கள்!" என்று அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான். (அல்குர்ஆன் 2:186).

ஆடையின் பயன்பாடு என்ன? ஆடை எதற்குப் பயன்படுகின்றது? மறைப்பதற்கு ஆடை பயன்படுகின்றது. உடலை மறைப்பதற்கு!. இவ்வாறே கணவன்-மனைவி இருவரும் ஒருவருடைய குறைகளை ஒருவர் மறைக்கவேண்டும். ஒருவர் இன்னொருவரை அலங்கரிக்க வேண்டும். ஏனென்றால் இருவரும் ஒருவரோடு இணைந்து ஒன்று போல வாழவேண்டியவர்கள் அல்லவா?.

"நன்முறையில் அவர்களோடு வாழ்ந்து வாருங்கள்!. ஒருவேளை அவர்கள்மீது உங்களுக்கு வெறுப்பு மண்டினால் - நீங்கள் ஒரு விஷயத்தை வெறுக்கக் கூடும். அல்லாஹ்வோ அதில்தான் ஏராளமான நன்மைகளை வைத்திருப்பான்" (அல்குர்ஆன் 4:19).

இவ்வசனம் என்ன சொல்ல வருகிற்து? உங்களுடைய மனைவி உங்களுக்கு பிடிக்காமல் போய்விட்டாலும் அவளோடு நீங்கள் நன்முறையில்தாம் நடந்துகொள்ளவேண்டும். சிறந்த ஒழுக்கத்தை வெளிப்படுத்தவேண்டும். உங்களுக்கு சமமாகவே அவளை நடத்த வேண்டும்.

மனைவி எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் எத்தனை எத்தனை உரிமைகளை எல்லாம் வழங்கியிருக்கின்றது என்பதை

நீங்கள் இந்நேரம் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள். இப்போது சொல்லுங்கள்!. இவை இப்போதும் தேவைப்படக்கூடிய உரிமைகளா? அல்லது காலம் கடந்து பழசாகிப்போனவையா?.

அடுத்து தாய் எனும் நிலையில் பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கு கின்ற உரிமைகளை பார்ப்போம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் ஓரிறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதற்கு அடுத்தபடியாக இஸ்லாம் பெற்றோருக்கு செய்தாகவேண்டிய பணிவிடைகளைப் பற்றியே பேசுகின்றது. ஓரிறைவன் அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்.

''தன்னைத்தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்றும் பெற்றோர்களிடம் நன்முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்துள்ளான்.

அவர்களில் ஒருவரோ அல்லது இரண்டுபேருமோ முதுமை அடைந்துவிட்டால் 'சீ' என்றுவட நீங்கள் சொல்லிவிடக் கூடாது.

கண்ணியமான பேச்சையே அவர்கள் இருவரிடமும் பேச வேண் டும். இரக்கங்கொண்டு பணிவென்னும் சிறகுகளை அவர்களுக்காக தாழ்த்துவீராக!

'என்னிறைவா! சின்னவயதில் பரிவோடு இவர்கள் என்னைப் பார்த்துக்ெொண்டது போல நீயும் இவர்கள்மீது அருள்மழை பொழி வாயாக!' என்று நீங்கள் அவர்களுக்காக பிரார்த்தனை செய்வீராக!'' (அல்குர்ஆன் 17:23,24).

''மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த அந்த இறைவனுக்கே பயப்படுங்கள். அந்த ஆன்மாவிலிருந்து அவன் அதனுடைய துணையைப் படைத்தான்; பிறகு, அவர்களிலிருந்து நிறைய ஆண்களையும் பெண்களையும் படைத்தான். எந்த அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி நீங்கள் உங்கள் உறவுகளிடையே சத்தியம் செய்து கொள்கிறீர்களோ அந்த அல்லாஹ்வுக்கே பயப் ணபடுங்கள். அவனோ உங்கள் அனைவரையும் கண்காணித்துக் கொண்டே உள்ளான்''. (அல்குர்ஆன் 4:1).

அத்தியாயம் லுக்மானில் அல்லாஹுˉத்தஆலா கூறுவதைக் கேளுங்கள்.

''மனிதனிடம் அவனுடைய பெற்றோர்களைப் பற்றி நாம் உப

தேசித்துள்ளோம். அவனுடைய தாய் பலவீனத்தின்மேல் பலவீனம் கொண்டு அவனைக் கருவில் சுமந்தாள். பால்குடியை அவன் மறக்க இரண்டு ஆண்டுகள் ஆயின. (ஆகையால்) நீ எனக்கும் உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி பாராட்டுவாயாக! (என உபதேசித்தோம்.) கடைசியில் நீ என்னிடமே திரும்ப வரவேண்டியிருக்கும்'' (அல்குர்ஆன் 31:14).

"பெற்றவர்களிடம் நெருந்தன்மையொடு நடந்துகொள்ளுமாறு நாம் மனிதனுக்கு உபதேசித்தோம். அவனுடைய தாய் கஷ்டப்பட்டு அவனை கருவில் சுமந்திருந்தாள்; கஷ்டப்பட்டு அவனை பிரசவித் தாள்; கருவில் சுமந்த காலமும் பால்குடி காலமும் முப்பது மாதங் களாம்!" (அல்குர்ஆன் 46:15).

அஹ்மத், இப்னு மாஜா போன்ற நூற்களில் ஒரு நபிமொழி பதிவாகியுள்ளது.

"சொர்க்கம் தாயின் காலடியில் உள்ளது!".

பாதையில் நடக்கும்போது தாயின் காலுக்குக் கீழே கிடக்கும் பொருட்கள் எல்லாம் சொர்க்கமாக மாறிவிடும் என்பது இதன் பொருள் அல்ல!. மார்க்கக் கடமைகளை எல்லாம் நீங்கள் முழுமை யாக நிறைவேற்றுகிறீர்கள்; அதன்பின்பு தாய்க்கு செய்யவேண்டிய கடமைகளையும் ஒழுங்காக செய்கிறீர்கள்; தாய்க்கு பணிவிடை செய்கிறீர்கள்; தாயின் பேச்சை மதிக்கிறீர்கள் என்றால் நீங்கள் கட்டாயம் சொர்க்கத்திற்கு போவீர்கள்.

ஆதாரப்பூர்வமான நபிமொழிகளைக் கொண்ட நூற்களான புகாரியிலும் முஸ்லிமிலும் பதிவாகியுள்ள ஒரு நபிமொழியாவது:

ஒரு மனிதர் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்.

'நான் யாருக்கு அதிகமாக கடமைப்பட்டிருக்கிறேன்?' என வினவினார்.

'உன்னுடைய தாய்க்கு!' என்று இறைத்தூதர் பதிலளித்தார்கள்.

'அடுத்ததாக யாருக்கு?'

'உன்னுடைய தாய்க்கு!'

மூன்றாவது முறையும் அவர் கேட்டார், 'அடுத்ததாக யாருக்கு?'

அண்ணலார் கூறினார்கள்: 'உன்னுடைய தாய்க்கு!'

நான்காவது முறை அவர் கேட்டார், 'அடுத்ததாக யாருக்கு?'

இம்முறை இறைத்தூதர் கூறினார்கள்: 'உன்னுடைய தந்தைக்கு!'.

இந்த நபிமொழியின்படி 75./. கண்ணியத்திற்கும் மதிப்பிற்கும் தாய் உரியவராகிறார். 25./. சதவீதம்தான் தந்தைக்குக் கிடைக்கின்றது. முக்கால் பாகம் தாய்க்கு, கால் பாகம் தந்தைக்கு!.

சுருக்கமாகச் சொல்வதென்றால் தங்கக்காப்பு தாய்க்கு! வெள்ளிக் காப்பும் தாய்க்கு! கண்ணாடி வளையல்களும் தாய்க்கே! ஊக்கப் படுத்தியதற்கான ஆறுதல் பரிசு தந்தைக்கு, அவ்வளவே!.

தாய்க்கு எவ்வளவு உரிமைகளை இஸ்லாம் தரச்சொல்கின்றது என்பதை கண்டுகொண்டீர்களா?. இந்த உரிமைகள் எல்லாம் இன்று தேவையே இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இவை காலங் கடந்தவையா?

சகோதரி எனும் நிலையிலும் ஒரு பெண்ணை மிகுந்த கண்ணியத் துடன் இஸ்லாம் வைத்துப் பார்க்கின்றது. திருமறை குர்ஆனில் அல்லாஹு த்தஆலா கூறுகிறான்.

"இறைநம்பிக்கை கொண்ட ஆண்களும் இறைநம்பிக்கை கொண்ட பெண்களும் ஒருவருக்கொருவர் உற்றதோழர்களாக உள்ளார்கள்!" (அல்குர்ஆன் 9:71).

இங்கே இவ்வசனத்தில் அவ்லியா எனும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அவ்லியா என்றால் தோழன், நெருங்கிய நண்பன் எனப் பொருள். அதாவது, முஃமின் ஆண்களும் முஃமின் பெண்களும் சகோ தர-சகோதரிகளைப் போன்றவர்கள். அவர்களிடையே வேறு உறவு முறைகள் இல்லாது போனாலும் அவர்கள் சகோதர-சகோதரி களாகவே கருதப்படுவார்கள்.

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள சமூக உரிமைகளைப் பற்றி பேசுவதென்றால் பேசிக்கொண்டே இருக்கலாம். வேறுசில முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி இங்கு குறிப்பிடாமலேயே கடந்துபோக விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக, பலதார மணம், விவாகரத்து போன்றவை. அவற்றைப் பற்றி கண்டிப்பாக கேள்விகள் கேட்கப்படும் என்பதால் அவற்றை அப்போது விரிவாக பார்த்துக் கொள்ளலாம்.

4. பெண்களுக்கான கல்வி உரிமைகள்

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள கல்வித்துறை உரிமைகளைப் பற்றி இங்கு பார்ப்போம், இன்ஷா அல்லாஹ். அத்தியாயம் அலக் -கிலுள்ள முதல் ஐந்து வசனங்கள்தாம் திருக்குர்ஆனில் முதன்முதலில் இறக்கப்பட்ட வசனங்கள். அவ்வசனங்களில் இறைவன் என்ன சொல்கிறான் என்றால்...

"படைத்த உம்மிறைவனின் பெயரைக்கொண்டு ஓதுவீராக! ஒரு தொங்குசதையிலிருந்து அவனே மனிதனைப் படைத்தான். ஓதுவீராக, உம்மிறைவன் கண்ணியமிக்கவன்; அவனே எழுதுகோளைக் கொண்டு எழுத்தறிவித்தான். மனிதனுக்கு தெரியாததை எல்லாம் கற்றுக்கொடுத்தான்" (அல்குர்ஆன் 96:1-5).

ஒரு விஷயத்தை மறந்துவிடாதீர்கள். ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததைப் பற்றி நாம் பேசிக்கொண்டுள்ளோம். அக்காலத்தில் பெண்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஏதோ சொத்துபத்துகளைப் போன்று பெண்கள் கருதப்பட்டார்கள். பெண்களுக்கு எழுத்தறிவிப்பது பற்றி உலகம் கனவு கூட காணாத காலத்தில் இஸ்லாம் பெண்கள் கல்வி கற்றே ஆகவேண்டும் என வலியுறுத்தியது.

ஏற்கனவே சொல்லப்பட்டது போல கற்றுத்தேர்ந்த பல பெண்டிரை ஸஹாபாக்களில் நாம் பார்க்கலாம். அவர்களில் முதலிடத்தை அன்னை ஆயிஷா வகிக்கிறார்கள். இஸ்லாமிய ஆட்சியாளரான அபு பக்கரின் மகள்; இறைநம்பிக்கையாளர்களின் அன்னை எனும் சிறப்புக்கு உரியவர். உயர்பெரும் நபித்தோழர்களும் இஸ்லாமிய ஆட்சிக் கடிவாளத்தை கையிலேந்திய கலீஃபாக்களும் கூட அன்னை ஆயிஷாவை அணுகி வழிகாட்டுதலைப் பெற்றுள்ளார்கள்.

அன்னை ஆயிஷாவின் முதன்மைச் சீடராக விளங்கியவர் உர்வா ரழியல்லாஹு அன்ஹு ஆவார். அவர் கூறுவதாவது:

“திருக்குர்ஆன் விரிவுரை, வாரிசுரிமைச் சட்டங்கள், ஹலால்-ஹராம், அரபு இலக்கியம், அரபுக் கவிதைகள், வரலாறு போன்ற துறைகளில் ஆயிஷா அவர்களைவிட புலமை பெற்றவராக யாரையும் நான் கண்டதில்லை!”.

இஸ்லாமிய சமய நெறியில் மட்டும் அவர் புலமை பெற்றிருக்கவில்லை. அத்தோடு, மருத்துவம் போன்ற உலக அறிவிலும் சிறந்து விளங்கினார். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்தித்து உரையாட வெளியூர்களிலிருந்து தூதுக்குழுக்கள் வரும்போது அவர்களிடையே நிகழும் உரையாடல்களை கவனமுடன் கேட்டு மனதில் பதியவைத்துக்கொள்வார்.

கணிதத்துறையில் அவருக்கு அளப்பற்ற ஆர்வம் இருந்தது. நபித்தோழர்களுக்கு வாரிசுரிமைப் பங்கீட்டில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் ஆயிஷாவிடம் வந்துதான் தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்வார்கள். இம்மாதிரி பலமுறை நடந்திருக்கின்றது. ஷரீஅத் அடிப்படையில் ஒவ்வொரு வாரிசுக்கும் எவ்வளவு எவ்வளவு பங்கு கிடைக்கும் என்பதை கணித்துக் கூறுவதில் ஆயிஷா நிகரற்று விளங்கினார்.

மற்ற நபித்தோழர்களைப் போலவே ஆட்சிக்கடிவாளத்தை கையிலேந்தியிருந்த நான்கு கலீஃபாக்களுக்கும் அவ்வப்போது ஆலோசனை வழங்கும் வாய்ப்பும் ஆயிஷாவுக்கு கிடைத்தது. அவர் பலமுறை நபித்தோழர் அபு ஹுறைறாவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஏறத்தாழ 2210 நபிமொழிகளை ஆயிஷா அறிவித்துள்ளார்.

நபித்தோழர் அபு மூஸா அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு மிகப்பெரிய அறிஞர். “நபித்தோழர்களான எங்களுக்கு ஏதேனும் ஒரு பிரச்சனையில் சரியான தீர்வு கிடைக்காவிட்டால் ஆயிஷாவிடம் சென்று ஆலோசனை கேட்போம். அவர் எங்களுக்கு சரியான விஷயத்தை சுட்டிக்காட்டுவார்” எனக் கூறுகிறார்.

குறைந்தபட்சம் 88 மார்க்க அறிஞர்கள் ஆயிஷாவிடம் பயின்றுள்ளார்கள். அப்படியெனில், ஆயிஷா அவர்களை ‘ஆசிரியர்களின் ஆசிரியர்’ என்று அழைத்தாலும் மிகையாகாது.

அன்னை ஆயிஷாவைத்தவிர மற்ற ஸஹாபிளாப்

பெண்மணிகளும் கல்விகேள்வியில் சிறந்து விறங்கியுங்ள்ளமையை வரலாற்றில் நம்மால் காணமுடிகின்றது. அன்னை ஸஃபிய்யா அவர்களுக்கு இஸ்லாமிய மார்க்க ஞானத்தில் பெரும்புலமை இருந்தது. அவர்களுடைய காலத்தில் மிகச்சிறந்த மார்க்க அறிவு பெற்ற பெண்மணியாக அவர் விளங்கினார் என்று அவரைப் பற்றி இமாம் நவவீ குறிப்பிடுகிறார்.

இவர்களைப்போன்றே கல்வியிலும் கேள்வியிலும் சிறந்து விளங்கிய இன்னொருவர் அன்னை உம்மு ஸலமா ரழியல்லாஹுஅன்ஹா ஆவார். அவரிடம் மட்டும் 32 மார்க்க அறிஞர்கள் மாணவர்களாக பயின்றுள்ளனர் என அல்லமா இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி குறிப்பிடுகிறார்.

ஃபாத்திமா பின்த் கைஸ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பற்றியும் வரலாற்றில் ஒரு குறிப்பு காணக்கிடைக்கின்றது. ஒருமுறை ஏதோ ஒரு பிரச்சனையில் அவருக்கும் ஆயிஷா மற்றும உமர் அவர்களுக்கும வாக்குவாதம் ஏற்பட்டது. நாள் முழுக்க விளக்கியும் ஃபாத்திமாவை ஒப்புக்கொள்ளவைக்க அவர்கள் இருவராலும் இயலவில்லை.

“புலம்பெயர்ந்து சென்ற தொடக்க கால முஹாஜிரீன்களில் ஃபாத்திமாவும் ஒருவர்; விசாலமான அறிவுப் பார்வை உடையவர்’ என அவரைப் பற்றி இமாம் நவவீ கூறியுள்ளார்.

அனஸ் அவர்களின் தாயாரான உம்மு ஸுலைம் அவர்களும் மீப்பெரும் அறிஞராக விளங்கினார். இறைவனின் பக்கம் மக்களை அழைக்கும் தஅவாப் பணியில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது.

ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பேத்தியான ஸஈதா நஃப்ஸிய்யா ரஹிமஹால்லாஹு அவர்களிடம்ட இமாம் ஷாஃபிஈ மாணாக்கராக இருந்து கல்வி கற்றார். இஸ்லாமிய மார்க்க அறிவில் தலைசிறந்த முன்னோடியாக திகழ்ந்தவர் இமாம் ஷாஃபிஈ அவர்கள். உலகில் பின்பற்றப்படும் நான்கு இஸ்லாமிய வழிப்பாட்டைகளில் அவருடையதும் ஒன்று!.

இவர்களைப் போன்று இன்னும் பல ஸஹாபியாப் பெண்மணிகள் வரலாற்றில் மின்னுவதை பார்க்கமுடியும். உதாரணமாக, உம்மு தர்தா (ரழி). அபுத் தர்தாவின் மனைவியான இவர் அறிவார்ந்த கருத்துகளை அழகாக வெளிப்படுத்துவதில் சிறந்து

விளங்கினார். இமாம் புகாரி போன்றோரே அவருடைய அறிவை வியந்து பாராட்டியுள்ளனர்.

இதுபோன்ற எண்ணற்ற உதாரணங்களைக் கூறமுடியும். பெண்கள் படுமோசமாக நடத்தப்பட்ட ஒரு காலகட்டம் அது என்பதை மறந்துவிடவேண்டாம். வீட்டில் பெண்குழந்தை பிறந்தால் உயிரோடு குழி தோண்டி புதைத்துவந்த காலகட்டம் அது!. முஸ்லிம் பெண்கள் அக்காலகட்டத்தில் இஸ்லாமிய அறிவில் மட்டுமல்லாது மருத்துவம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தமது சுவடுகளைப் பதித்துள்ளதையும் காணமுடிகின்றது.

பெண்கள் கட்டாயம் கல்வி கற்கவேண்டும் என இஸ்லாம் வலியுறுத்தியழதான் இதற்கெல்லாம் ஒரே காரணம். இதைப்பற்றி நீங்கள் என்னதான் கருதுகிறீர்கள்?.

அது அந்தக்காலத்துக்கு மட்டுமே பொருந்தும் ஒரு உரிமை. இப்போது அதற்கெல்லாம் தேவையே இல்லை என்றா?. இஸ்லாம் வழங்கும் இந்தப் பெண்ணுரிமை பழசாகிவிட்டதா?.

5. பெண்களுக்கான சட்ட உரிமைகள்

இஸ்லாமிய சட்டத்தின்படி ஆணும் பெண்ணும் சரிசமம்!. ஆண்களுடை உயிரும் பொருளும் பெண்களுடை உயிரும் பொருளும் ஒனறுபோல பாதுகாக்கபபடும என இஸ்லாமிய ஷரீஅத் உறுதியளித்துள்ளது. ஓர் ஆண் ஒரு பெண்ணை கொன்றுவிட்டால் ஷருஅத் சட்டத்தின்படி அதற்குப் பதிலாக அவனுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும். ஓர் ஆணை கொலை செய்தவனை பழிக்குப்பழி என்ற சட்டத்தின்படி கொலை செய்யப்படுவனைப்போலவே பெண்ணைக் கொன்ற ஆணும் பழிதீர்க்கப்படுவான். ஒரு பெண் அக்கொலை காரியத்தை செய்திருந்தாலும் அவளுக்கும் அதே தண்டனையே நிறைவேற்றப்படும்.

“கொலை செய்யப்பட்டோருக்குப் பதிலாக பழிவாங்குவது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. சுதந்திர மானவனுக்குப் பதிலாக சுதந்திரமானவன்; அடிமைக்குப் பதிலாக அடிமை; பெண்ணுக்குப் பதிலாக பெண் பழிதீர்க்கப்படுவாள். கொலையானோரின் தரப்போரால் மன்னிக்கப்பட்டால் பெருந்தன்மையுடனும் நியாயமாகவும் உயிரீட்டுத்தொகை (நஷ்டஈடு) அளிக்கப்படவேண்டும். இது உங்களுடைய இறைவனின் புறத்தில் இருந்து எளிதாக்கப்பட்டதும் கருணையும் ஆகும். இதற்குப் பிறகும் யாராவது வரம்புமீறி நடந்துகொண்டால் கொடியவேதனை அவனுக்காக காத்துக்கொண்டுள்ளது. அறிவுடையோரே! நீங்கள் சட்டமீறல் செய்யாமல் பயந்துநடந்து கொண்டால் இந்தப் பழிவாங்குதலில் உங்களுக்கு ‘வாழ்வு’ இருப்பதை அறிந்துகெள்வீர்கள்!” (அல்குர்ஆன் 2:178,179).

உடல்ரீதியாக குறைபாட்டை உண்டாக்கினால் இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் ஆண்-பெண் பாகுபாடு பார்க்காமல் ஒரேமாதிரியான தண்டனையே வழங்கப்படும்.

ஒருவர் யாரையேனும் கொலை செய்துவிட்டால் பழிக்குப்பழி என்ற சட்டத்தின்படி கொன்றவரைப் பழிதீர்க்கவேண்டும். அதனை கொலையானவரின் வாரிசுதான் முடிவு செய்யவேண்டும். ஒருவேளை கொலையானவரின் வாரிசாக ஒரு பெண்மட்டும் இருந்தால் அவளுக்கும் அதே உரிமை கொடுக்கப்படும். அவள் விரும்பினால் குற்றவாளியை கொல்லச் சொல்லலாம்; இல்லையென்றால் மன்னித்து நஷ்டஈட்டையும் பெற்றுக்கொள்ளலாம். இரண்டில் எதைச் செய்யவும் அவளுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு!.

கொலையானவருக்கு பல வாரிசுகள் இருந்து அவர்களிடையே குற்றவாளியைக் கொல்வதா, விடுவதா என்று கருத்துவேறுபாடு ஏற்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். கொஞ்சம்பேர் கொன்றே ஆகவேண்டும் என்கிறார்கள். ஒருசிலரோ விட்டுவிடலாம், அதற்குப் பதிலாக நஷ்ஈடு பெற்றுக்கொள்ளலாம் என்கிறார்கள் என்றால் கொலைசெய்வது தடுத்து நிறுத்தப்படும். அப்போதும் பெண்ணுக்கு சமஉரிமை வழங்கப்படும். அவளுடைய கருத்தும் ஆணுடைய கருத்துக்கு ஒப்பாகவே மதிக்கப்படும். பாகுபாடு காட்டப்படமாட்டாது.

இதல்லாத மற்ற குற்றங்களைப் பொருத்தமட்டில் ஆண்-பெண் என்ற பாகுபாடு பார்ப்பதற்கே வழியில்லை.

அத்தியாயம் அல்மாஇதாவில்...

‘‘திருடனுடைய திருடியுடைய இரண்டு கைகளையும் அவவர்கள் செய்த குற்றத்திற்கு தண்டனையாக வெட்டிவிடுங்கள்!. அல்லாஹ்விடருந்து அவர்களுக்கு கிடைக்கும் படிப்பினைதரும் தண்டனையாகும் இது! அல்லாஹ்வோ ஆற்றல்மிக்கவனும் ஞானமுடையோனாகவும் உள்ளான்” (அல்குர்ஆன் 5:38).

திருட்டுக்குத் தண்டனையாக கைகளை வெட்டுவது ஆணென்றும் பெண்ணென்றும் பாராமல் குற்றவானி என்பதை மட்டும் கருத்தில்கொண்டு வெட்டப்படும் என்பது இவ்வசனத்திலிருந்து விளங்குகின்றது. குற்றவாளி ஆணா பெண்ணா என்றெல்லாம் கவனிக்கப்படாது.

அதேபோல மற்றொரு இறைவசனம்...

‘‘விபச்சாரம் செய்த ஆணுக்கும் விபச்சாரம் செய்த

பெண்ணுக்கும் நூறு கசையடிகளைக் கொடுக்கவேண்டும். நீங்கள் அல்லாஹ்வையும் இறுதித்தீர்ப்பு நாளையும் நம்புபவர்களாக இருந்தால் அல்லாஹ்வுடைய விஷயத்தில் தண்டனையை நிறைவேற்றுவதில் பரிதாபமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அத்தோடு அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையை இறைநம்பிக்கையாளர்களில் ஒரு கூட்டத்தின்ர் கண்ணுறவேண்டும்". (அல்குர்ஆன் 24:2).

இங்கும் ஆண்-பெண் என்ற பாகுபாடு கிடையாது. கன்னித்தன்மை இழக்காத கல்யாணமாகாத ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இஸ்லாமிய சட்டத்தின்படி ஒரே தண்டனையே வழங்கப்படும். நூறு கசையடிகள் வழங்கப்படும். கல்யாணமாக ஆணுக்கும் கல்யாணமான பெண்ணுக்கும் கல்லெறி தண்டனை வழங்கப்படும். இவ்விஷயத்தில் ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசம் பார்க்கப்படமாட்டாது.

இப்போது சாட்சி சட்டத்தை நாம் காண்போம். சாட்சியளிக்கும் உரிமையை இஸ்லாம் பெண்ணுக்கும் வழங்கியது. ஞாபத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இவ்வுரிமையை இஸ்லாம் பெண்ணுக்கு ஆயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வழங்கியுள்ளது.

யூத மதகுருமார்களான ‘ரப்பிக்கள்’ இருபதாம் நூற்றாண்டில் பெண்ணுக்கு சாட்சியளிக்கும் உரிமையை வழங்கலாமா? வேண்டாமா? என்று கூட்டம்போட்டு யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இஸ்லாமோ இவ்வுரிமையை 1500 ஆண்டகளுக்கு முன்பாகவே வழங்கிவிட்டது.

அத்தியாயம் அந்நூரில்...

“அப்பாவி வெகுளிப் பெண்கள் மீது அவதூறு சுமத்திவிட்டு அதற்கு ஆதாரமாக நான்கு சாட்சிகளைக் கொண்டுவர முடியாதவர்களுக்கு எண்பது கசையடிகளைக் கொடுங்கள். அதன்பின்று எக்காலத்திலும் அவர்களுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டாம்” (அல்குர்ஆன் 24:4).

சாதாரணமானதொரு குற்றத்திற்கு இரண்டு சாட்சிகள் போதுமானது. ஆனால் பெரியதொரு குற்றத்திற்கு நான்கு சாட்சிகள் வரை வேண்டும். பெண்கள்மீதான அவதூறுக் குற்றத்திற்கு நான்கு

சாட்சிகள் கண்டிப்பாக வேண்டும் என்று இஸ்லாம் சொல்கின்றது. ஏதேனும் ஓர் அப்பாவிப் பெண்முது போகிறபோக்கில் அவதூறுக்குற்றச்சாட்டை அள்ளி வீசிவிட்டு அவ்வளவு எளிதாக சென்றுவிடமுடியாது. நான்கு சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தியாக வேண்டும். இல்லையென்றால் இஸ்லாமிய சட்டம் உங்களை விட்டுவைக்காது.

இன்றைக்கு நல்ல நல்ல கற்புநிலை வழுவாத பெண்டிர் மீது நினைத்தவனெல்லாம் இஷ்டத்துக்கு அவதூறை அள்ளி அப்புவதைக் காணமுடிகின்றது. அப்பெண்களுடைய கற்பைப் பற்றியும் மானத்தைப் பற்றியும் மனம்போன போக்கில் குற்றம் சுமத்துவதை காண்கிறோம். சம்பந்தா சம்பந்தமில்லாமல் கண்டவர்களோடும் வெகுளிப் பெண்களைத் தொடர்பு படுத்தி பேசுவதையும் அதை கண்காது வைத்து மஹல்லாக்களிலும் மக்களிடையேயும் பரப்புவதைக் காண்கிறோம். இஸ்லாமிய ஆட்சியில் இதுபோன்ற செயலை நீங்கள் செய்தால் நான்கு சாட்சிகளைக் கொண்டவந்து நீதிமன்றத்தில் நிறுத்தியாக வேண்டும். அவ்வாறு உங்களால் சாட்சிகளைக் கொண்டவந்து நிறுத்த முடியவில்லையென்றால் உங்களுக்கு எண்பது கசையடிகள் தண்டனையாக வழங்கப்படும். அதுமட்டுமல்ல, இனி எக்காலத்திலும் நீங்கள் கூறுவதை ஷரீஅத் ஒப்புக் கொள்ளாது; காதுகொடுத்துக் கேட்காது. அந்த நான்னு சாட்சிகளில் எவனாவது ஒருவன் ஒழுங்காக சாட்சி அளிக்காவிட்டடாலும் நான்கு பேர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படும்.

பெண்களுடைய மானம் மரியாதைக்கு இஸ்லாம் எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். பொதுவாக உலக நடைமுறையின் படி கல்யாணம் ஆனதும் பெண்கள் தங்கள் பெயர்களோடு தங்களுடைய கணவர்களின் பெயர்களை எழுதிக் கொள்கிறார்கள். இதனையும் இஸ்லாம் தடை செய்கின்றது. விரும்பினால் அவள் தன்னுடைய கணவன் பெயரை எழுதிக் கொள்ளலாம். விரும்பினால் தன்னுடைய தந்தையின் பெயரை எழுதிக் கொள்ளலாம் என்று அவளுடைய விருப்பத்திற்கே விட்டுவிடுகின்றது. இஸ்லாமிய நாடுகளில் முஸ்லிம் பெண்கள் கல்யாணமான பிறகும் தமது பெயர்களோடு தமது தந்தையின் பெயரையே சூட்டியுள்ளதை இன்றும் நீங்கள் காணலாம். பெண்களுக்கு இஸ்லாம் சமஉரிமையை வழங்கியுள்ளதற்கு இதுவும்

ஓர் உதாரணம்.

இப்போது நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

இந்த உரிமைகள் எல்லாம் பெண்ணுக்கு தேவையே இல்லை என்றா? இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் காலங்கடந்தவை என்றா?.

6. பெண்களுக்கான அரசியல் உரிமைகள்

“இறைநம்பிக்கை கொண்ட ஆண்களும் இறைநம்பிக்கை கொண்ட ெண்களும் ஒருவருக்கொருவர் உற்றதோழர்கள் ஆவர். அவர்கள் நன்மைமை ஏவுகிறார்கள்; தீமைகளைவிட்டு தடுக்கிறார்கள்; தெழுமையைநிலைநாட்டுகிறார்கள்; ஜகத்தை முறைப்படி வழங்குகிறார்கள்; அல்லாஹ்வுக்கும் அவனுடை தூதருக்கும் கீழ்ப்படிகிறார்கள். இத்தகையோர் மீதுதான் அல்லாஹ் கிருபை செய்கிறான். அல்லாஹ்வோ ஆற்றல் பொருந்தியவனாகவும ஞானம் மிக்கவனாகவும் உள்ளான்” (அல்குர்ஆன் 9:71).

ஆண்களும் பெண்களும் சமுதாயக் களத்தில் மட்டுமல்லாமல் அரசியல் களத்திலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்கிக் கெள்கிறார்கள். உற்றதோழர்களாக திகழுகிறார்கள். அரசியல் நடவடிக்கைளிலும் தமது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது.

அத்தியாயம் மும்தஹினாவில்...

“நபியே! இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து, ‘அல்லாஹ்றோடு எதனையும் இணையாக்க மாட்டோம்; திருட மாட்டோம்; விபச்சாரம் புரிய மாட்டோம்; குழந்தைகளை கொல்ல மாட்டோம்; கைகல்களுக்கு இடையே அவதூறை இட்டுக்கட்டிச் சொல்லமாட்டோம்; நன்மையான செயல்களில் உங்களுக்கு மாறு செய்யமாட்டோம் என்றும் உறுதிப்பிரமாணம் செய்தால் அவர்களோடு நீங்களும் உறுதிப்பிரமாணம் (பைஅத்) செய்துகொள்வீராக!. அவர்களுக்காக இறைவனிடம் பாவமன்னிப்பு கோருவீராக! அல்லாஹ் மன்னிப்பவனாகவும் கிருபை காட்டுபவனாகவும் உள்ளான்” (அல்குர்ஆன் 60:12).

இங்கு பைஅத் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பைஅத் என்றால் இக்காலத்தில் நடைபெறும் தேர்தலையும் கருத்தில்

கொள்ளலாம். இறைவனின் தூதர் அல்லாஹ்வின் தூதராகவும் இருந்தார்கள். ஆட்சியை நிர்வகிக்கும் தலைமை ஆட்சியாளராகவும் இருந்தார்கள். அவர்களுடைய ஆட்சித் தலைமையை அங்கீகரிக்கும் ஒரு நிகழ்வாகவே பைஅத் கருதப்பட்டது. அப்படியெனில் அக்காலத்தல் இஸ்லாம் பெண்களுக்கு ‘ஓட்டுரிமை’யையும் வழங்கியிருக்கின்றது.

சட்டமியற்றும் சபைகளில் கலந்து கொள்தவற்கான அனுமதியையும் பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியிருக்கின்றது. ஆதாரப்பூர்வமான ஓர் அறிவிப்பின்படி,

“ஒருமுறை பள்ளிவாசலில் மஹர் தொகை தொடர்பாக ஒரு கலந்தாய்வை உமரவர்கள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். மஹர் தொகையை கட்டுப்படுத்தி குறைந்தபட்ச மஹர் தொகையை நிர்ணயிக்கவேண்டும் என்பது உமரின் ஆவலாக இருந்தது. இளம் வாலிபர்களுக்கு மஹர் காரணமாக திருமணம் முடிப்பது சிரமமாக இருந்தே காரணம். அப்போது ஒரு பெண் எழுந்துநின்று, திருக்குர்ஆனிலுள்ள கீழ்வரும் வசனத்தை ஓதிக் காண்பித்தார்.

“ஒரு மனைவியை விட்டுவிட்டு இன்னொரு மனைவியை நீங்கள் கல்யாணம் செய்துகொள்ள நினைத்தால் அவளுக்கு மஹராக ஒரு குவியலையே கொடுத்திருந்தாலும் அதிலிருந்து ஒன்றையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டாம்” (அல்குர்ஆன் 4:20)

ஓதிநிறுத்திய பிறகு அப்பெண்மணி கூறினார், ‘குவியல் குவியலாக மஹர் கொடுக்குமாறு குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. நீங்கள் அதைக் குறைக்கவா நினைக்கிறீர்கள்? அதைச்செய்ய உமருக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது?’.

‘உமர் செய்ய நினைத்தது தவறு, இப்பெண்மணி சொன்னதுதான் சரி’ என்று சொல்லியவாறு, உடனே உமர் தன்னுடைய கருத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

ஒரு சதாரண பெண்மணிக்கு இத்துனை அதிகாரம் செல்வாக்கு இருந்திருக்கின்றது. புகழ்பெற்ற எல்லோருக்கும் தெரிந்த ஒரு பெண்மணியாக இருந்திருந்தால் அவருடைய பெயர் அறிவிப்புகளில் குறிப்பிடப் பட்டிருக்கும். யாருக்கும் தெரியாத ஒரு சாதாரண பெண்மணியாக இருந்ததினால்தான் பெயர்கூட குறிப்பிடப்படவில்லை. அப்படியெனில், ஒரு சாதாரண

பெண்மணிக்கு இந்தளவு அதிகாரம் இஸ்லாமிய ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கின்றது. தலைமை ஆட்சியாளருக்கு எதிராக தன்னுடைய கருத்தை தைரியமாக அப்பெண்மணி வெளியிட்டிருக்கிறார். ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்.

இப்போது நாம் பயன்படுத்தும் தொழில் நுட்ப வார்த்தைகளைப் பயன்படுத்தி சொல்லவேண்டுமென்றால் அப்பெண்மணி ‘சட்டமீறலை’ எதிர்த்து குரல் கொடுத்திருக்கிறார். ஆம். இஸ்லாத்தைப் பொருத்தவரைக்கும் திருக்குர்ஆன்தான் சட்டம். குர்ஆனின் ஒரு வசனத்திற்கு எதிராக சட்டம் இயற்றப்படுவதை எதிர்த்திருக்கிறார். அச்சட்டம் உருவாகாமல் தடுத்திருக்கிறார். சட்ட இயற்றலில் பங்கெடுத்திருக்கிறார்.

போர்க்களத்திற்கே போய் முஸ்லிம்பெண்கள் சேவையாற்றியிருக்கிறார்கள். புகாரியில் ஒரு அத்தியாயமே இத்தகைய பெண்களைப்பற்றி கூறுகின்றது. போர்க்களத்தில் பெண்கள் படைவீரர்களுக்கும் முஜாஹிதீன்களுக்கும் நீர் புகட்டியிருக்கிறார்கள். காயம்பட்ட படைவீரர்களுக்கு மருத்துவம் பார்த்திருக்கிறார்கள்.

உஹத் போர்க்களத்தில் அண்ணலாரை எதிரிகளிடமிருந்து பாதுகாத்த பெருமையை சில சஹாபாக்கள் பெற்றார்கள். அவர்களில் நுசைபா என்ற சஹாபாப் பெண்மணியின் பயரும் உள்ளது. அவரும் அப்பெருமையைப் பெற்றார். வீராங்கனை.

பெண்களைப் பாதுகாகும் பொறுப்பை இஸ்லாம் ஆண்களிடம் ஒப்படைத்திருப்பதால் பெண்கள் பொதுவாக போர்க்களங்களுக்கு செல்வதில்லை. அனுப்பவும் கூடாது. ஏதேனும் குறிப்பிட்ட சிறப்பு சூழல்களில் அதுவும் தவிர்க்கமுடியாத சூழல்களில்தாம் போர்க்களத்திற்கு சென்று பணியாற்ற பெண்களுக்கு அனுமதி உண்டு!. வாளேந்தி போராடுவது பொதுவாக ஆண்கள் மீதுதான் கடமையாகும். அப்பொறுப்பை ஆண்மகன்தான் நிறைவேற்றவேண்டும். இல்லையென்றால் இன்றைக்கு அமெரிக்காவில் நடப்பதுதான் நடக்கும்.

போர்க்களத்திற்கு வரலாம் எனும் அனுமதி 1901 ஆமாண்டு அமெரிக்கப் பெண்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் அப்போரில் கலந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. மருத்துவ தாதிகளாக அவர்கள் பணியாற்றவே அனுமதி. அதன்பின்பு

பெண்ணுரிமைப் போராளிகள் தலைதூக்கினர். படையில் சேர்ந்து இராணுவப் பணியற்ற பெண்களும் அனுமதிக்கப்படவேண்டும் என அவர்கள் குரல் கொடுக்கலாயினர். 1973 ம் ஆண்டு இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. 1976 ம் ஆண்டு பெண்கள் இராணுவத்தில் சேர்ந்து போரிடவும் போர்க்களம் செல்லவும் அனுமதியை அமெரிக்க அரசாங்கம் வழங்கியது.

அப்புறம் என்ன ஆனது?

1993 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட ஒரு அறிக்கையின்படி ஒரு இராணுவக் கூட்டத்தில் 90 பேர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார்கள். அவர்களில் 83 பேர் பெண்கள். 117 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. ஒரு கூட்டத்தில் 83 பெண்கள் மீது பாலியல் முறைகேடு நடத்தப்பட்டது, 117 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது எனில், நிலைமை என்னாவது?. அவர்கள் என்ன செய்தார்கள் என்று அறிந்து கொள்கிறீர்களா?.

பெண்களுடைய உடைகளை அவர்கள் கிழித்தெறிந்தார்கள். நிர்வாணமாக பரேடு போகும்படி வற்புறுத்தினார்கள். பகிரங்கமாக பலர் முன்னிலையில் அப்பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டார்கள்.

இதுதான் பெண்ணுரிமையா? பெண்களுக்கு கிடைத்தாகவேண்டிய உரிமைகள் இதுதானா? இவற்றைத்தான் அவர்கள் பெண்ணுரிமை என்று சொல்வார்களேயானால் அவ்வுரிமைகள் எங்களுக்கு வேண்டாம். வெகுதூரத்தில் நின்றவாறே நாங்கள் அதற்கு விடைகொடுத்துவிடுகிறோம்.

எங்களுடைய தாய்மார்களுக்கும் சகோதரிகளுக்கும் மகள்களுக்கும் இந்தமாதிரியான நிலைமை ஒருபோதும் ஏற்படக்கூடாது என்று நாங்கள் நினைக்கிறோம். மேற்கண்ட சம்பவத்திற்குப் பிறகு அமெரிக்காவில் போராட்டங்கள் வெடித்தன. பார்லிமெண்ட்டில் விவாதம் நடைபெற்றது. அப்போதைய அதிபர் கிளிண்டன் அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார். சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசியல்வாதிகள் சொன்னால் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியாதா, என்ன?.

தவிர்க்கவே முடியாத சூழ்நிலைகளில்தான் போர்க்களத்திற்கு பெண்கள் வரலாம் என்று இஸ்லாம் அனுமதி அளிக்கின்றது. ஆனால், அங்கேயும் அவர்கள் இஸ்லாமிய ஒழுங்கோடுதான் இருந்தாகவேண்டும். ஹிஜாப் மற்றுமேனைய இஸ்லாமிய பண்பாட்டை கட்டாயம் அவர்கள் பேணியாகவேண்டும்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் மீண்டுமொருமுறை நான் ஒரு விஷயத்தை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். முன்பே அதை நான் குறிப்பிட்டுள்ளேன். இஸ்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகள் உண்டு என்றுதான் சொல்கின்றது. சரிநிகர் என்ற சொல்லவில்லை.

ஒரு வகுப்பில் இரண்டு மாணவர்கள் சரிசமமான மதிப்பெண்கள் எடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அ எனும் மாணவன் 80 சதவீதம் மதிப்பெண்களைப் பற்றுள்ளான். ஆ எனும் மாணவனும் அதே 80 சதவீத மதிப்பெண்களைப் பெற்றுள்ளான். நூற்றுக்கணக்கான மாணவர்கைளில் ‘அ’வும் ‘ஆ’வும்தான் முதலிடத்தை பெற்றுள்ளார்கள்.

வினாத்தாளை நீங்கள் வாங்கிப் பார்க்கிறீர்கள். வினாத்தாளில் மொத்தம் பத்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் பத்து மதிப்பெண்கள்.

முதல் கேள்விக்கு ‘அ’ பத்துக்கு ஒன்பது மதிப்பெண்களைப் பெற்றுள்ளான். ‘ஆ’ பத்துக்கு ஏழு மதிப்பெண்களைப் பெற்றுள்ளான். ஆக, முதல் கேள்வியைப் பொருத்தவரை ‘அ’, ‘ஆ’வைவிட சிறப்பாக உள்ளான்.

இரண்டாம் கேள்விக்கு ‘அ’ பத்துக்கு ஏழு மதிப்பெண்களையும் ‘ஆ’ பத்துக்கு ஒன்பது மதிப்பெண்களையும் பெற்றுள்ளார்கள். இரண்டாவது கேள்வியைப் பொருத்தவரை ‘அ’வை விட‘ஆ’ உயர்ந்து உள்ளான்.

மூன்றாவது கேள்விக்கு இருவருமே பத்துக்கு எட்டு என்று சரிசமமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்.

எல்லா மதிப்பெண்களையும் ஒட்டுமொத்தமாக கூட்டிப்பார்த்தால் இருவரும் எண்பது மார்க் பெற்றுள்ளார்கள். சில கேள்விகளுக்கு ‘அ’ சிறப்பான மார்க்குகளையும் சில கேள்விகளுக்கு ‘ஆ’ சிறப்பான மார்க்குகளையும் பெற்றுள்ளார்கள். ஒட்டுமொத்தமாக

இருவரும் எண்பது மார்க்குகளைப பெற்றுள்ளார்கள். சரிசமமான மதிப்பெண்கள்.

ஆண்களும் பெண்களும் இம்மாதிரிதான். சில விஷயங்களில் ஆண் சிறந்து விளங்குகிறான். சில காரியங்களில் ெண் சிறந்து விளங்குகிறாள். ஒரே தட்டில் வைத்துப் பார்த்தால் இருவரும் சமமானவர்களே!. எடுத்துக்காட்டாக, உடல் அளவில் ஆணுக்கு அல்லாஹ் வலிமையைக் கொடுத்துள்ளான். உங்கள் வீட்டில் ஒரு திருடன் நுழைந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். உங்களுடைய அம்மாவோ அக்காவோ பெண்டாட்டியோ தங்கையோ அவனைப் பார்த்துக் கெள்ளட்டும் என்று நீங்கள் சும்மா இருந்து விடுவீர்களா?. ஆணும் பெண்ணும் சரிசமம் என்ற கொள்கையில் உங்களுன்னு ஆழமான பிடிப்பு இருக்கின்றது என்றாலும் கூட நீங்கள்தான் அந்தத் திருடனை எதிர்கொள்வீர்கள். உங்கள் வீட்டுப் பெண்களை அனுப்ப மாட்டீர்கள். வேண்டுமென்றால் பெண்கள் உங்களுக்கு உதவி செய்யக்கூடும். ஏனென்றால் உடலளவில் நீங்கள் தான் பலசாலியாக உள்ளீர்கள்.

ஆக, உடலைப் பொருத்தவரை ஆண், பெண்ணைவிட வலிமை உடையவன்.

பெற்றோர்களைப் பேணவேண்டும்; அவர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தவேண்டும் என்றெல்லாம் இஸ்லாம் சொல்கின்றது. ஆனால், தந்தையைவிட தாய்க்கு அதிக மரியாதையையும் மதிப்பையும் தரச் சொல்கின்றது. தாயே அதிக மரியாதையைப் பெறுகிறார்.

ஆக, இவ்விஷயத்தில் ஆணைவிட ஒருபடி மேலாக பெண்ணை இஸ்லாம் வைத்துள்ளது. ஆணும் பெண்ணும் சமமென்று இஸ்லாம் சொல்கின்ற விதம் இதுதான். சில விஷயங்களில் ஆண் மேலானவன் என்றால் சில விஷயங்களில் பெண் மேலானவள்.

மிகச்சுருக்கமாக நான் உங்களுக்கு இஸ்லாம் அளிக்கின்ற பெண்ணுரிமையைப் பற்றி விளக்கியுள்ளேன். விரிவாக விளக்க இங்கு இடமில்லை.

முஸ்லிம்களின் சமூக அமைப்பில் இதற்கு நேர்மாற்றமான நிடைல நிலவுகின்றதே என்றொரு கேள்வி எழலாம். பெரும்பாலான

முஸ்லிம் சமூகங்களில் பெண்களுக்குரிய உரிமைகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் முஸ்லிம் சமூகங்கள் திருக்குர்ஆனையும் நபிவழியையும் அறவே பின்பற்றாமல் இருப்பதுதான்!.

இந்நிலைமைக்கு ஒரு வகையில் மேற்குலகமும் காரணம் எனலாம். ஏனெனில் மேற்குலகில் பெண்ணுக்கு ஏற்பட்ட கதியைக் கண்ட பின்பு மற்றநாடுகள் தேவைக்கும் அதிகமாக பெண்கள விஷயத்தில் கடுமையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டன. அவள்மீதான கட்டுப்பாடுகளை அதிகரித்துவிட்டன. ஒருசில நாடுகள் மேலை நாகரீகத்தை பின்பற்றத் துவங்கின. அதனுடைய பண்பாட்டை கடைப்பிடித்தன. அதனால் ஏற்பட்ட விளைவுகள் தனிக்கதை!.

மேலை நாகரீகத்தை மேலானது என்று எண்ணிக்கொள்வோருக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அஇஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை நீங்கள் கவனமுடன் ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால் அவை அ னைத்தும் காலம் கடந்தவையோ தேயற்றவையோ அல்ல, மாறாக, நவீன கால சூழல்களுக்கும் தேவைப்படுகின்ற நிகழ்காலத்திற்கும் தேவைப்படுகின்ற உரிமைகளே என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

நான் உங்களுக்கு முன்னால் முடிந்தளவு இஸ்லாமியக் கருத்துகளை வைக்கிறேன் என்றால் அதற்க என்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய என்னுடைய தாயார் திருமதி ரோஷன் நாயக் அவர்களே முழுக்காரணம். அவர்களுடைய அன்பும் அக்கறையும் கவனிப்பும்தான் நான் இந்தளவு உருவாகக் காரணம்.

என்னுடைய தந்தை டாக்டர் அப்துல் கரும் நாயக் அவர்களையும் நான் கட்டாயம் நினைவு கூரவேண்டும். இல்லையென்றால் நான் நன்றி மறந்தவனாகிவிடுவேன். அவ்வாறே என்னுடைய சகோதரர் டாக்டர் முஹம்மத் நாயக்கிற்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

திருமணத்திற்குப் பிறகு தொடர்ந்து என்னை உத்வேகப்படுத்திவரும் என்னுடைய இல்லத்துணைவிக்கும் நான் நன்றி சொல்லியாகவேண்டும்.

கேள்வி பதில்கள்

கேள்வி: - சொர்க்கததில் ஆண்களுக்கு அழகான ஹுர்கள் கிடைப் பார்கள். பெண்களுக்கு சொர்க்கத்தில் எனன கிடைக்கும்?.

பதில்: - அதாவது, ஆண்கள் சொர்க்கம் ன்றால் அவர்களுக்கு 'ஹுர்' அதாவது அழகான பெண்கள் கிடைப்பார்களா. பெண்கள் சொர்க்கத்திற்கு சென்றால் அவர்களுக்கு என்ன கிடைக்கும்? என்பது தான் இந்த சகோதரி கேட்டுள்ள கேள்வி.

'ஹுர்' எனும் சொல்லை நான்கு இடங்களில் குர்ஆன் பயன் படுத்தியுள்ளது.

அத்தியாயம் 44 வசனம் 54

அத்தியாயத் 52 வசனம் 25

அத்தியாயம் 55 வசனம் 50, 72

அத்தியாயம் 56 வசனம் 22

'அழகிய கன்னியர்' என்றே ஏறக்குறைய எல்லா குர்ஆன் விரி வுரையாளர்களும் இச்சொல்லை மொழிபெயர்த்துள்ளார்கள். அழகிய பெண் என்று நாம் இதற்கு அர்த்தம் வைத்தால் பெண் களுக்கு என்ன கிடைக்கும் என்ற கேள்வி இயல்பாகவே எழும்.

உண்மை என்னவென்றால், அச்சொல்லுக்கு 'அழகிய கன்னியர்' என்ற பொருள் மட்டும் கிடையாது. ஹுர் என்ற சொல் பன்மைச் சொல்லாகும். அதனுடைய ஒருமை அஹ்வர் மற்றும் ஹவ்ர் ஆகும். அஹ்வர் என்பது ஆண்பால். ஹவ்ர் என்பது பெண்பால். இவ் விரண்டுக்கும் பன்மை ஹுர் என்ற ஒரு சொல்லே!.

இச்சொல்லின் மொழிப்பொருள் 'அழகிய பெரிய விழிகள்' என்பதாகும். இச்சொல்லோடு பல்வேறு இடங்களில் குர்ஆனில் 'அஜ்வாஜ்' என்ற சொல்லும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அத் தியாயம் 2, வசனம் 25 மற்றும் அத்தியாயம் 4, வசனம் 57 போன்ற வற்றைக் காண்க!.

ஜவ்ஜ் என்ற வார்த்தையின் பன்மைதான் அஜ்வாஜ். ஜவ்ஜ் என்றால்

இணை என்று பொருள். வாழ்க்கைத் துணையாக வருபவள் ஆதலால் மனைவியை ஜவ்ஜ் என்கிறோம். ஆணுக்கு பெண் ஜவ்ஜ் என்றால் பெண்ணுக்கு ஆண் ஜவ்ஜ் ஆவான். அல்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் இச்சொல்லை மிகச்சரியாக மொழிபெயர்த்துள்ளார்கள். உதாரணமாக, முஹம்மத் அஸத் இச்சொல்லை *Spouse* அப்துல்லாஹ் யூஸுஃப் அலி *Companion* என்று மொழிபெயர்த்துள்ளார். இவ்விரண்டு சொற்களும் எந்த பால் வேறுபாட்டையும் காண்பிப்பதில்லை. இச்சொல் ஆண்பாலுக்கும் பயன்படுத்தப்படும். பெண்பாலுக்கும் பயன்படுத்தப்படும்.

அதன்படி, ஆண்களுக்கு சொர்க்கத்தில் அழகிய பெருவிழி கன்னியர் கிடைப்பார்கள். பெண்களுக்கு சொர்க்கத்தில் அழகிய பெருவிழி காளையர் கிடைப்பார்கள்.

....

கேள்வி: - சாட்சியளிக்கும் போது ஆணுக்கு வழங்கப்பட்ட உரிமையில் பாதியே பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது இரண்டு பெண்களின் சாட்சி ஓர் ஆணுடைய சாட்சிக்கு நிகராக கருதப்படுகின்றது. ஏன்?

பதில்: - இரண்டு பெண்களுடை சாட்சி ஓர் ஆணுடைய சாட்சிக்கு ஒப்பானதாக கருதப்படுவது ஏன் என்பது நம்முடைய சகோதரரின் கேள்வி.

முதலில் ஒரு விஷயத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எல்லா இடங்களிலும் எல்லா பிரச்சனைகளிலும் இரண்டு பெண்களின் சாட்சியத்தை ஓர் ஆணுடைய சாட்சிக்கு நிகரானதாக கருதப்படுவதில்லை. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தான் இவ்வாறு மதிப்பிடப்படுகின்றது. ஆண், பெண் என்று பால் வேறுபாடு பார்க்காமல் ஐந்து இடங்களில் குர்ஆன் சாட்சியளிப்பதைப் பற்றி பேசுகின்றது.

சில இடங்களில் இரண்டு பெண்களின் சாட்சியத்தை ஓர் ஆணுடைய சாட்சியத்துக்கு ஒப்பாக கருதுகின்றது. உதாரணமாக, அத்தியாயம் அல்பகறாவில் வசனம் 282ல்...

‘‘இரண்டு ஆண்களின் சாட்சியத்தை அதற்காக பெற்றுக் கொள்ளுங்கள். இரண்டு ஆண்கள் இல்லையென்றால் ஓர் ஆணோடு நீங்கள் விரும்பும் இரண்டு பெண்களை சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள். எனில், அவ்விருவரில் ஒருவர் மறந்துவிட்டாலும் மற்றவர் நினைவுபடுத்துவார்’’ (அல்குர்ஆன் 2:282).

அத்தியாயம் அல்பகராவிலுள்ள இவ்வசனம் பொருளாதாரம் தொடர்பான விஷயத்தைப் பற்றி மட்டுமே பேசுகின்றது. காசுபணம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் மட்டும்தான் இரண்டு பெண்களின் சாட்சியானது ஓர் ஆணின் சாட்சிக்கு ஒப்பானதாக கருதப்படும். இன்னும் சொல்லப்போனால் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட காரியங்களில் இரண்டு ஆண்களையே சாட்சியாக்குங்கள். அப்படி இரண்டு ஆண்கள் கிடைக்காவிட்டால் ஓர் ஆணையும் இரண்டு பெண்களையும் சாட்சியாக்கிக் கொள்ளுங்கள் என்றுதான் இங்கு கூறப்பட்டுள்ளது.

ஓர் உதாரணத்தின் மூலமாக நான் இதை விளக்குகிறேன். நீங்கள் ஒரு சர்ஜரியையோ ஓர் ஆபரேஷனையோ செய்யவேண்டியுள்ளது. சர்ஜரிக்கு முன்பாக மருத்துவ நிபுணர்கள் இரண்டு பேரையாவது கலந்து கொள்ளலாம் என்று உங்களுக்கு இயல்பாக தோன்றுகின்றது. ஆனால், ஒரேஒரு சர்ஜரி டாக்டர்தான் கிடைத்தார். அந்த டாக்டரிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டதோடு இரண்டு சாதாரண எம்பிபிஎஸ் டாக்டர்களிடமும் ஆலோசனை கேட்டுக்கொண்டீர்கள். ஏன் என்றால் இரண்டு எம்பிபிஎஸ் டாக்டர்களிடம் ஆலோசனை கேட்பதைவிட ஒரு சர்ஜரி டாக்டரின் ஆலோசனை மேலானது என நீங்கள் எண்ணுவதுதான்!.

சாட்சி பிரச்சனையும் ஏறக்குறைய இது போன்றதுதான். வருமானம் ஈட்டுவதையும் பொருளாதாரம் சம்பாதிப்பதையும் இஸ்லாம் ஆண்களின் மீது கடமையாக்கியுள்ளது. ஆகையால், ஓர் இஸ்லாமிய சமூகத்தில் ஆண்கள்தாம் பொருளாதார அறிவையும் அனுபவத்தையும் பெற்றிருப்பார்கள். பெண்களை அதிகம் பெற்றிருப்பார்கள். இதன் காரணமாகத்தான் பொருளாதார விஷயத்தில் இரண்டு ஆண்களுடைய சாட்சியத்திற்கு இஸ்லாம் முக்கியத்துவம் அளிக்கின்றது. அத்தியாயம் அல்மாஇதாவில் கீழ்க்கண்ட வசனத்தை வாசித்துப் பாருங்களேன்.

“இறைநம்பிக்கையாளர்களே! உங்களில் யாரேனும் மரணத் தருவாயை அடைந்துவிட்டால் வஸிய்யத் இறுதிச்சாசனம் எழுதி வைக்க அவர் நினைத்தால் நடுநிலைமிக்க இரண்டு ஆண்களை சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது பூமியில் பயணம் செய்யும்போது மரணம் ஏற்படக்கூடுமென்றால் உங்களைச்சாராத வேறு இருவர் சாட்சிகளாய் இருக்கட்டும்” (அல்குர்ஆன் 5:106).

இங்கும் பிரச்சனை பொருள் சார்ந்ததாக இருப்பதால் ஆண்களை

சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. இதை மனதில் கொண்டுதான் ஒருசில மார்க்க சட்டவியலாளர்கள் ‘கொலைக் குற்றம்’ ‘விபச்சாரத்திற்கான தண்டனை’ போன்றவற்றிற்கான தண்டனையை நிறைவேற்றுவதற்கும் இதே விதியை பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதாவது, இரண்டு பெண்களின் சாட்சியத்தை ஓர் ஆணுடைய சாட்சியத்திற்கு ஒப்பாக கருதப்பட வேண்டும்.

ஆக, இரண்டே இரண்டு பிரச்சனைனகளில் இரண்டு பெண்களுடைய சாட்சி ஓர் ஆணுடைய சாட்சிக்கு நிகரானதாக கருதப்படும்.

(1) பொருள்சார்ந்த பிரச்சனைகள்

(2) கொலைத்தண்டனை பிரச்சனைகள்

எல்லா இடங்களலும் இரண்டு பெண்களுடைய சாட்சியம் ஓர் ஆணுடைய சாட்சிக்கு நிகராகவே கருதப்படும் என்றும் சிலர் கருத்து தெரிவிக்கிறார்கள். ஆனால், குர்ஆனை முழுமையாக வாசித்துப் பார்த்தால் அவர்களுடைய கூற்று சரியல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சாட்சி தொடர்பாக குர்ஆன் என்னதான் கூறுகின்றது என்று பார்ப்போம்.

அத்தியாயம் அந்நூரில்...

“தங்களைத் தவிர வேறுவெளியாட்கள் இல்லாமல் தங்களுடைய மனைவியர் மீது குற்றஞ்சுமத்துவோர் ‘தாங்கள் உண்மையாளர்கள் தாம்’ என்பதற்கு நான்கு முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யவேண்டும். ஐந்தாவது முறை ‘ஒருவேளை தான் பொய்யனாக இருந்தால் தன்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்!’ என்று கூறவேண்டும்.

அவள் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்து, ‘அவன் பொய்யனே!’ என்று நான்குமுறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யவேண்டும். ஐந்தாவது முறை, ‘அவன் சொல்வது உண்மை யென்றால் அல்லாஹ்வின் சாபம் தன்மீது உண்டாகட்டும்!’ என்று கூற வேண்டும்”. (அல்குர்ஆன் 24:6-9).

ஓர் ஆண் தன்னுடைய மனைவி மீது குற்றஞ்சுமத்தினாலும் ஒரு பெண் தன்னுடைய கணவன் மீது குற்றஞ்சுமத்தினாலும் இருவருடைய சாட்சியும் ஒன்றுபோலவே கருதப்படும் என்பதையே இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்கிறோம்.

அவ்வாறே, பிறையைப் பார்த்து சாட்சி சொல்வதிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் கிடையாது. ரமழானுடைய பிறைக்கு ஒரு சாட்சியும் ஷவ்வாலுடைய பிறைக்கு இரண்டு சாட்சிகளும் தேவை என்று சில சட்டவியலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், அச் சாட்சிகள் ஆணாகவும் இருக்கலாம். பெண்ணாகவும் இருக்கலாம்.

இன்னும் ஒருசில பிரச்சனைகளில் பெண் மட்டுமே சாட்சியளிக்க முடியும். அதாவது இறந்துபோனோரை அடக்கம் செய்வது போன்ற முழுக்க முழுக்க பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் பெண் தான் சாட்சியளித்தாக வேண்டும். இத்தகைய காரியங்களில் பெண் களுடைய சாட்சியத்தையே ஒப்புக்கொண்டாக வேண்டும்.

கொடுக்கப்பபட்ட பதிலை சரியானபடி நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

....

கேள்வி:- பலபெண்களை திருமணம் செய்துகொள்வதற்கு இஸ்லாம் ஏன் அனுமதி அளித்துள்ளது? அதாவது பலதார மணத் திற்கான அனுமதியை ஏன் இஸ்லாம் அளித்துள்ளது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

பதில்:- அதாவது, பல பெண்களை திருமணம் முடித்துக்கொள்ள ஏன் இஸ்லாம் அனுமதி அளித்துள்ளது? ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை திருமணம் முடித்துக்கொள்ள ஆண்களுக்கு இஸ்லாம் ஏன் அனுமதியை வழங்குகின்றது என்பது இந்த சகோதரியின் கேள்வி.

Polygamy என்ற சொல்லை இந்த சகோதரி பயன்படுத்தியுள்ளார். *Polygamy* என்றால் ‘பலதார மணம்’ எனப்பொருள். ஓர் ஆண் பல பெண்களை திருமணம் செய்துகொள்வதை *Polygamy* என்ற இந்த சொல் குறிக்கும். ஒரு பெண் பல ஆண்களை திருமணம் செய்து கொள்வதை *Polyendry* என்ற சொல் குறிக்கும். அப்படியெனில், இரண்டு வகையான பலதார மணங்களும் சாத்தியப்படலாம். இருப் பினும் அவற்றில் ஒன்றைப்பற்றியே அதாவது, ஓர் ஆண் பல பெண் களை திருமணம் முடிப்பதைப் பற்றியே இங்கு இந்த சகோதரி கேள்வி கேட்டுள்ளார்.

முதலில் ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். உலகிலுள்ள வேதங்களில் ஒருதார மணத்தை வலியுறுத்துகின்ற ஒரே வேதமறை குர்ஆன்தான்!. வேறு எந்த வேதமும் ஒருதார மணத்தை

வற்புறுத்துவது கிடையாது.

புள்ளிவிபரக் கணக்கை எல்லாம் ஓரமாக வைத்துவிட்டு பார்க்கவேண்டியதைப் பார்ப்போம். எதற்காக இஸ்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணமுடித்துக் கொள்ளலாம் எனும் அனுமதியை ஆண்களுக்கு வழங்கியிருக்கின்றது?. ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல உலகத்திலேயே ஒருதிருமணத்தை வலியுறுத்துகின்ற ஒரே சமயநெறி இஸ்லாம் மட்டுமே!.

அத்தியாயம் அந்நிஸாவில்...

"அநாதைகளின் விஷயத்தில் நீதமாக நடக்கமுடியாது எனத் தெரிந்தால் உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாகவோ மூன்றுமூன்றாகவோ நான்கு நான்காகவோ மணமுடித்துக் கொள்ளுங்கள். நடுநிலையோடு நடப்பது கடினம்என்று எண்ணினால் ஒன்றையே போதுமக்கிக் காள்ளுங்கள். அல்லது வலக்கரம் சொந்தமான பெண்களோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அநீதம் செய்வை விட்டும் இதன்மூலம் தப்பித்துக் கொள்ளலாம்" (அல்குர்ஆன் 4:3).

'ஒன்றோடு போதுமக்கிக் காள்ளுங்கள்!' என்று இந்தக் கட்டளையை குர்ஆனைத் தவிர உலகிள் வேறு எந்ா வேதப் புத்தகமும் வழங்கவில்லை. எந்த புனித நூலும் வரையறுக்கவில்லை. இஸ்லாத்தின் வருகைக்கு முன்பு அரபுக்கள் பல பெண்களை மணமுடித்துக் கொண்டிருந்தனர். சில பேரோ நூற்றுக் கணக்கில் மனைவிகளை வைத்திருந்தனர்.

ஒருபக்கம் ஒரே திருமணத்தோரு போதுமாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறிய இஸ்லாம் இன்னொரு பக்கம் அப்படியே ஒன்றக்கு மேற்பட்ட திருமணம் செய்திருந்தாலும் அது நான்கோடு நிற்கட்டும் என்ற எல்லையையும் வகுத்தது. அதுமட்டுமல்லாமல் நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு மனைவிகளை மணமுடித்துக் கொண்டால் அவர்களிடையே மிகமிக நீதமாக நடந்துவரவேண்டும். அவ்விதம் நடுநிலை தவறாத நீதத்துடன் உங்களால் நடக்கயியலாது என்று பயந்தால் ஒன்றோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

அத்தியாயம் அநநிஸாவில் அல்லாஹு¬த்தஆலா கூறுகிறான்,

“மனைவியரிடையே நீதத்துடன் நடந்துகொள்ள என்னதான் நீங்கள் முயற்சித்தாலும் உங்களால் அது இயலாது. அதற்காக ஒரேயடியாக ஒரு பக்கமே நீங்கள் சாய்ந்துவிடவும் கூடாது. இன்னொருவளை அந்தரத்தில் தொங்கவிட்டுவிடக் கூடாது. சீராகவும் இறைவனுக்குப் பயந்தும் நிங்கள் நடந்துகொண்டால் இறைவன் மன்னிப்போனாகவும் கருணைபுரிபவாகவும் உள்ளான்” (அல்குர்ஆன் 4:129).

ஆக, பலதார மணம் என்பது பொதுவிதி கிடையாது. அது ஒரு விதிவிலக்கே ஆகும். பொதுவாக இஸ்லாம் பலதாரங்களை மணந்துகொள்ளுமாறு வலியுறுத்துகின்றது என்றே பலரும் கருதிக் கொண்டுள்ளார்கள்.

செயல்களை ஐந்து வகைப் படித்தரங்களாக அல்லது நிலைகளாக இஸ்லாம் பிரிக்கின்றது. அவற்றையும் தெரிந்து கொள்வோம்.

முதலாவது நிலை, ‘ஃபர்ளு’ ஆகும். அதாவது கட்டாயம் செய்தே ஆகவேண்டிய செயல்கள்.

இரண்டாவது நிலை, ‘முஸ்தஹப்பு’ ஆகும். அதாவது இச்செயல்கள் ஃபர்ளுகள் அல்ல. ஆயினும், இவற்றைச் செய்வது விரும்பத்தக்கது. இவற்றைச் செய்யுமாறு இஸ்லாமிய ஷரீஅத் வலியுறுத்துகின்றது. தூண்டுகின்றது.

மூன்றாவது நிலையிலுள்ள செயல்களை செய்யுமாறு இஸ்லாம் வலியுறுத்தவுமில்லை; செய்யவேண்டாம் எனத் தடுக்கவுமில்லை. இடைப்பட்ட செயல்கள் அவை.

நான்காம் நிலையிலுள்ள செயல்கள் ‘மக்ரூஹ்’ என அழைக்கப்படுகின்றன. அவற்றை செய்யாமல் இருப்பதே நலம். செய்யாதிருக்குமாறு இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

ஐந்தாம் நிலையில் உள்ள செயல்கள் ‘ஹராம்’ அதாவது தடுக்கப்பட்டவையாகும். அவற்றை எந்நிலையிலும் செய்யவே கூடாது. செய்தால் குற்றமாக கருதப்படும்.

நாம் பார்த்து வருகின்ற இந்த பலதாரமணம் மூன்றாவது நிலையான ‘இடைப்பட்ட நிலை’யிலுள்ளது. இந்தச் செயலை

செய்யுமாறு திருக்கர்ஆனோ நபிமொழிகளோ வலியுறுத்தவும் இல்லை; செய்யவே கூடாது என்று வன்மையாக தடுக்கவுமில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை புரிகின்ற முஸ்லிம் ஒரேஒரு திருமணத்தையே செய்துகொண்ட முஸ்லிமை விட மேம்பட்டவன் என்று குறிப்பிடுகின்ற திருக்குர்ஆன் வசனங்களையோ நமிமொழிகளையோ நம்மால் காண இயலாது.

ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்களை செய்துகொள்ளுமாறு இஸ்லாம் ஏன் அனுமதியை வழங்கியுள்ளது என்று சற்றே ஆராய்ந்து பார்ப்போம், வாருங்கள்!.

இயற்கையாகவே ஆண்களும் பெண்களும் சரிசம விகிதத்தில்தான் பிறக்கிறார்கள். ஆனால், நவீன மருத்துவம் விளக்குவதைப்போல, பெண் குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தியானது ஆண் குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தியை விட அதிகமாகவும் விரியமாகவும் உள்ளது. நோய்க் கிருமிகளையும் வைரஸ்களையும் எதிர்த்துப் போராடும் குணம் ஆண்குழந்தைகளை விட பெண் குழந்தைகளுக்கே அதிகமாக உள்ளது. உடல்நிலையை மட்டும் கருத்தில் கொண்டுபார்த்தோம் என்றால் ஆண் குழந்தைகளைவிட பெண்குழந்தைகளே முதலிடத்தில் இருக்கிறார்கள். இதன்காரணமாக, பால்குடிப் பருவத்தில் இருந்தே பெண் குழந்தைகளின் விகிதாச்சாரம் ஆண் குழந்தைகளை விட அதிகரித்து விடுகின்றது. ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் மிகுகின்றன.

உலகத்தில் எப்போதும் ஏதோவொரு காரணத்தினால் போர்கள நடைபெற்றுக் கொண்டே உள்ளன. போர்க்களத்தில் உயிரிழப்போரில் பெண்களை விட ஆண்களே அதிகமாக உள்ளனர். அண்மைக் காலத்தில் ஆஃப்கானிஸ்தானில் நீண்டதொரு காலம் நடைபெற்ற போரை நாம அறிவோம். அப்போரில் குறைந்தபட்சம் பதினைந்து லட்சம் பேர் மரணத்தைத் தழுவியுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆண்களே. இறந்துபோன ஷுஹதாக்களில் ஆண்களே அதிகம்.

அவ்வாறே அன்றாடம் நடைபெறுகின்ற விபத்துகளையும்

நீங்கள் கணக்கிட்டுப் பாருங்கள். அவ்விபத்துகளில் உயிரிழப்போரில் ஆண்களே அதிகமாக இருப்பார்கள். அதுமட்டுமல்ல, அவ்வப்போது நாட்டில் நிகழுகின்ற கள்ளச் சாராய சாவுகளிலும் ஆண்களுடைய எண்ணிக்கையே மிகுதியாக இருப்பதையும் காணமுடியும்.

மேற்கண்ட காரணங்களால் உலகத்தில் ஆண்களுடைய தொகை குறைவாகவும் பெண்களுடைய தொகை அதிகமாகவும் இருக்கின்றது. ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களில் உள்ள சில நாடுகளைத் தவிர்த்து உலகிள் மற்ற எல்லாப் பகுதிகளிலும் பெண்களுடைய எண்ணிக்கை ஆண்களுடைய எண்ணிக்கையைவிட அதிகமாகவே உள்ளது. ஆண்களுடைய எண்ணிக்கையைவிட பெண்களுடைய எண்ணிக்கை குறைவான உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் ஏன் பெண்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்பதற்கான காரணங்களை ஏற்கனவே நாம் பார்த்து விட்டோம். இங்கு ஆண்டுதோறும் பத்து லட்சம் பெண்சிசுக்கள் கருவிலேயே கொல்லப்படுகின்றன. கருவிலுள்ளது பெண்தான் என்பது தெரியவந்ததும் உடனடியாக அந்த சிசு கலைக்கப்படுகின்றது. இப்படி பலவாறு பெண்குழந்தைகள் கொல்லப்படுவதால் பெண்களுடைய எண்ணிக்கை ஆண்களைவிட குறைவாக உள்ளது. பெண்சிசுக்கள் கொல்லப்படுவதும் பெண்குழந்தைகள் கொல்லப்படுவதும் அறவே இங்கு நிறுத்தப்பட்டால ஒருசில ஆண்டுகளில் உலகின் மற்ற நாடுகளைப் போல இங்கும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட மிகமிக அதிகமாக ஆகிவிடும்.

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்தில் மட்டும் ஆண்களை விட பெண்கள் ஒரு லட்சம் பேர் அதிகமாக இருக்கிறார்கள். அமெரிக்கா முழுவதிலும் ஆண்களை விட பெண்கள் 78 லட்சம்பேர் அதிகமாக எண்ணிக்கையில் மிகுந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நியூயார்க் மாகாணத்தில் மட்டும நான்கிலொரு பங்கு ஆண்கள் ஓரினச்சேர்க்கை செய்பவர்களாக உள்ளார்கள். ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு பெண்களின் பால் நாட்டம் செல்லாது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அமெரிக்கா தேசமெங்கும் இரண்டரைக் கோடி ஆண்கள்

ஓரினச்சேர்க்கை செய்பவர்களாக உள்ளார்கள்.

பிரிட்டனுடைய நிலையும் ஏறக்குறைய இது போலத்தான். ஆண்களைவிட அங்கு நாற்பது லட்சம் பெண்கள் அதிகமாக உள்ளார்கள். ஜெர்மனியில் இந்த விகிதாச்சாரம் சற்று அதிகமாகவே உள்ளது. அங்கோ ஆண்களைவிட பெண்கள் ஐம்பது லட்சம்பேர் அதிகமாக உள்ளார்கள். ரஷ்யாவில் ஆண்களை விட அறுபது லட்சம் பெண்கள் அதிகமாக உள்ளார்கள்.

இப்போது நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உலகம் முழுக்க எத்தனை பெண்கள் அதிகமாக இருப்பார்கள்? என்பதை!. என்னுடைய ஒரு தங்கை அமெரிக்காவில் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். திருமணம் செய்துகொள்ள ஆண்களே இல்லாததால் அவளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. ஏனென்றால் எல்லா ஆண்களும் ஏற்கனவே ஒருமுறை திருமணம் செய்துகொண்டுவிட்டனர். இப்போது அவளுக்கு முன்னால் இரண்டே இரண்டு வழிகள்தாம் உள்ளன.

ஒன்று, ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்ட ஒரு ஆணுக்கு இரண்டாவது மனைவியாக இருந்தாலும் பரவாயில்லை என்று வாழ்க்கைப்படவேண்டும். அல்லது, ‘பொதுச்சொத்தாக’ மாறிவிடவேண்டும். மூன்றாவதாக ஒரு வழி இருக்க கண்டிப்பாக வாய்ப்பே இல்லை. இந்த இரண்டே இரண்டு வழிகள்தாம் எஞ்சியுள்ளன. நான் ஏகப்பட்ட ஆட்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டேன். அவர்கள் அனைவருமே முதல் வழியைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று ஒரே குரலில் கூறினார்கள். இன்றுவரை ஒருவர்கூட இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொல்லவில்லை. ஆயினும் ஒருசில அதிபுத்திசாலிகள் தங்களுடைய தங்கை இன்னொருவருக்கு இரண்டாவதாக வாழ்க்கைப் படுவதை விட காலம் முழுவதும் கன்னியாகவே இருந்துவிட்டுப் போகட்டும் என்று கூறினார்கள்.

ஆனால், இவ்வாறு இருப்பது இயற்கைக்கு முரணான செயல், இவ்வாறு இருப்பது சாத்தியமே அல்ல என்றுதான் மருத்துவ

அறிவு கூறுகின்றது. ஆணோ பெண்ணோ வாழ்நாள் முழுக்க கன்னி கழியாமல் இருப்பது நடைமுறைக்கு ஒத்துவராத இயற்கைக்கு முரணான செயல். அப்படியிருப்பது முறைகேடான வாழ்க்கைக்கும் ஒழுக்கச் சீரழிவுக்கும் வழிவகுத்துவிடும். வேறுவழியே இல்லை.

வாழ்க்கையைத் துறந்துவிட்டு உலக இன்பங்களைப் புறக்கணித்துவிட்டு காடுகளிலும் வனாந்திரங்களிலும் கவித்துவந்த மகத்தான முனிவர்களோடும் ஞானிகளோடும் காட்டுவாசிப் பெண்களும் கந்தர்வப் பெண்களும் தென்படுகிறார்களே, அது ஏன்?. எதற்காக?. ஏன் இவ்வாறு நிகழவேண்டும்?.

'சர்ச் ஆஃப் இங்கிலாந்து' சபையைச் சார்ந்த பெரும்பாலான (ஆம்! பெரும்பாலானோர்) பாதிரியார்களும் பேதகர்களும் கன்னியாஸ்திரீகளும் முறைகேடான பாலுறவிலும் ஓரினச் சேர்க்கையிலும் ஈடுபடுகிறார்கள் என்று ஓர் ஆய்வறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது. ஏனென்றால் மூன்றாவதாக ஒரு வடிகால் கிடையவே கிடையாது. ஒன்று ஏதெனும் கல்யாணமானவனுக்கு வாழ்க்கைப்படவேண்டும். அல்லது முறைகேடான உறவுகளைத் தேடவேண்டும்.

....

கேள்வி: ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்களைப் புரிவதற்கான நிபந்தனைகளும் விதிகளும் யாவை?.

பதில்: ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை யெ்வதென்றால் என்னென்ன நிபந்தனைகள் உள்ளன என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு நிபந்தனைதான் விதிக்கப்பட்டுள்ளது. கணவன் தன்னுடைய இரண்டு மனைவிகளோடும் அல்லது மூன்று / நான்கு மனைவிகளோடும் நியாயமாகவும் நடுநிலைமையோடும் நடந்துகொள்ள முடியுமா? என்பதே நிபந்தனை. முடியும் என்றால் அவருக்கு இரண்டாவதாக அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்களைப் புரிய அனுமதி கிடைக்கின்றது. இல்லையென்றால் ஒரு மனைவியோடு அவர் போதுமாக்கிக் கொள்ளவேண்டும்.

பல்வேறு சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்த்தோம் என்றால் ஆண் பல திருமணங்களைப் புரியவேண்டடியதாக இருக்கின்றது. அவற்றில் ஒன்றை ஏற்கனவே போன பதிலில் பார்த்து வந்தோம். ஆண்களைவிட பெண்களுடைய எண்ணிக்கை மிகதியாக இருக்கும்போது அப்பெண்கள் முறைகேடான வழிகளில் சென்று தங்களுடைய இயற்கைத் தேவைகளையும் இச்சைகளையும் பூர்த்தி செய்துகொள்வதைத் தடுக்கவும் அவர்களுடைய மானத்தைப் பாதுகாக்கவும் இரண்டாவது திருமணம் செய்தாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

அதுவன்றி வேறுபல சூழ்நிலைகளும் உள்ளன. ஒரு இளம்பெண்ணுக்கு திருமணம் ஆன கொஞ்சகாலத்திற்குள் ஏதேனுமொரு பயங்கர விபத்தில் அவள் அகப்பட்டு விட்டாள் என்று வைத்துக் கொள்வோம். அவளுடைய உடல்உறுப்புகள் பாதிப்படைந்துவிட்டன. மனைவி என்ற நிலையிலான தேவைப் பூர்த்தி செய்ய முடியாதவளாக அவள் ஆகிவிட்டாள். இப்போது கணவனிடம் இரண்டு வழிகளே உள்ளன. ஒன்ற அவன் தன்னுடைய ஊனமுற்ற மனைவியை விட்டுவிட்டு இன்னொரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளவேண்டும். இல்லையென்றால் இந்த மனைவியோடு இன்னொரு பெண்ணையும் திருமணம் செய்துகொள்ளவேண்டும்.

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த அப்பாவிப் பெண் உங்களுடைய கூடப்பிறந்த தங்கையாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?. மேற்கண்ட இரண்டு வழிகளில் எதனை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்?. உங்களுடைய தங்கையின் கணவர் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளட்டும் என்று நினைப்பீர்களா? இல்லை, அவர் உங்களுடைய தங்கைக்கு தலாக் கொடுத்துவிட்டு, வேறு கல்யாணம் செய்து கொள்ளட்டும் என்று எண்ணுவீர்களா?.

நோயின் காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் உடற்குறையின் காரணமாகவோ மனைவியால் தாம்பத்ய கடமையைப் பூர்த்திசெய்ய இயலவில்லை என்றால் கணவன் இம்மாதிரி இரண்டாவது கல்யாணம் செய்துதான்

தீரவேண்டும். அந்த இரண்டாவது மனைவி தன்னுடைய கணவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு தன்னுடைய கணவனின் முதல் மனைவியின் தேவைகளையும் பூர்த்தி செய்தாகவேண்டும். அவள் பெற்றெடுத்த குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக ஓர் ஆயாவை நியமித்துக் கொண்டால் போதாதா? என்று சிலர் ஆட்சேபணை எழுப்பலாம். உண்மைதான் ஒரு ஆயாவை வேலைக்கு வைத்துக்கொண்டால் அவளுடைய குழந்தைகளை நல்லபடியாக பார்த்துக்கொள்ளளலாம்தான். ஆனால், கணவனுடைய தேவையை யார் பார்த்துக்கொள்வது? யார் பூர்த்தி செய்வது?.

யதார்த்தத்தில் என்ன நடைபெறும்? எல்லொருக்கும் தெரிந்ததுதான். வேலைக்காரிகளே அந்தக் கடமையையும் பூர்த்திசெய்யத் தொடங்கிவிடுவார்கள். ஆகையால், முதல்மனைவியோடு இரண்டாவதாகவும் கல்யாணம் செய்துகொள்வதுதான் நல்லவழி!.

குழந்தையின்மையும் ஒரு காரணம். இரண்டாவது திருமணம் முடியத்துக் கொள்ளுங்கள் என்று அப்போதும் ஆலோசனை கூறலாம். திருமணமாகி நீண்டகாலமாகியும் குழந்தைச்செல்வம் கிடைக்கவில்லை, கணவன்-மனைவி இருவரும் குழந்தைக்காக ஏங்குகிறார்கள் என்றால் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளுமாறு மனைவியே கணவனுக்கு ஆலோசனை தரலாம்.

குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ளலாமே என்றும் சிலர் கூறலாம். ஆனால், தத்தெடுப்பதை இஸ்லாம் அவ்வளவாக வரவேற்கவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு!. அவற்றையெல்லாம் இங்கு எடுத்துக் கூற இயலாது. ஆனால், இத்தகு சூழ்நிலையில் கணவனுக்கு முன்னால் இரண்டு வழிகள்தாம் உள்ளன. ஒன்று மனைவிக்கு தலாக் கொடுத்துவிட்டு வேறு திருமணம் முடித்துக் கொள்வது. இல்லையென்றால் மனைவியோடு இன்னொரு பெண்ணையும் இரண்டாவதாக திருமணம் முடித்துக்கொள்வது.

இரண்டுபேரிடமும் நடுநிலையோடு நியாயமாக நடந்துகொள்வது.

இந்தக் காரணங்கள் போதுமென்று நினைக்கிறேன்.

....

கேள்வி: நாட்டின் தலைமைப்பதவிக்கு ஒரு பெண் வரமுடியுமா?

பதில்: அதாவது, ஒரு பெண் நாட்டின் தலைமைப்பதவிக்கு வரயியலுமா என்று சகோதரர் கேட்டுள்ளார். 'நாட்டின் தலைமைப் பொறுப்புக்கு ஒரு பெண் வரலாகாது' என்று குறிப்பிடுகின்ற குர்ஆன் வசனத்தையோ குர்ஆனின் கட்டளையையோ எனக்குத் தெரிந்து இதுவரை நான் பார்க்கவில்லை.

ஆயினும் பல்வேறு நபிமொழிகளில் இதுபற்றிய குறிப்புகள் வந்துள்ளன.

''தன்னுடைய தலைமைப் பொறுப்பில் ஒரு பெண்ணை அமர்த்திய சமூகம் ஒருபோதும் வெற்றியடையாது!'' என்றொரு ஹதீதை உதாரணமாகச் சொல்லலாம்.

அந்தக் காலத்துக்குத்தான் அந்த ஹதீது பொருந்தும் என்று ஒருசில உலமாப் பெருந்நதகைகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். அதாவது அந்த சட்டம் காலக்கெடு உடையது. குறிப்பிட் காலத்துக்கு மட்டும் பொருந்திவரக் கூடியது. அதாவது அக்காலத்தில் பாரசீக நாட்டின் தலைமைப் பொறுப்பு ஒரு பெண்வசம் இருந்தது. அதனையே இறைத்தூதர் கற்பிபிட்டுள்ளார்கள். ஆனாலும், மற்ற உலமாக்களும் அறிஞர் பெருமக்களும் இதனை மறுத்துள்ளார்கள். இக்கட்டளை எல்லா காலத்துக்கும் பொருந்திவரக் கூடியதே என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு பெண் தலைமைப் பொறுப்பை வகிப்பத சரிவரக் கூடியாத? இல்லையா? என்று நாமே அலசிப் பார்ப்போம். வாருங்கள். ஓர் இஸ்லாமிய நாட்டின் தலைமைப் பொறுப்பில் ஒரு பெண் வீற்றிருந்தால் கண்டிப்பாக அப்பெண் தொழுகைக்கு தலைமை ஏற்கவேண்டும். ஒரு பெண் தலைமைப்

பொறுப்பேற்று தொழவைத்தால் பின்னால் நின்று தொழுவோரின் கவனம் கண்டிப்பாக சிதறும். ஏனெனில் தொழுகையில் பல்வேறு நிலைகள் உள்ளன. நிற்பது, குனிவது, தலையைத் தரையில் வைப்பது போன்றன. ஆண்களுக்கு முன்னால் நின்று ஒரு பெண் இந்த சடங்குகளைச் செய்யும்போத என்னுடைய எண்ணத்தின்படி கண்டிப்பாக ஆண்களுக்கு மனக்கிலேசம் ஏற்படும். மனம் அலைபாயும்.

ஒரு பெண் நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருக்கும்போது அரசியல் காரணங்களுக்காக வெளியூர் வெளிநாடகளைச் சேர்ந்த பலதரப்பட்டடோரோடும் சந்திப்புகளை நிகழ்த்த வேண்டியிருக்கும். அப்போது அவர்களில் கண்டிப்பாக பல ஆண்களும் இருக்கவே செய்வர். இத்தகைய பல சந்திப்புகள் பொதுவாக தனியறைகளில்தாம் நடைபெறும். சமயங்களில் வேறு யாருமின்றி இரண்டு தலைவர்கள் மட்டுமே சந்திக்க வேண்டிய சூழலும் ஏற்படக்கூடும். இத்தகைய சந்திப்புகளை இஸ்லாம் அனுமதிப்பதே இல்லை. திருமண உறவு தடைசெய்யப்படாத எவரோடும் தனித்திருக்க இஸ்லாம் அனுமதிப்பதே இல்லை.

சமூகவாழ்வின் எந்நிலையிலும் ஆண்-பெண் ஒன்று கலப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. ஒரு பெண் சமூகத்திற்கு தலைமை வகித்தால் கண்டிப்பாக பொதுமக்கள் அரங்கிற்கு வந்தே ஆகவேண்டும். அவளுடைய புகைப்படங்கள் அச்சடிக்கப்படும். அப்படங்கள் அந்நிய ஆண்கள் பார்வையிலும் கைகளிலும் படும். ஒரு பெண் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார் என்றால் உதாரணத்திற்கு மார்க்கெட் தாச்சரையே எடுத்துக்கொள்ளுங்கள் பல அந்நிய ஆண்களோடு அவர் கைகுலுக்கும் வகையிலான எண்ணற்ற புகைப்படங்களை நீங்கள் பார்க்கமுடியும். இத்தகைய வெளிப்படையான ஒன்று கலத்தலை இஸ்லாம் விரும்பவில்லை.

ஒரு பெண் என்ற ரீதியில் மக்களோடு மக்களாக ஒன்றிப்பழகி மக்களுடைய பிரச்சனைகளை சரிவரை தெரிந்துகொள்வதும் பெண்ணுக்கு சாத்தியமில்லாத விஷயம். மிகவும் கஷ்டமான காரியம்.

மாதவிலக்கு சமயங்களில் ஒரு பெண் பலதரப்பட்ட மனஉலைச்சல்களுக்கும் சிந்தனைக் கோளாறுகளுக்கும் ஆளாகிறாள் என்று நவீன மருத்துவம் தெரிவிக்கின்றது. பல்வேறு வகை மாறுதல்களுக்கும் அவள் உட்படுகிறாள். ஈஸ்டோஜென் எனும் ஹார்மோன் அதற்கு காரணமாக அமைகின்றது. ஒரு பெண் தலைமைப்பொறுப்பில் இருக்கும் போது இந்த மாற்றங்கள் அவளுடைய முடிவெடுக்கும் திறனை கட்டாயம் பாதிக்கவே செய்யும். ஓர் ஆணைவிட பேசும் திறனும் உரையாடும் திமையும் பெண்ணிடம் நிறையவே இருக்கின்றது என்று அறிவியல் சொல்கின்றது. அதேசமயம் ஆண்களிடம் *Spacialagility* என்றழைக்கப்படும் திறமை மிகைத்திருக்கின்றது. இந்தத் திறமையினால்தான் ஆண்களிடம் திட்டமிடும் திறனும் எதிர்காலத்தைக் கணித்துச் செயல்படும் தொலைநோக்குப் பார்வையும் கணப்படுகின்றன. தமைைப்பொறுப்பில் உள்ளவர்களுக்கு இந்தத் திறமைகள் கட்டாயம் தேவை!. ஆண்களைவிட பெண்களுக்கு பேசும் திறன் அதிகமாக உள்ளது ஏனென்றால், ஒரு தாய் என்றவகையில் அவள் நிறைய பேசவேண்டியிருக்கின்றது.

கண்டிப்பாக ஒரு பெண் தாய்மை அடைவாள். ஒருசில மாதங்கள் அவள் ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்பேது அவளுடைய பெறுப்புகை யார் கவனித்துக்கொள்வது?. அவளுக்கென்று பிள்ளைகள் இருக்கும். அவர்களை யார் பொறுப்பில் விட்டுவைப்பது?. தாய் என்ற வகையில் அவளுக்கு தவிர்க்கே முடியாத பொறுப்புகள் உள்ளன. அதேசமயம் ஆணைப் பொருத்தவரை தலைமைப் பொறுப்பு எனும் கடமையையும் தந்தை எனும் கடமையையும் ஒரே சமயத்தில் முறைப்படி ஆற்ற முடியும். ஆனால், ஒரு பெண்ணால் தலைமைப் பொறுப்பு எனும் கடமையையும் தாய் எனும் கடமையையும் ஒரே சமயத்தில் ஆற்ற முடியாது.

இந்தக் காரணங்களை எல்லாம் வைத்துப்பார்த்தால் பெண் தலைமைப் பொறுப்புக்கு வரவே கூடாது என்று கருத்து தெரிவித்துள்ள உலமாக்களின் கூற்றே சரியானது என்று எனக்குப் படுகின்றது.

அதற்கென்று ஒரு விஷயத்தைப் பற்றி முடிவெடுப்பதிலும், சட்டங்களை இயற்றுவதிலும் பெண்ணுடைய பங்களிப்பு அறவே இருக்கக்கூடாது என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஏற்கனவே தெரிவித்ததுபோல சட்டங்கள் இயற்றுவது போன்ற நடவடிக்கைகளில் பெண்களுடைய பங்களிப்பு கட்டாயம் இடம்பெறவேண்டும். அவளுக்கு ஓட்டுரிமையும் வழங்கப்படவேண்டும். ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது அண்ணல் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முக்கியமானதொரு ஆலோசனையை அன்னை உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா வழங்கியுள்ளார்கள். முஸ்லிம்களெல்லாம் குழம்பிப்போய் எதைச்செய்வது எதைவிடுவது என்று தவித்துக்கொண்டிருந்தபோது அண்ணலாரை அவர் ஆறுதல் படுத்தினார். அடுத்து என்ன செய்யவேண்டும் என் றஆலோசனையையும் வழங்கினார்.

தலைமைப்பொறுப்பில் என்னவோ பிரதமரும் முதலமைச்சரும் வீற்றிருந்தாலும் சில சமயங்களில் முக்கியமான முடிவுகளை எல்லாம் அவர்களுடைய தனிச்செயலர்கள் அதாவது பிஏ-க்கள் எடுப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால் அவ்வகையில் ஒரு பெண் கண்டிப்பாக ஆணுக்கு உதவமுடியும். முடிவெடுப்பதிலும் முக்கியமான ஆலோசனைகளைப் பெறுவதிலும் பெண் கண்டிப்பாக வழிகாட்டமுடியும்.

....

கேள்வி: ஆணும் பெண்ணும் சமம் என்று இஸ்லாம் சொல்வது உண்மையென்றால் பெண்கள் ‘ஹிஜாப்’ எதற்காக அணிவேண்டும்?.

பதில்: அதாவது பெண்களுடைய உரிமைகளை இஸ்லாம் மதிக்கின்றது என்றால், ஆணையும் பெண்ணையும் இஸ்லாம் ஒரே தட்டில் வைத்துப்பார்க்கின்றது என்றால், அப்புறம் எதற்காக பெண்கள் ‘ஹிஜாப்’ அணியவேண்டும் என்கின்ற உத்தரவை அது போட்டுள்ளது? இரு பாலினரையும் அதாவது ஆண்களையும் பெண்களையும் ஏன் தனித்தனியாக இருக்கச்

சொல்லவேண்டும்? என்ற ஒரு நல்ல அற்புதமான கேள்வியை என்னுடைய இந்த சகோதரி கேட்டிருக்கிறார்.

ஹிஜாம் அதாவது பர்தாவைப்பற்றி அப்புறம் விரிவாக சொல்லயிருக்கிறேன். நான் என்னுடைய அந்த சகோதரிக்கு மிகவும் நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் நான் பர்தாவைப் பற்றி பேசாமல் விட்டுவிட்டேன். இந்தக் கேள்வியின் மூலமாக அவர் எனக்கு ஞாபகப்படுத்திவிட்டார்.

திருக்குர்ஆனை நீங்கள் எடுத்து வாசித்துப் பார்த்தீர்கள் என்றால் பெண்களுக்கு பர்தாவைப் பற்றிய கட்டளையை கொடுப்பதற்கு முன்னால் திருக்கர்ஆன் ஆண்களுக்கு பர்தாவைப் பற்றிய கட்டளையை இடுகின்றது.

அத்தியாயம் அன்னூரில் இறைவன் கூறுகிறான்...

"தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தங்களுடைய வெட்கஸ்தலங்களைப் பாதகாத்துக் கொள்ளுமாறும் இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம் நபியே நீங்கள் கூறுவீராக! அல்லாஹ்வோ அவர்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிபவனாகவே உள்ளான்" (அல்குர்ஆன் 24:30).

அதனைத் தொடர்ந்து அடுத்த வசனத்தில்

"தம்முடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தம்முடைய வெட்கஸ்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் தம்முடைய அழகில் இயல்பான வெளித்தெரிபவையன்றி மற்ற அழகை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் . இறைநம்பிக்கை கொண்ட பெண்களுக்கு நபியே நீங்கள் கூறுவீராக! அவர்கள் தங்களுடைய முன்றானையால் தமது நெஞ்சை மறைத்துக் கொள்ளட்டும்" (அல்குர்ஆன் 24:31).

அதனைத் தொடர்ந்து உறவினர்களின் நீண்டதொரு பட்டியல் தரப்படுகின்றது. அப்பட்டியலில் பெண்களும் அடங்குவர். அவர்கள் அல்லாது மற்ற அனைத்து நபர்களிடமும் பர்தா கட்டாயம் பேணப்படவேண்டும். அதாவது 'ஹிஜாபு'டைய நியதிகள் பின்பற்றப்படவேண்டும். இஸ்லாதிய ஹிஜாப் என்றால் என்ன என்பதை திருக்குர்ஆனைக் கொண்டும்

நபிமொழிகளைக் கொண்டும் நாம் வரையறுக்கலாம். ஆறு உட்பிரிவுகளில் அதை நாம் அடக்கலாம்.

🗐 முதலாவது ஹிஜாபுடைய எல்லைகள் வரையறைகள் என்ன என்பது தொடர்பானது. ஹிஜாப் என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபடுகின்றது. ஆண்கள் தொப்புளில் இருந்து முழங்கால்வரை மறைத்தாகவேண்டும். பெண்கள் தங்களது முழுஉடம்பையும் மறைத்தாகவேண்டும். முகத்தையும் மணிக்கட்டுவரை கைகளையும் வெளிப்படுத்தலாம். அவையன்றி உடம்பின் மற்ற பகுதிகள் அனைத்தையும் ஹிஜாப் செய்யவேண்டியது அதாவது மறைக்கவேண்டியது கடமையாகும். முகத்தையும் கைகளையும் கூட ஒரு பெண் மறைத்துக்கொள்ள விரும்பினால் அது அவளுடைய இஷ்டம். ஆனால் திருமண உறவு தடை செய்யப்பட்டோருக்கு முன்னால் மறைக்கவேண்டியதில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஹிஜாப் விஷயத்தில் வேறுபடுகின்ற விதி இது ஒன்றேயாகும். மற்றவிதிகள் அனைத்தும் இரு பாலருக்கும் பொதுவானவை.

🗐 இரண்டாவது விதி, பெண்ணுடைய உடைகள் இறுக்கமானதாகவும் உடம்போடு ஒட்டியதாகவும் இருக்கலாகாது. அதாவது உடம்பின் வளைவுகள் வாகாக வெளித்தெரியும் வகையிலான உடைகளை அணியக்கூடாது.

🗐 மூன்றாவது விதி, உடைகள் மிகவும் மெல்லியதாக இருக்கக்கூடாது. அதாவது உடைகள் அணிந்தும் உடல்உறுப்புகள் வெளித்தெரியும் வகையில் இருக்கக்கூடாது.

🗐 நான்காவது விதி, உடைகள் மிகவும் கவர்ச்சிகரமாகவும் பிறரைத் தூண்டும் வகையிலும் அமையக்கூடாது. அதாவது எதிர்பாலினரின் உணர்வுகளைத் தூண்டும் வகையிலான உடைகளை அணியக்கூடாது.

🗐 எதிர்பாலினரை ஒத்த உடைகளை அணிந்துகொள்ளக் கூடாது. இது ஐந்தாவது விதியாகும். அதாவது ஆண்களுடைய உடைகளை பெண்களும் பெண்களுடைய உடைகளை ஆண்களும் அணியக்கூடாது. உதாரணமாக ஆண்கள் காதுகளில் தோடுகளையும் வளையங்களையும் அணிவதைக் குறிப்பிடலாம். நீங்கள் உங்களுடைய ஒரு காதில் வளையம்

அணிந்துகொண்டால் அதற்கு வேறு பொருள். இரண்டு காதுகளிலும் அணிந்துகொண்டால் அதற்கு வேறு அர்த்தம். இவற்றை இஸ்லாம் கடுமையாகத் தடை செய்கின்றது.

🗐 ஆறாவது கடைசி விதி இறைவனை நம்பாத காஃபிர்களை ஒத்த உடைகளையும் அணியலாகாது. அறவே அவற்றைத் தவிர்க்கவேண்டும்.

இஸலாமிய ஹிஜாப் என்றால் என்ன என்பதை ஏறக்குறைய நாம் விளக்கிவிட்டோம். இப்போது பெண்கள் அணிகின்ற பர்தாவைப் பற்றிப் பார்ப்போம்இ அதைப்பற்றித்தானே கேள்வி எழுப்பப்பட்டுள்ளது?. பெண்கள் பர்தாவை அணிந்தாகவேண்டும் என்று ஏன் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்?. எதிர்பாலினரோடு கலந்து பழகுவது ஏன் தடை செய்யப்படுகின்றது?.

இக்கேள்விக்கான பதிலைப் பார்க்கும் முன் நாம் இரண்டு சமூகங்களையும் சற்று உன்னிப்பாக கவனிக்கவேண்டும். பர்தாவை அணிகின்ற சமூகத்தையும் பர்தா அணியாத அதைப்பற்றி கவலைப்படாத சமூகத்தையும் நாம் கண்டிப்பாக பார்த்தேயாக வேண்டும்.

இன்று உலகத்தில் மிக அதிகமாக குற்றங்கள் நடைபெறும் நாடு அமெரிக்கா ஆகும். அமெரிக்கப் புலனாய்வுத் துறை (Federal Bureau of Investigation) **1990** ம் ஆண்டு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்படி அவ்வாண்டு மட்டும் ஆயிரத்து இருநூறு பாலியல் வல்லுறவுகள் நடைபெற்றுள்ளன. காவல்துறையில் பதியப்பட்ட வழக்குகளின் புள்ளிவிபரம்தான் இது. பதியப்படாத வழக்குகளையும் சேர்த்தால் இன்னும் அதிகரிக்கும். ஏனென்றால் இந்த அறிக்கை இன்னொரு தகவலையும் தருகின்றது. யதார்த்தத்தில் **16** சதவீத குற்றங்களே காவல்துறை வசம் கொண்டுவரப்படுகின்றன, என்பதே அது!. இதன்படி உண்மை றிநிலவரம் என்ன என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளலாம். ஒரு வருடத்தில் பெண்கள்மீது இந்த அளவுக்கு கொமை இழைக்கப்படுகின்றது!. அடுத்தடுத்த வருடங்களில் இதன் அளவு அதிகரித்துக்கொண்டே செல்கின்றது என்பதையும் நினைவில் வையுங்கள். இன்று

ஒவ்வொருநாளும் ஏறக்குறை ஆயிரம் தொள்ளாயிரம் பாலியல் வல்லுறவுகள் நடைபெறுகின்றன.

அமெரிக்கர்களின் துணிச்சல் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது போலும்!.

1993 ம் ஆண்டு அளிக்கப்பட்ட அறிக்கையின்படி ஒவ்வொரு ஒன்னேகால் நிமிடத்திற்குப் பிறகும் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறாள்.

ஏன் இவ்வாறு நிகழ்கின்றது?.

அமெரிக்காவில் பெண்களுக்கு எல்லாவகையான சுதந்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது. அங்குதான் அவர்கள் மீதான கொடுமைகளும் அதிகமாக உள்ளன.

அவைிடக் ொடுமை எனனன்ெறால் வெறுமனே பத்து சதவீதம் குற்றங்கள்தாம் புலனாய்வு செய்யப்படுகின்றன. பதினாறு சதவீத குற்றங்கள் பதியப்படுகின்றன. பத்து சதவீத குற்றங்களில்தான் குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள். அதாவது 1.6 சதவீத குற்றவாளிகளே பிடிக்கப்படுகிறார்கள். அதிலும் பாதிபேர் சட்டரீதியாக வழக்கு நடைபெற்று தண்டனை ஏதும் அளிக்கப்படும் முன்பே விடுதலை ஆகிவிடுகிறார்கள். அப்படியெனில், எட்டு சதவீத குற்றவாளிகளுக்கு எதிராகத்தான் வழக்குகள் நடைபெறுகின்றன.

வேறுவார்த்தைகளில் இதைசொல்வோம் என்றால், ஒருவன் 125 பெண்களோடு அத்துமீறி நடந்துகொண்டு பாலியல் வல்லுறவு போன்ற அத்துமீறல்களைப் புரிந்தான் என்றால் ஒருமுறையோ அல்லது இரண்டு முறையோ அவன் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் அவனுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும்.

அவ்வழக்கு நடைபெற்று அவனுக்கு தண்டனை வழங்கப்பட ஐம்பது சதவீத வாய்ப்பே உண்டு!. அப்படியும் தண்டனை கிடைத்தால் ஓராண்டோ அல்லது அதைவிடக் குறைவாகவோ தண்டனை விதிக்கப்படும்.

பாலியல் வல்லுறவுக்கு அமெரிக்காவில் ஆயுள் தண்டனை அளிக்கப்படுகின்றது. ஆனால், குற்றவாளி முதல்முறையாக

அக்குற்றத்தை செய்திருந்தால் அவனுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டு குறைவான தண்டனையாக ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கப்படுகின்றது. ஆகையால், பெரும்பாலான வழக்குகளில் சொல்லப்போனால் ஐம்பது சதவீத வழக்குகளில் குற்றவாளிகள் ஓராண்டு தண்டனையோ அல்லது அதைவிடவும் குறைவான தண்டனையையோ பெறுகிறார்கள்.

இந்தியாவில் மட்டும என்ன வாழ்கின்றது?. 1002 ம் ஆண்டு, திசம்பர் மாதம் முதல் தேதியன்று வெளியிடப்பட்ட *National Crime Board*ன் ஓர் அறிக்கையின்படி, ஐம்பத்தி நான்கு நிமிடங்களுக்கு ஒருமுறை இந்தியாவில் பாலியல் வல்லுறவு தொடர்பான ஒரு வழக்கு பதியப்படுகின்றது. அவ்வறிக்கை மேலும் அளிக்கும் தகவல்களின்படி, இருபத்தி ஆறு நிமிடங்களுக்கு ஒருமுறை **ஜின்ஸி** வல்லுறவு நடைபெறுகின்றது. ஒரு மணி நேரம் நாற்பத்தி மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை வரதட்சணை தொடர்பான கொலையொன்று பதியப்படுகின்றது.

நம்முடைய நாட்டில் நடைபெறுகின்ற பாலியல் வல்லுறவுகளைக் கணக்கிட்டுப் பார்த்தீர்கள் என்றால், சராசரியாக இரண்டு நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறாள்.

பாமரத்தனமான கேள்வி ஒன்றை இங்க நான் கேட்க விரும்புகிறேன். அமெரிக்காவில் உள்ள பெண்கள் எல்லாம் பர்தாவை அணிந்துகொள்ள ஆரம்பித்தால் என்ன ஆகும்?.

பாலியல் வல்லுறவுகள் இதே விகிதத்தில் தொடருமா?.

இத்தகைய குற்றங்கள் அதிகமாகுமா?.

அல்லது இந்தக் குற்றங்களின் எண்ணிக்கை குறையுமா?.

இவ்வனைத்து விஷயங்களையும் முன்னால் வைத்துக்கொண்டு இஸ்லாமியப் போதனைகளை பார்க்கலாம். பெண்கள் இஸ்லாம் கூறுகின்ற முறைப்படி பர்தா அணியவேண்டுமா வேண்டாமா என்பதை ஒருபக்கம் வைத்துவிடுவோம். ஆண்களும் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது.

ஆண் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டான் என்றால் அவனுக்கு இஸ்லாம் மரணதண்டனை வழங்குகின்றது. இந்த தண்டனையை 'காட்டுமிராண்டித்தனமான தண்டனை' என்று சொல்கிறீர்களா?.

நான் இந்தக் கேள்வியை இதற்கு முன்பு பலபேரிடம் கேட்டுள்ளேன். உங்களிடமும் இதே கேள்வியை கேட்க ஆசைப்படுகிறேன். உங்களுடைய கூடப்பிறந்த தங்கச்சியோடு யாரேனும் ஒருவன் இந்த அத்துமீறலைப் புரிந்துவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்களே நீதிபதியாக இருந்து தீர்ப்பு வழங்குங்கள் என்ற உங்களிடம் கூறிவிட்டார்கள். நீங்கள் என்ன தண்டனையை வழங்குவீர்கள்?. இஸ்லாமிய சட்டம் என்பதை எல்லாம் இப்போது யோசித்துக்கூடப் பார்க்கவேண்டாம். இந்தியாவின் சட்டம் என்ன சொல்கின்றது என்பதைக்கூட நீங்கள் யோசிக்க வேண்டாம். அமெரிக்காவில் இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை என்பதையும் நீங்கள் யோசிக்கவேண்டாம். நீதிபதியின் இருக்கையில் அமர்ந்துகொண்டு நீங்கள் என்ன தண்டனையை வழங்குவீர்கள்?. குற்றவாளிக்கு மரண தண்டனையை வழங்குவீர்களா, மாட்டீர்களா?.

நான் இதுவரை கேட்டவர்கள் எல்லோரும் 'மரண தண்டனை' என்றே பதில் கூறினார்கள்.

ஒரேயடியாக அவனைத் தீர்த்துக்கட்டாமல் கொஞ்சம்கொஞ்மாக அவனை சித்திரவதைசெய்து சாகடிக்கவேண்டும் என்றுகூட சிலபேர் சொன்னார்கள்.

நான் மறுபடியும் கேட்கிறேன். அமெரிக்காவில் இஸ்லாமிய சட்டம் அமுல்படுத்தப்பட்டால் இந்த குற்றங்களின் எண்ணிக்கை குறையுமா? கூடுமா? அல்லது இதே அளவிலேயே தொடருமா?.

இந்தியாவில் இஸ்லாமிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டால் என்னவாகும்?. பாலியல் வல்லுறவுகளின் சதவீதம் இதே அளவு இருக்குமா?. அல்லது கூடுதல் குறைவு நடக்குமா?.

செயல் வடிவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டால் கிடைக்கும் பதில் துல்லியமாக இருக்கும்.

பெண்களுக்கு முழுமையான உரிமைகளை வழங்கிவிட்டதாக நீங்கள் சொல்லிக்கொள்கிறீர்கள். அனால் அந்த உரிமைகள் எல்லாம் எழுத்திலும் பேச்சிலும் மட்டுமே உள்ளன. படிப்பதற்கும் பேசுவதற்கும் அவை ‘நன்றாக’ உள்ளன. உண்மையில் யதார்த்தத்தில் நீங்கள் பெண்களை விலைமாதர்களாகவும் கால்கேர்ள்களாகவும் ஆக்கி வீதியில் திரியவிட்டுள்ளீர்கள்.

பர்தா எனும் தலைப்பில் பல நாட்கள் என்னால் பேசமுடியும். ஆனால், சுருக்கமாக விளங்கக் கொள்வதற்காக இங்கு ஓர் உதாரணத்தை சுட்டிக்காட்டுகிறேன்.

அழகான இரண்டு பெண்கள். இரட்டையர் கிடையாது. இருவருமே அதீத அழகுடன் திகழுகிறார்கள். ஒரு வீதி வழியாக இரவரும் செல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒரு பெண் இஸ்லாமிய உடையை அணிந்திருக்கிறாள். இன்னொருத்தியோ ஃபேஷனாக உடுத்தியிருக்கிறாள். மிடியோ வேறு ஏதோ ஒரு உடையையோ அவள் அணிந்திருக்கிறாள். அவ்வீதியின் தெருக்கோடியில் ஒரு முரடன் நின்றுகொண்டு வருகின்ற போகின்ற பெண்களை எல்லாம் சீண்டிக்கொண்டுள்ளான். அவனுடைய பார்வையில் இந்த இருவரும் படுகிறார்கள். அவன் இவ்விருவரில் யாரை சீண்டுவான்? யாரை கிண்டல் செய்வான்?.

ஃபேஷனான உடையை அணிந்துகொண்டு தன்னுடைய உடலை வெளிக்காட்டிக் கொண்டுள்ள பெண்ணைத்தானே!.

அல்லது அவ்விரு பெண்களில் ஒருத்தி இஸ்லாமிய ஆடையான பர்தாவையும் இன்னொருத்தி சல்வார் கமீஸையும் அணிந்திருப்பதாகவே வைத்துக்கொள்வோம். ஆனால், அந்த சல்வார் மிகவும் டைட்டாக இறுக்கமாக உடலைக் கவ்வியபடி இருக்கின்றது. தலையில் துப்பட்டாவும் இல்லை. இப்பேது என்னவாகும்?. இப்போது அவன் யாரைச் சீண்டுவான்?. பர்தா அணிந்துள்ளவளையா? சல்வார் அணிந்துள்ளவளையா?. இரண்டாவது பெண்ணைத்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த பதில்.

ஆக, யதார்த்த உலகில் பெண்ணுடைய மானத்தையும்

மரியாதையையும் காப்பதற்காகத்தான் இஸ்லாம் பர்தாவை அணியச்சொல்கிறதே அல்லாமல் அவளைக் கேவலப்படுத்தவேண்டும்; மரியாதைக் குறைவாக நடத்தவேண்டும் என்பதற்காக அல்ல!.

....

கேள்வி: வேதம் வழங்கப்பட்ட மக்களான கிறிஸ்துவ பெண்களையும் யூதப் பெண்களையும் மணந்துகொள்வதற்கான அனுமதியை இஸ்லாம் ஆண்களுக்கு வழங்கியுள்ளது. ஆனால் இந்த அனுமதி பெண்களுக்கு வழங்கப்படவில்லை. இது ஏன்?.

பதில்: அதாவது, வேதம் வழங்கப்பட்ட மக்களின் பெண்களை மணமுடித்துக் கொள்ளலாம் என்று ஆண்களுக்கு திருக்குர்ஆன் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் முஸ்லிம் பெண்களுக்கு அவ்வனுமதியை அதாவது வேதம் வழங்கப்பட்ட ஆண்களை மணமுடித்துக்கொள்ளலாம் என்ற அனுமதியை திருக்குர்ஆன் வழங்கவில்லையே, ஏன்? என்பது இந்த சகோதரரின் கேள்வி.

இதைப்பற்றி திருக்குர்ஆன் கூறும்போது...

‘‘இன்று உங்களுக்கு தூய்மையான பொருட்கள் ஆகுமாக்கப்பட்டுவிட்டன. வேதம் வழங்கப்பட்ட மக்களுடைய உணவுகளும் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது. உங்களுடைய உணவுகளும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இறைநம்பிக்கை கொண்ட சுதந்திரமான பெண்களுக்கும் வேதம் வழங்கப்பட்ட மக்களைச்சார்ந்த சுதந்திரமான பெண்களுக்கும் உரிய திருமணக்கொடையை மஹரை முறைப்படி நீங்கள் கொடுத்துவிட்டால் (மணமுடித்துக்) கொள்ளலாம். அவர்கள் மானம் காப்பவர்களாகவும் தெருவில் திரியாதவர்களாகவும் மறைமுக உறவுகளைத் தொடராதவர்களாகவும் (இருக்கவேண்டும்). நம்பாமல் நிராகரிப்போரின் செயல்கள் அனைத்தும் அழிந்துபோய்விடும். மறுமையிலோ அவர்கள் நஷ்டவாளிகளாக இருப்பார்கள்’’ (அல்குர்ஆன் 5:5).

வேதம் வழங்கப்பட்டோரின் பெண்களை முஸ்லிம் ஆண்கள் மணமுடித்துக் கொள்ளலாம் என்று இந்த இறைவசனம்

அனுமதி வழங்குகின்றது. அதற்கு என்ன காரணம்?. வேதம் வழங்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அதாவது கிறிஸ்தவ, யூத பெண்கள் முஸ்லிம் ஆண்களை திருமணம செய்துகெண்டால் அவளுயைட கணவரோ கணவனுடைய வீட்டாரோ அவளுடைய சமய முன்னோடிகளான இறைத்தூதர்கள எள்ளளவும அவமானப்படுத்தமாட்டார்கள. ஏனென்றால் அச்சமயங்களின் இறைத்தூதர்கள் இஸ்லாமியர்களான நமக்கும் இறைத்தூதர்களே!. இறைத்தூதர் மூஸா அலைஹிஸ்ஸலாம் இறைத்தூதர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் இறைத்தூதர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் போன்றோரை யூத-கிறிஸ்தவர்களை விட அதிகமாக நாம் மதிக்கிறோம். அவர்கள் நம்பி ஏற்றுக்கொண்டள்ள இறைத்தூதர்களை நாமும் ஏற்றுக்கொள்டுள்ளோம். ஆதம் (அலை) நூஹ் (அலை) தாவுது (அலை) மூஸா (அலை) ஈஸா (அலை) போன்றோரை நாமும் நம்புகிறோம்.

யூத-கிறிஸ்துவர்கள் மனதார நம்பும் இறைத்தூதர்களை முஸ்லிம்களான நாமும் நம்புவதால் முஸ்லிம் குடும்பத்தில் யூத-கிறிஸ்துவப் பெண்ணுக்கு எள்ளளவும் அவமரியாதையோ அவமானமோ ஏற்படாது. ஆனால், யூதர்களும் கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களான எங்களுடைய இறைத்தூதரான முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஆகையால், ஒரு முஸ்லிம் பெண் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டு அங்க சென்றால் அங்கு கண்டிப்பாக முஹம்மது அவர்களுக்கு அவமரியாதையும் மரியாதைக்குறையும் ஏற்படுவதைக் காணநேரிடும். இன்னும் சொல்லப்போனால் அவளுடைய இறைநம்பிக்கையும் அங்கு கேலிகிண்டலுக்கு உள்ளாக்கப்படலாம். கண்டிப்பாக அதுவும் நிகழவே செய்யும்.

இதன் காரணமாகவே, முஸ்லிம் பெண்களுக்கு வேதம்வழங்கப்பட்ட ஆண்களைத் திருமணம் செய்யும் உரிமை கொடுக்கப்படவில்லை. அதேசமயம், முஸ்லிம் ஆண்களுக்கு அவ்வுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி கேட்ட சகோதரர் ஒரு இறைவசனத்தையும்

சுட்டிக்காட்டியுள்ளார். அத்தியாயம் அல்பகறாவின் வசனம் அது.

''இறைவனுக்கு இணைவைக்கும் பெண்களை நீங்கள் மணமுடிக்கலாகாது, அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும்வரை!. உங்களை வியப்பில் ஆழ்த்தும் (அழகுபெற்ற) இறைவனுக்கு இணைவைக்கும் பெண்ணைவிட இறைநம்பிக்கைகொண்ட அடிமைப்பெண் மேலானவள். இறைவனுக்கு இணைவைக்கும் ஆண்களை நீங்கள் மணமுடிக்கலாகாது, அவர்கள் இறைநம்பிக்கை கொண்டால் ஒழிய!. இறைவனுக்கு இணைவைக்கும் ஆண்கள் உங்களை ஈர்த்தாலும் அவர்களைவிட இறைநம்பிக்கைகொண்ட அடிமை மேலானவன். அவர்கள் நரகத்தின் பக்கம் அழைக்கிறார்கள். அல்லாஹ்வோ சொர்க்கத்தின் பக்கமும் அவன் அனுமதியோடு (கிடைக்கவுள்ள) மன்னிப்பின் பக்கமும் அழைக்கிறான். மக்கள் நல்லுபதேசம் பெறவேண்டும் என்பதற்காக தன்னுடைய கட்டளையை விளக்கமாக எடுத்துரைக்கிறான்'' (அல்குர்ஆன் 2:221).

இறைவனுக்கு இயைகற்பிக்கும் அப்பெண் செல்வந்தர் வீட்டுப்பெண்ணாக இருக்கலாம்; அழகும் சௌந்தர்யமும் நிறைந்த பெண்ணாக இருக்கலாம். பிரிட்டிஷ் இளவரசியாகக் கூட இருக்கலாம். ஆனால், அவளைவிட இறைநம்பிக்கைகொண்ட அடிமைப்பெண் மேலானவள் ஆவாள்.

அதேமாதிரி உங்களுடைய பெண்களை இறைவனுக்கு இணை கற்பிக்கும் ஆண்களுக்கு மணமுடித்துத் தராதீர்கள் என்றும் இவ்வசனம் சொல்கின்றது. ஏனென்றால் இறைவனுக்கு இணைகற்பிக்கும் ஆண் என்னதான் சிறந்தவனாக இருந்தாலும் அவனைவிட இறைவனை நம்பி ஏற்றுக்கொண்டுள்ள ஓர் அடிமை மேலானவன், சிறந்தவன் ஆவான்.

குர்ஆனுடைய சட்டங்கள் அனைத்தையும் முன்னால் வைத்து அனைத்தையும் ஒருசேரப் பார்க்கவேண்டும்.

அத்தியாயம் அல்மாஇதாவில்...

''மர்யமுடைய மகள் ஈஸா அல்லாஹ்வேதான் என்று

கூறியவர்கள் நிச்சயமாக இறைவனை நிராகரித்தவர்களாக ஆகிவிட்டார்கள். ஈஸாவோ, ‘இஸ்ரவேலர்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். என்னைப் பரிபாலிப்பவனும் உங்கள் அனைவரையும் பரிபாலிப்பவனும் அவனேயாவான்’ என்றுதான் கூறினார். இறைவனுக்கு யார் இணைகற்பிக்கிறானோ அவனுக்கு சொர்க்கத்தை அல்லாஹ் தடைசெய்துவிடுகிறான். அவன் தங்குமிடம் நரகமேயாகும். அநீதி இழைத்துக் கொள்பவர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை!” (அல்குர்ஆன் 5:72).

இன்னோரிடத்தில் திருக்குர்ஆன் கூறுகின்றது...

“மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நல்லவற்றை ஏவுகிறீர்கள்; தீமைகளைவிட்டு தடுக்கிறீர்கள்; அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறீர்கள். வேதம் வழங்கப்பட்ட மக்கள் இறைநம்பிக்கை கொண்டால் அவர்களுக்கு அதுவே நன்றாக இருக்கும். இறைவனை நம்புபவர்களும் அவர்களிடையே இருக்கவே செய்கிறார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கையற்ற பாவிகளாகவே இருக்கிறார்கள்” (அல்குர்ஆன் 3:110).

வேதம் வழங்கப்பட்ட மக்களிலும் எந்தப் பெண்கள் இறைவனை நம்பி ஏற்றுக்கொள்வார்களோ அவர்களையே திருமணம் செய்துகொள்ள முடியும். ஈஸா அலைஹிஸ்ஸலாமை அவர்கள் தேவகுமாரனாக எண்ணக்கூடாது. இறைவனின் திருத்தூதராகவே நினைக்கவேண்டும். அத்தோடு ஆற்றலும் வல்லமையும் படைத்த ஓரிறைவனாக அல்லாஹ்வையே நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

....

கேள்வி: கல்யாணம் ஆன பெண்ணாக இருந்தாலும் சரி, ஆகாத பெண்ணாக இருந்தாலும் சரி, இஸ்லாம் பெண்ணுக்கு இறுதிசாசனம் எழுதிவைக்கும் உரிமையை வழங்குவதில்லையே, ஏன்?.

பதில்: அதாவது, இறுதிச்சாசனம் எழுதிவைப்பதற்கான உரிமையை ஏன் பெண்களுக்கு இஸ்லாம் வழங்குவதில்லை

என்று சகோதரி கேட்டிருக்கிறார். இது தவறான குற்றச்சாட்டாகும். ஏற்கனவே என்னுடைய உரையில் நன் குறிப்பிட்டிருந்ததைப்போல இஸ்லாம் பெண்களுக்கு எல்லாவகையான பொருளாதார உரிமைகளையும் வழங்கியே உள்ளது. அதுவும் மேற்கத்திய நாடுகளைவிட 1500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கொடுத்துவிட்டிருக்கின்றது.

என்னுடைய உரையில் நான் இன்னொன்றையும் தெளிவாக விளக்கியிருந்தேன். பருவமடைந்த அறிவுள்ள ஒவ்வொரு பெண்ணும் இவ்வுரிமையைப் பயன்படுத்தலாம் என்ற கூறியிருந்தேன். பருமடைந்திருப்பதும் அறிவாளியாக இருப்பதும் கருத்தில்கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகளே!. அறிவுள்ள பருமடைந்த ஒவ்வொரு பெண்ணும் அவளுக்குக் கல்யாணம் ஆகியிருந்தாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி, சர்வ சுதந்திரமாக இஸ்லாம் தனக்கு வழங்கியுள்ள இவ்வுரிமையைப் பயன்படுத்தலாம். தன்னுடைய சொத்துகளை யாருக்குக் கொடுப்பது; எவ்வளவு கொடுப்பது என்று முடிவெடுக்கலாம். யாருடனாவது ஆலோசனை கலந்தும் அவள் முடிவெடுக்கலாம். யாருடைய ஆலோசனையையும் பெறாமலேயே முடிவெடுக்கலாம். அதை எழுதியும் வைக்கலாம்.

அவளுக்கு தாராளமாக இவ்வுரிமை இருக்கின்றது. இஸ்லாம் அதை எவ்விதத்திலும் தடை செய்யவில்லை.

....

கேள்வி: ஆணையும் பெண்ணையும் இஸ்லாம் ஒன்றாக பாவிக்கின்றது என்றால் ஆணுக்கு நான்கு திருமணங்கள்வரை செய்ய அனுமதியளிக்கும் இஸ்லாம் ஏன் அவ்வனுமதியை பெண்ணுக்கு வழங்கவில்லை?.

பதில்: அதாவது இஸ்லாம் ஆண்கள் நான்கு திருமணங்கள் செய்ய அனுமதிக்கின்றது. அதேசமயம் பெண்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைப் புரிய அனுமதி வழங்குவதில்லை. ஏன்? என்ன காரணம்? என்று இந்த சகோதரர் கேட்டுள்ளளார்.

இதுவிஷயத்தில் நீங்கள் ஒருசில அடிப்படைகளை மனதில் கொள்ளவேண்டும். முதல் விஷயம் இயல்பாகவே ஆணுக்கு பெண்ணைவிட அதிகமான இச்சையும் உணர்வும்

ஏற்படுகின்றன!.

இரண்டாவது, உடலமைப்பிலும் ஆணும் பெண்ணும் வேறுபடுகிறார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட துணைகளோடு சேர்ந்து வாழ்வதற்கான உடலமைப்பை ஆண் பெற்றிருக்கிறான். அவனுக்கு அது எளிதாகவும் இருக்கின்றது. ஆனால், பெண்ணால் இது இயலாத காரியம். மருத்துவ அறிவின்படி தாவிலக்கு காலத்தில் ஒரு பெண்ணுடைய மனமும் சிந்தனையும் வெகுவாகப் பாதிப்படைகின்றன. அவளுடைய நடவடிக்கைகளிலும் பழக்கவழக்கங்களிலும் ஒருவித சிடுசிடுப்பையும் வெறுப்ணர்வையும் அக்காலத்தில் வெளிப்படையாக நாம் காணமுடியும். பொதுவாக அக்காலத்தில்தான் கணவன்-மனைவி இடையே சண்டைகளும் சச்சரவுகளும் தோன்றுகின்றன.

பெண்குற்றவாளிகளைப் பற்றிய ஓர் அறிக்கை அண்மையில் அமெரிக்காவில் வெளியாகியது. அவ்வறிக்கை அளிக்கும் தகவலின்படி ெண் குற்றவாளிகள் பெரும்பாலோர் அந்தக் குற்றங்களை தங்களுடைய மாதவிலக்கு காலத்தில்தாம் செய்துள்ளார்கள்.

ஒர பெண்ணுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட கணவர்கள் இருந்தால் சிந்தனாரீதியாக அப்பெண்ணுடைய நிலை மிகவும கவலைக்குரியதாக மாறிவிடும்.

ஒரு பெண் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்களோடு உறவுகொண்டால் அவளுடைய உடல் பல்வேறு நோய்களுக்கு இலக்காகிவிடும் என்றும் ஒரு மருத்துவ குறிப்பு தெரிவிக்கின்றது. அந்நோய்கள் வெகுவிரைவில் பல்கிபெருகவும் செய்யும் என்றும் அக்குறிப்பு தெரிவிக்கின்றது. அதேசமயம ஓர் ஆண் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்துகொண்டால் இத்தகைய பாதிப்புகள் எதுவும் அவனுக்கு ஏற்படுவதில்லை.

ஓர் ஆண் பல பெண்களை திருமணம் செய்துகொண்டால் அவனுக்குப் பிறக்கும் பிள்ளைகளுடைய தந்தையும் தாயையும் நாம் எளிதாக அடையாளம் கண்டுகொள்ளலாம். அதாவது அந்தப் பிள்ளை தன்னுடைய தாயையும் தந்தையையும் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அடையளம் கண்டுகொள்ளமுடியும்.

அதேசமயம், ஒரு பெண் ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணங்களை செய்துகெண்டால் பிறக்கும் குழந்தைகளுக்கு தாய் வேண்டுமானால் யாரென்று தெரிந்துகொள்ளமுடியுமே தவிர, தன்னுடைய தந்தை யார் என்று எந்தக் குழந்தையாலும் அறிந்துகொள்ள இயலாது.

தாய்-தந்தை யார் என்று தெரிந்துவைத்திருப்பது இஸ்லாத்தைப் பொருத்தவரை மிகமுக்கியமான விஷயம். உளவியல் அறிஞர்களும் இதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்கள். ஒரு குழந்தை தன்னுடைய தாய் யார்? தந்தை யார்? என்பதைத் தரிெந்துகொள்ளவிட்டால் அதனுடைய மனது மிகவும் பாதிப்படைகின்றது. அதனுடைய சிந்தனையையும் இயல்பான வளர்ச்சியையும் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். தவறான நடத்தையை மேற்கொள்ளும் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுடைய இளமைப்பருவம் மிக மோசமாக இருப்பதை நீங்கள் காணலாம். இதுவே அதற்குக் காரணம் ஆகும்.

ஏதேனும் ஒரு குழந்தையை பள்ளிக்கூடத்தில் சேர்க்க நினைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?. பெற்றோர்கள் என்று இரண்டு பேருடைய பெயர்களை எழுதியாகவேண்டுமே?. இம்மாதிரியான குழந்தையை மற்றவர்கள் எப்படி கூப்பிடுவார்கள் என்பதுகூட உங்களுக்குத் தெரியாதா?.

பதில் சொல்லவேண்டுமே என்பதற்காக நீங்கள் ஏதேனும் காரணங்களைத் தேடிக்கண்டுபிடித்துக் கூறலாம். உதாரணமாக, குழந்தை இல்லை என்பதற்காகவும் மனைவி மலடயாக இருக்கிறாள் என்பதற்காகவும் கணவன் இன்னொரு திருமணம் செய்துகொள்ளலாம் என்றால் கணவனிடம் ஏதேனும் குறை இருந்தால் மனைவி ஏன் இன்னொரு திருமணம் செய்துகொள்ளக்கூடாது? என்று நீங்கள் கேட்கலாம்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எந்த ஓர் ஆணும் நூற்றுக்கு நூறு சதவீதம் தன்னுடைய ஆண்மையை இழந்துவிடுவதில்லை. அவனால் இல்லறவாழ்வில் ஈடுபட முடியுமென்றால் கண்டிப்பாக அவன் ஒரு குழந்தைக்கு

தந்தையாக முடியும். குடும்பக்கட்டுப்பாடு சிகிச்சையை அவன் மேற்கொண்டிருந்தாலும் கூட!. இதன்காரணமாக குழந்தையின் பிறப்பிலேயே சந்தேகம் தோன்றிவிடும். இந்த மனிதருக்கு தந்தையாகும் தகுதி அறவே இல்லை என்று எந்த டாக்டரும் உத்தரவாதம் அளிக்கவேமாட்டார்.

மனைவிக்கு ஏதேனும் விபத்தோ அல்லது கடுமையான நோயோ ஏற்பட்டுவிட்டால் கணவன் மறுமணம் செய்துகொள்ளலாம் என்றால் கணவனுக்கு ஏதேனும் விபத்தோ அல்லது கணவனுக்கு ஏதேனும் கடுமையான நோயோ ஏற்பட்டுவிட்டால் மனைவி ஏன் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளக்கூடாது? என்றும் நீங்கள் கேள்வி எழுப்பலாம். அந்த அனுமதி மனைவிக்கும் வேண்டும் என்றும் கூறலாம்.

இத்தகைய சூழ்நிலையில் இரண்டு வகையான பாதிப்புகள் ஏற்படக்கூடும். முதல் பாதிப்பு கணவனால் வேலைக்கு போகவோ வருமானம் ஈட்டவோ முடியாது என்பதால் அவனால் மனைவி-மக்களைக் காப்பாற்ற முடியாது. இரண்டாவது பாதிப்பு அவனால் தாம்பத்ய தேவையை நிறைவேற்ற இயலாது.

முதல் பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு இஸ்லாம் ‘ஜகாத்’ என்றொரு வழியை முன்வைக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் அகப்பட்டோருக்கு ஜகாத் நிதி மூலம் உதவி ஒத்தாசை அளித்து அவர்களை தூக்கிவிடுமாறு இஸ்லாம் கட்டளையிடுகின்றது.

இரண்டாவது பாதிப்பைப் பொருத்தவரை, ஓர் ஆணோடு ஒப்பிடும்போது ஒரு பெண்ணுடைய பாலியல் ஆர்வம் குறைவானதாகவே இருக்கின்றது. இதுவும் மருத்துவம் தரும் தகவல்தான். அப்படியும் ஒருவேளை அவள் திருப்தியாக இல்லையென்றால் ‘குலஃ’ என்றொரு வாசலையும் வெளியேறுவதற்காக இஸ்லாம் திறந்தே வைத்திருக்கின்றது. அவ்வாசல் வழியாக அவள் வெளியேறிச்சென்று இரண்டாவதாக எவரையாவது திருமணம் முடித்துக்கொள்ளலாம். இவ்வழியைப் பன்பற்றினால் பெண்ணுக்கு எந்தவிதமான ஆபத்தும் கிடையாது. அவள் உடல்நலத்தோடு ஆரோக்கியமாகவே இருக்கிறாள். அவளால்

எளிதாக மறுமணம் செய்துகொள்ளமுடியும். அதேசமயம், அவளுக்கு நோய்நொடி ஏதேனும் இருந்தால் அவளை யார் திருமணம் செய்துகொள்வார்?.

....

கேள்வி: பொதுவாக எல்லா சமயங்களின் வேதமறைகளிலும் நல்லவிஷயங்களே எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைப் பின்பற்றுவோர் எவரும் பெண்களை மதிப்பதாகக் காணோம். வேதங்களில் எழுதப்பட்டுள்ளதை உண்மை என்று நம்புவதா? இல்லை யதார்த்த உலகில் நேரடியாகக் காண்பதை உண்மையென்று நம்புவதா?.

பதில்: என்னுடைய இந்த சகோதரர் ஓர் அழகான கேள்வியைக் கேட்டுள்ளார். புனித வேதங்கள் அனைத்திலும் நல்ல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளது உண்மைதான். ஆனால், எதைச் செய்கிறார்கள் என்பதுதானே முக்கியம்!. கருத்துகளைப் பேசிக் கொண்டிருப்பதைவிட செயல்களுக்குத்தான் நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆகையால் முழுக்கமுழுக்க நான் இதை ஆதரிக்கிறேன். நான் ஏற்கனவே என்னுடைய உரையில் குறிப்பிட்டிருந்தேன். முஸ்லிம்கள் திருக்குர்ஆனையும் நபிமொழிகளையும் விட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். நாங்கள் அவர்களை அழைக்கிறோம். குர்ஆனின் பக்கம் வாருங்கள் நபிமொழிகளின் பக்கம் வாருங்கள் முழுமையான முஸ்லிம்களாக மாறுங்கள் என்று அவர்களை அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

எல்லா சமயங்களின் வேதப்புத்தகங்களிலும் நல்ல விஷயங்களே எழுதப்பட்டுள்ளன என்பது கேள்வியின் முதற்பகுதி. நான் இதிலிருந்து வேறுபடுகிறேன். எல்லா சமயங்களின் வேதங்களிலும் நல்ல விஷயங்களே கூறப்பட்டுள்ளன. அவற்றை விவாதிப்பதை தவிர்க்கவேண்டும் எனும் உங்களுடைய கருத்திலிருந்து நான் முற்றிலும் வேறுபடுகிறேன்.

ஏற்கனவே நான் ‘இஸ்லாமிலும் மற்ற சமயங்களிலும் பெண்ணின் நிலை’ என்று தலைப்பில் உரை ஒன்றை ஆற்றியுள்ளேன். பெண்ணைப் பற்றி இஸ்லாம் கூறுகின்ற

கரத்துகளையும் மற்ற மதங்களான புத்தமதம், கிறிஸ்தவ மதம், மற்றும் யூதமதம் போன்ற மதங்களின் பெண்ணைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதையும் ஒப்பிட்டு உரையாற்றியுள்ளேன். அவ்வுரையைக் கேட்டால் எந்த மதம் பெண்களுக்கு முறையான உரிமைகளை வழங்கியுள்ளது என்று நீங்கள் ஒரு முடிவுக்கு வரலாம். அந்த போதனைகளின் அடிப்படையில் செயல்படவேண்டும். அதுதான் நாம் உடனடியாக செய்யவேண்டிய காரியம்!.

அந்த போதனைகளில் குறிப்பிட்ட சில பாகங்களை மட்டும் இப்போது மக்கள் பின்பற்றுகிறார்கள். சிலவற்றை ஏற்று நடக்கிறார்கள் என்றால் சிலவற்றை விட்டுவிடுகிறார்கள். உதாரணமாக, இஸ்லாமிய குற்றவியல் சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்படையிலான தண்டனைகளை எடுத்துக்கொண்டால் சஊதி அரேபியா போன்ற நாடுகளில் அச்சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. அதுவரைக்கும் சஊதி அரசாங்கம் மிகச்சிறப்பாகவே செயல்படுகின்றது. அதேசமயம் வேறுசில விஷயங்களில் அதே அரசாங்கள்ம குர்ஆனை விட்டும் நபிமொழிகளை விட்டும் வெகுதூரம் விலகியே நிற்கின்றது. இப்போது சாம் செய்யவேண்டியது என்னவென்றால் சஊதி அரசின் குற்றவியல் சட்டங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அச்சட்டங்கள் பலனைத்தரும் என்று நமக்குத்தோன்றினால் முழுஉலகிலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அவ்விதமே வேறு ஏதேனும் நாட்டில் இஸ்லாமிய பொரளாதாரச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன எனத்தெரியவந்தால் அவற்றை ஆய்வுக் கண்கொண்டு நோக்கி உலகெங்கும் அவற்றை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

சகோதரரே! இஸ்லாமிய சட்டங்கள்தாம் சிறந்தவை என்பதை உலகிற்கு எடுத்துக்கூறவே நாம் இங்கு ஒன்றுகூடியுள்ளோம். அவற்றின் அடிப்படையில் நாம் செயல்படவில்லை என்றால் அது நம்முடைய குற்றமே ஒழிய, இஸ்லாமிய மார்க்கத்தின்

குற்றமாகாது. அச்சட்டங்களின் அடிப்படையில் வாழமாறும் சமூகத்தை கட்டமைக்குமாறும்தான் நாம் மக்களை அழைக்கிறோம். குர்ஆனையும் நபிமொழிகளையும் முழுமையாக உர்ந்து அவற்றின் அடிப்படையில் வாழத்தயாராகுமாறு மக்களை அழைக்கிறோம்.

தனக்கான பதிலை சகோதரர் பெற்றிருப்பார் என நினைக்கிறேன்.

....

கேள்வி: இஸ்லாமிய அடிப்படையில் ஏன் எற்தப் பெண்ணும் இறைவனின் தூதராக அனுப்பப்படவில்லை?.

பதில்: அதாவது, இஸ்லாத்தில் ஏன் எந்தப் பெண்ணுக்கும் 'இறைத்தூதர்' எனும் அந்தஸ்த்து கிடைக்கவில்லை என்பது இந்த சகோதரியின் கேள்வி!. இறைவனிடம் இருந்து 'இறைச்செய்தி' எனும் வஹி வருகின்ற இறைவனிடமுள்ள தொடர்பைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு சமதாயத்திற்கு வழிகாட்டுகின்ற ஆளுமையைத்தான் நீங்கள் 'இறைத்தூதர்' என்ற குறிப்பிடுகிறீர்கள் என்றால், அப்படிப்பட்ட 'இறைத்தூதராக' ஒரு பெண் அனுப்பப்படவில்லை என்பது உண்மையே ஆகும். ஒரு குடும்பத்தின் பாதுகாவலராக ஆணே இருப்பார் என்று குர்ஆன் தெள்ளந்தெளிவாக கூறிவிட்டது. குடும்பத்தின் தலைவராக ஆணே இருப்பார் எனும்போது சமுதாயத்தின் தலைவராக மட்டும் எவ்வாறு பெண் திகழமுடியும்?.

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல தலைமைப் பொறுப்பில் இருக்கும் பெண் தொழுகைக்கு இமாமத்தும் செய்தாகவேண்டும். ஒரு பெண் தலைமையேற்று தெழுகையை நடத்தும்போது பின்னால்நின்று தொழுகின்ற ஆண்களுக்கு அது மிகவும் தர்மசங்கடத்தையே ஏற்படுத்தும். குனிதல், சிரம் தாழ்த்துதல், தலையைத் தரையில வைத்தல் போன்ற நிகழ்வுகளை எல்லாம் முறைப்படி செய்வது கடினம். அத்தோடு ஓர் இறைத்தூதர் எந்நேரமும் மக்கள் தொடர்பிலேயே இருந்தாகவேண்டும். ஒரு பெண்ணால் இது சாத்தியப்படாது. ஏனென்றால் ஆணும் பெண்ணும் சமூகவாழ்வில் ஒன்று கலக்கக்கூடாது என்று திட்டவட்டமாக இஸ்லாம்

அறிவித்துள்ளது. அவ்வாறே இறைத்தூதராக அனுப்பப்பட்ட பெண் கருவுற்றால் ஒருசில மாதங்கள் அவள் 'விடுப்பில்' இருந்தே ஆகவேண்டும். அக்காலத்தில் தன்மீதான பொறுப்பை அவள் நிறைவேற்ற இயலாது. ஒரே நேரத்தில் ஓர் ஆண் தந்தையின் றொறுப்பையும் இறைத்தூதர் எனும் பொறுப்பையும் நிறைவேற்றுவது எளிதாக இருக்கும் அதேபட்சத்தில் ஒரு பெண்ணால் இந்த இருவேறு பெறுப்புகளையும் ஒருசேர நிறைவேற்றுவது கடினமாகத்தான் இருக்கும்.

இறைத்தூதர் என்பவர் தான் பணியற்றவேண்டிய சமூகத்தின் பல பாகங்களுக்கும் பயணம் செயயவேண்டியிருக்கும். அதுவும் சமயங்களில் தனிமையில் பயணிக்கவேண்டியிருக்கும். ஒரு பெண் தனித்து பயணிப்பது என்பது சொவ்தற்கு எளிதாக இருந்தாலும் யதார்த்த உலகில் அதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு!. இறைத்தூதரை இறைத்தூதராகத்தான் பார்க்கவேண்டும். அவர் பெண்ணாக இருக்கும் பட்சத்தில் யாரும் அவரை இறைத்தூதராக பார்க்கமாட்டார்கள். பெண்ணாகத்தான் பார்ப்பார்கள்.

இறைத்தூதரர் என்று சொல்லின் மூலம் நீங்கள் இறைவனின் அருள்பெற்ற இறைவனின் நெருக்கத்தை அடைந்த தூயஆன்மாக்களை குறிப்பிடுகிறீர்கள் என்றால், அதற்கு பல உதாரணங்களை நம்மால் குறிப்பிடமுடியும். எல்லோரிலும் தூய்மையானவர் என்று நம்மால் அன்னை மர்யம் அவர்களை முனனிறுத்த முடியும். அவரை ஓர் அழகிய உதாரணமாக திருக்குர்ஆனே குறிப்பிடுகின்றது.

"மர்யமே! அல்லாஹ் உம்மை தேர்ந்தெடுத்துள்ளான். உம்மை தூய்மைப்படுத்தியுள்ளான். உலகிலுள்ள பெண்களில் எல்லாம் சிறந்தவராக உம்மை மேன்மைப்படுத்தியுள்ளான்" என்று வானவர்கள் அவரிடம் கூறியதை நினைவுகூருங்கள்' (அல்குர்ஆன் 3:42).

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பொருள் இறைத்தூதருக்கு இருக்குமானால், மர்யம் அலைஹாஸ்ஸலாம் அதாவது ஈஸா அவர்களின் தாயார் அதற்கு மிகவும் பொருத்தமானவர்கள். அவரைக் குறித்து இன்னும் திருக்குர்ஆன்

குறிப்பிடுகின்றது.

''இறைநம்பிக்கை கொண்டோருக்கு உதாரணமாக ஃபிர்அவ்னின் மனைவியை அல்லாஹ் குறிப்பிடுகிறான். 'என்னிறைவா! எனக்கான ஒரு வீட்டை சொர்க்கத்தில் கட்டித்தருவாயாக! ஃபிர்அவ்னை விட்டும் அவனுடைய தீயகாரியங்களை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக! இந்த தீயோர்களின் செயல்களை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக!' என்று அவர் முறையிட்டார்'' (அல்குர்ஆன் 66:11).

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மன்னாதிமன்னனாக வாழ்ந்த ஃபிர்அவ்னுடைய மனைவிதான் ஆஸியா. உலக வாழ்க்கையின் சகல சௌக்கியங்களும் வசதிகளும் அவருடைய காலடியில் கொட்டிக்கிடந்தன. அவற்றையெல்லாம் அவர் புறந்தள்ளிவிட்டு சொர்க்கத்தின் வீட்டை தருமாறு இறைவனிடம் கேட்கிறார். அன்னை மர்யம், அன்னை ஆஸியா போன்றோர் தவிர, அன்னை கதீஜா, அன்னை ஃபாத்திமா போன்றோரையும் மிகச்சிறந்த மேன்மக்களாக இஸ்லாம் முன்னிலைப்படுத்துகின்றது.

திருப்தியளிக்கும் பதிலைப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

....

கேள்வி: ஆண்கள் அதிகபட்சமாக நான்கு திருமணங்களை செய்துகொள்ள இஸ்லாம் அனுமதிக்கின்றது என்ற குறிப்பிட்டீர்கள். ஆனால், இஸ்லாத்தின் இரறத்தூதரான முஹம்மத் அவர்கள் பதினொரு திருமணங்களை முடித்துள்ளார்கள். ஏன், என்ன காரணம்?.

பதில்: இஸ்லாம் அதிகபட்சமான நான்கு திருமணங்களுக்குத்தானே அனுமதி அளிக்கின்றது. அப்படியிருக்கும்போது இறைவனின் தூதர் மட்டும ஏன் பதினொரு திருமணங்களை செய்தார்கள் என்று இந்த சகோதரர் கேள்வி கேட்டுள்ளார்.

இஸ்லாம் அதிகபட்சமாக நான்கு திருமணங்களுத்தான் அனுமதி அளிக்கின்றது என்பது உண்மைதான்.

அத்தியாயம் அந்நிஸாவில் இறைவன் கூறுகிறான்.

“உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாகவோ மூன்றுமூன்றாகவோ நான்கு நான்காகவோ மணமுடித்துக் கொள்ளுங்கள்!” (அல்குர்ஆன் 4:3).

அத்தியாயம் அஹ்ஸாபில் அல்லாஹுதஆலாவின் இந்தக் கட்டளையையும் நம்மால் பார்க்க முடிகின்றது.

“(இறைவனின் தூதரே!) இதன்பிறகு நீங்கள் வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்துகொள்ள இயலாது. அதைப்போலவே ஒரு மனைவிக்குப் பதிாக என்னதான் அழகுபடைத்தவளாக இருப்பினும் வேறு ஒருத்தியை மாற்றிக்கொள்ளவும் இயலாது. உங்களது வலக்கரத்தின் கீழுள்ள (அடிமைப்) பெண்கள் தவிர!. அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றல் படைத்தவனாக உள்ளான்” (அல்குர்ஆன் 33:52).

இறைவனின் தூதரின் மனைவியாக இருந்த அத்துனை பேரையும் அப்படியே தொடர்ந்து மனைவியாக வைத்துக்கொள்ளும் அனுமதியை திருக்குர்ஆனின் இவ்வசனம் வழங்குகின்றது. அத்தோடு வேறு எந்த பெண்ணையும் மனைவியாக ஆக்கிக்கொள்ளக்கூடாது என்று தடையும் செய்கின்றது, அமைப்பெண்களைத் தவிர!.

இறைத்தூதரால் எந்தப் பெண்ணையும் மனைவியாக ஆக்கிக்கொள்ள முடியாது என்பதோடு அவர் தன்னுடைய எந்தவொரு மனைவியையும் தலாக் சொல்லி விடுவிக்கவும் முடியாது. இறைத்தூதரின் மனைவிமார்கள் மற்ற இறைநம்பிக்கையாளர்களுக்கு அன்னையரைப் போலாவார்கள். ஆகையால், இறைத்தூதரின் மறைவிற்குப் பிறகு அவர்களை வேறு யாரும் மறுமணம் செய்துகொள்ளவும் முடியாது.

இறைத்தூதர் புரிந்து திருமணங்களை எல்லாம் ஆராய்ச்சிக் கண்கொண்டு நீங்கள் பார்த்தீர்கள் என்றால் இத்திருமணங்கள் அனைத்துமே ஏதேனுமொரு சமூக நலனையோ அரசியல் காரணங்களையோ முன்னிருத்தி செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். அவருடைய சொந்த இச்சை அல்லது தனிப்பட்ட

விருப்பம் அல்லது பெண்ணாசை கொஞ்சம்கூட இவற்றில் இல்லவே இல்லை என்பது பட்டப்பகலவனைப் போல வெளிப்படுவதையும் காணலாம்.

இறைத்தூதரின் முதல் திருமணம் அன்னை கதீஜா அவர்களோடு நடைபெற்றது. அப்போது அணணலாரின் வயது 25. கதீஜாவின் வயதோ 40. அன்னை கதீஜா உயிரோடு இருந்தகாலம்வரை அண்ணலார் வேறு எந்தப் பெண்ணையும் மணக்கவில்லை. அண்ணலாருடைய வயது 50 ஆனபோது அன்னை கதீஜா மறைவுற்றார்கள்.

தம்முடைய 53 வயதிற்கும் 56 வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் அண்ணலார் எல்லா திருமணங்களையும் புரிந்துள்ளார்கள். உண்மையிலேயே பெண்களின் மீது மையல்கொண்டு மணமுடித்திருக்க நாடியிருந்தால் தம்முடைய இளமைப் பருவத்தில் அல்லவா அண்ணலார் திருமணங்களைப் புரிந்திருக்கவேண்டும்?. வயத ஏற ஏற இல்லற இச்சை குறைந்துகொண்டே வரும் என்று மருத்துவமே சொல்கின்றதே!.

இரண்டே இரண்டு திருமணங்களைத்தான் அண்ணலார் தம்முடைய விருப்பத்தின்படி செய்தார்கள். அன்னை கதீஜாவோடும் அன்னை ஆயிஷாவோடும்!. மற்ற அனைத்து திருமணங்களும் காலத்தேவை கருதியும் அரசியல் சூழ்நிலை கருதியும் சமூக நலன்களை முன்னிருத்தியும் செய்யப்பட்டவையே!.

இரண்டே இரண்டு அன்னையரைத் தவிர அனைவரின் வயதும் 36 முதல் 50 வயதிற்கு இடைப்பட்டதாகவே இருந்தது. ஒவ்வொரு திருமணத்திற்கும் பின்னணிக் காரணங்களை நம்மால் விரிவாகக் கூறமுடியும்.

உதாரணத்திற்க அன்னை ஜுவைரியா உடனான திருமணத்தை எடுத்துக்கொள்வோம். பனூ முஸ்தலிக் எனும் கோத்திரத்தைச் சார்ந்தவர் அன்னை ஜுவைரியா (ரழி). அந்தக் கோத்திரத்திற்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான தொடர்பும் உறவும் மிகவும் சீர்கெட்டிருந்தது. முஸ்லிம்கள் அவர்கள் மீது போர்தொடுத்து அவர்களைத் தோற்கடித்துவிட்டிருந்தார்கள். போர்வெற்றியைத் தொடர்ந்து அண்ணலார் ஜுவைரியாவை

மணமுடித்துக் கொண்டார்கள். அதன் காரணமாக முஸ்லிம்கள் அனைவரும் தம்மிடம் பிணைக்கைதிகளாக இருந்த பனூ முஸ்தலிக் கைதிகளை விடுவித்துவிட்டார்கள். 'எங்கள் தூதருடைய உறவினர்களை நாங்கள் எவ்வாறு கைதிகளாக நடத்தமுடியும்?' என்று முஸ்லிம்கள் காரணம் கூறினார்கள். அதன்பிறகு அக்கோத்திரத்தாருக்கும் முஸ்லிம்களுக்குமான உறவும் தொடர்பும் எந்தளவு மேம்பட்டன என்பதைக் கூற தேவையேயில்லை.

அதேபோன்று அன்னை மைமூனா உடன் நடைபெற்ற திருமணத்தையும் எடுத்துக்கொள்வோம். நஜ்த் எனும் கோத்திரத்தாருடைய தலைவரின் தங்கை அவர். இந்தக் கோத்திரத்தார் என்ன செய்தார்கள் தெரியுமா?. முஸ்லிம்களுடைய தூதுக்குழுவினர் 70 பேரை கொடூரமாகக் கொன்று விட்டார்கள்; ஷஹீதாக்கி விட்டார்கள். முஸலிம்களுடைய கடும் பகைவர்களாக விளங்கினார்கள். மைமூனாவுடனான திருணமணத்திற்குப் பின்பு என்ன ஆனது தெரியுமா?. இவர்கள் அனைவரும் தமது வசிப்பிடங்களையும் வாழ்விடங்களையும் காலி செய்துவிட்டு மதீனாவிற்கே குடிவந்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல, முஹம்மது அவர்களை இறைவனின் தூதராக ஒப்புக்கொண்டு அண்ணலாருக்குக் கீழ்ப்படிந்து வாழவும் இசைந்தார்கள்.

முஃமின்களின் அன்னையான உம்மு ஹபீபா (ரழி) மக்காவின் தானைத்தலைவர்களில் ஒருவரான அபு ஸுஃப்யானுடைய செல்லமகளாவார். இத்திருமணத்தால் ஏற்பட்ட விளைவுகளை மக்கா வெற்றியின்போது நம்மால் பார்க்கமுடியும்.

அன்னை ஸஃபிய்யா (ரழி) மிகமுக்கியமான யூதர் குலத்துத் தலைவரின் மகளாவார். அவருடனான திருமணத்திற்குப் பிறகு, யூர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு குறிப்பிடத் தகுந்த அளவு மேம்பட்டது.

அண்ணலார் செய்த அனைத்துத் திருமணங்களுக்கும் இவ்வாறு பின்னணிக் காரணங்கள் பலவுண்டு!. அரசியல் காரணங்கள், சமூக நலன்கள் பேன்றவற்றை முன்னிருத்தியே அனைத்து திருமணங்களும் செய்யப்பட்டன. சமூகத்தில்

நிலவிவந்த ஒரு மோசமான மரபை முறியடிப்பதற்காக அன்னை ஜைனப் (ரழி) உடன் திருமணம் செய்யப்பட்டது. வளர்ப்பு மகனையும் செந்த மகனையும் அரபு மக்கள் ஒன்றாக பாவித்து வந்தார்கள். வளர்ப்பு மகனின் மனைவியையும் செந்த மகனின் மனைவியைப போன்றே கருதி வந்தார்கள். வளர்ப்பு மகனின் மனைவி விதவையாவி விட்டாலோ தலாக் எனும் மணவிலக்கு செய்யப்பட்டுவிட்டாலோ அப்பெண்ணை மறுமணம் செயயக்கூடாது என்று கருதி வந்தார்கள். அதை இஸ்லாம் ஒப்புக் கொள்ளவில்லை. அந்த வறான நடைமுறையை ஒழிப்பதற்கான அன்னை ஜைனபோடு திருமணம் புரியப்பட்டது.

இப்படி ஒவ்வொரு திருமணத்தையும் எடுத்து ஆராய்ந்து பாருங்கள். காரணம் என்னவென்று தெளிவாக விளங்கும். என்ன செய்தார்கள்? என் செய்தார்கள்? என்று கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்காமல் சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியுள்ளார்கள், இஸ்லாமிய எதிரிகள். அதை அப்படியே நடுநிலையாளர்கள் நம்பிவிடக் கூடாது. பின்னணிக் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் பெண்ணாசையால் தான் முஹம்மது பல திருமணங்களைப் புரிந்தார் என்று கூறப்படுவது எவ்வளவு கேவலமான குற்றச்சாட்டு என்பது விளங்கும்.

சரியான பதிலைப் பெற்றுக்கொண்டீர்கள் என நினைக்கிறேன்.

....

கேள்வி: ஒன்றுக்கும் மேற்பட்ட பல திருமணங்களை புரிய இஸ்லாம் ஆண்களுக்கு அளித்துள்ள அனுமதியால் பெண்களுக்கு என்ன பயன்?.

பதில்: பலதிருமணங்களைப் புரிய ஆணுக்கு அனுமதி கொடுப்பதால் பெண்ணுக்கு என்ன பலன் என்று நீங்கள் கேட்கிறீர்கள். பெண்ணுக்கு ஏற்படுகின்ற முதல் பலன் அவள் கற்போடு இருப்பதுதான். ஆண் ஒரேஒரு திருமணம் செய்துகொள்வதால் உலகத்தில் எத்தனை பெண்கள் மிகைத்திருப்பார்கள் என்பது ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டது. லட்சக்கணக்கான பெண்கள் திருமண உறவுக்கு வெளியே காலம் தள்ளவேண்டியிருக்கும். ஏனேனில்

அவர்களை கல்யாணம் செய்துகொள்ள ஆண்களே இருக்கமாட்டார்கள்.

இவ்வித பெண்கள் வேறுவழியில்லாமல் பொதுச்சொத்தாக மாறுவதைத் தடுக்க வேறுவழியே இல்லை. எனவே, இத்தகைய பெண்களின் கற்பைக் காப்பாற்றவேண்டும்; அவர்கள் தீயவழியில் செல்வதைத் தடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இஸ்லாம் பலதார மணத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

....

கேள்வி: குழந்தைகளைத் தத்தெடுக்க இஸ்லாத்தில் அனுமதியுண்டா?.

பதில்: அதாவது, குழந்தைகளைத் தத்தெடுப்பது *Adoption* இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என இந்த சகோதரர் கேட்கிறார். ஏதேனும் ஓர் அநாதைக் குழந்தையை அல்லது ஏழைக் குழந்தையை எடுத்து அக்குழந்தைக்குத் தேவையான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து வீட்டிலேயே சொந்தக்குழந்தையைப் போறு வளர்ப்பது என்பதை மனதில்கொண்டு சகோதரர் இந்தக் கேள்வியை கேட்டிருந்தால் அதற்கு இஸ்லாத்தில் கண்டிப்பாக அனுமதியுண்டு. இன்னும்சொல்லப்போனால் திருக்குர்ஆன் அதைச் செய்யுமாறு வலியுறுத்துகின்றது. வறியோரையும் ஆதவற்றோரையும் தேவையுடையோரையும் ஆதரித்துப் பராமரிக்குமாறு ஆணையிடுகின்றது.

ஒரு தந்தையின் இடதிலிருந்து அக்குழந்தையை வளர்க்க நீங்கள் நினைத்தாலும் இஸ்லாம் அதனை வரவேற்கவே செய்கின்றது. ஊக்கப்படுத்துகின்றது. அதேசமயம் சட்டரீதியாக ‘வளர்ப்பு மகன்’ அல்லது ‘வளர்ப்பு மகள்’ என்று எந்தக் குழந்தையையும் கருதுவதையும் அழைப்பதையும் இஸ்லாம் விரும்பவில்லை; தடை செய்கின்றது. அக்குழந்தையின் விண்ணப்த்தில் தந்தை என்ற இடத்தில் நீங்கள் உங்களுடைய பெயரை எழுதுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. நீங்கள் அவ்விதம் எழுதமுடியாது.

ஏனென்றால் சட்ட ரீதியாக அக்குழந்தை உங்களுடைய குழந்தையாக கருதப்படும் பட்சத்தில் பல்வேறு வகைப்பட்ட

சங்கடங்கள் தோன்றும்.

முதலாவதாக, அக்குழந்தையின் உண்மையான அடையாளம் அழிக்கப்படுகின்றது.

இரண்டாவதாக, ஒரு குழந்தையை தத்தெடுத்த பிறகு, உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் கண்டிப்பாக உங்களுடைய நடத்தையில் மாற்றம் ஏற்பட்டே தீரும்.

மூன்றாவதாக, உங்களுக்குப் பிறந்த குழந்தையும் தத்தெடுத்த குழந்தையும் வேறுவேறு பாலினராக இருந்தால் (அதாவது நீங்கள் ததெடுத்த குழந்தை ஆண்குழந்தை, உங்களுக்குப் பிறந்த குழந்தை பெண்குழந்தை) ஒரேவீட்டில் இருப்பதில் பெரும்சிக்கல்கள் ஏற்படும். எப்படியிருப்பினும் அவர்கள் சொந்த கூடப்பிறந்த சகோதர-சகோதரிகள் ஆகமுடியாது. அவ்விதமே தத்தெடுத்த குழந்தை பருவ வயதை எட்டிவிட்டால் பிரச்சனை இன்னும் அதிகமாகும். அக்குழந்தை ஆண் குழந்தை என்பதால் வீட்டிலுள்ள பெண்கள் பர்தாவை கடைப்பிடிக்கவேண்டியிருக்கும். பெண்குழந்தை என்றால் ஆண்களுக்கு முன்பு வரலாகாது. வளர்ப்புத் தந்தையோடும் பர்தாவை கடைப்பிடித்தாகவேண்டும். ஏனென்றால், அவர் உண்மையான தந்தையல்லவே!.

பிரச்சனை அத்தோடு முடிந்துவிடாது. சொத்துப் பங்கீட்டின்போதும் பிரச்சனை ஏற்படும். வீட்டின் தலைவர் இறந்த பிறகு இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் சட்டரீதியான வாரிசுகளுக்கே சொத்து பங்கிட்டு அளிக்கப்படும். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வாரிசுரிமைச் சட்டங்களின் அடிப்படையில் சொத்து பிரிக்கப்படும். தத்தெடுத்த குழந்தைக்கும் சொத்து அளிக்கப்பட்டால் மற்ற வாரிசுகள் பாதிக்கப்படுவார்கள்.

தத்தெடுத்தவருக்கு சொந்தக் குழந்தைகள் இருப்பின் அக்குழந்தைகளின் உரிமை பாதிக்கப்படும். குழந்தைகள் இல்லையென்றால் மனைவியும் மற்ற உறவினர்களும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வளவு பிரச்சனைகள் இருப்பதால்தான் இஸ்லாம் தத்தெடுப்பதை ஆதரிக்கவில்லை.

....

கேள்வி: *தங்களுடைய உரையில் பெண்ணுக்கு தலாக் அளிக்கப்பட்டால் அவளுடைய 'இத்தா' காலத்தில் எல்லா செலவினங்களையும் அந்தக் கணவனே பொறுப்பேற்க வேண்டும் என்ற கூறினீர்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால் இத்தாவிற்குப் பிறகு அப்பெண்ணின் செலவினங்களுக்கு யார் பொறுப்பு?.*

பதில்: *என்னுடைய இந்த சகோதரி அற்புதமான ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார். தலாக்கிற்குப்பிறகு இத்தா இருக்கும் காலத்தில் ஏற்படுகின் றஎல்லா செலவினங்களுக்கும் கணவனே பொறுப்பேற்க வேண்டும். இந்த காலம் ஏறக்குறைய மூன்று மாதங்கள் அல்லது அப்பெண் கர்ப்பிணியாக இருந்தால் பிரசவிக்கும்வரை!.*

இத்தாவிற்குப் பிறகு அப்பெண்ணின் எல்லா செலவினங்களையும் அவளுடைய தந்தையோ அல்லது சகோதரனோ ஏற்றாகவேண்டும். ஏதேனும் காரணங்களால் அவ்வாறு ஏற்கயியலாது எனில், இஸ்லாமிய உம்மத்தின் மீது அது கமையாகும். இஸ்லாமிய உம்மத்தின் உறுப்பினர் என்ற வகையில் நம் அனைவர் மீதும் இக்கடமையை நிறைவேற்றுவது பொறுப்பாகிவிடுகின்றது. ஜகாத் பணத்தை வசூலித்து இத்தகைய வழிகளில் முறையாகச் செலவு செய்யும் நிர்வாக வழிகளை ஏற்படுத்துவதும் அவற்றை நிர்வகிப்பதும் நம்மீது கடமையாகும்.

பதிலைப் பெற்றிருப்பீர்கள் என நம்புகிறேன்.

....

கேள்வி: ஆணும் பெண்ணும் அசமம் என்று உரையில் குறிப்பிட்டீர்கள். அப்படியென்றால், ஆணுக்கும் பெண்ணும் வழங்கப்படகின் றசொத்துரிமையில் ஏன் இந்த பாரபட்சம்?.

பதில்: ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான பொருளாதார உரிமைகளை வழங்குவதாக உரையாற்றும்போது குறிப்பிடப்பட்டது. சொத்துப் பங்கீட்டின்போது ஆணும் பெண்ணும் சரிசமமாக கருதப்படுவதில்லையே ஏன்?. ஆணுடைய பங்கில் பாதிதான் பெண்ணுக்கு கிடைக்கும் என்று

பொதுவாகக் கூறப்படுகின்றதே? என இந்த சகோதரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து திருக்குஆன் கூறுவதைப் பார்ப்போம்.

4:11. 'உங்கள் மக்களில் ஓர் ஆணுக்கு, இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்குபோன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர்விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும் இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் (அவரது) பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்கு உரியதாகும்). இறந்தவருக்கு சகோதரர்கள் இருந்தால் அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம் தான் (மீதி தந்தைக்கு சேரும்). இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாஸனத்தையும், கடனையும் நிரைவேற்றிய பின்னர்தான். உங்கள் பெற்றோர்களும், குழந்தைகளும் - இவர்களில் யார் நன்மை பயப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆகையினால் (இந்த பாகப்பிரிவினை) அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும் மிக்க ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்'.

4:12. 'இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் -

அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்குப் பாதி பாகம் உண்டு. அவர்களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச் சென்றவற்றிலிருந்து. உங்களுக்கு கால் பாகம்தான் - (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாஸனத்தையும், கடனையம் நிறைவேற்றிய பின்னர்தான் - தவிர உங்களுக்குப் பிள்ளையில்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்குக் கால் பாகம்தான். உங்களுக்குப் பிள்ளை இருந்தால், அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான் (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாஸனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான். தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஓர் ஆணோ அல்லது ஒரு பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் - அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் - (இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது. (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன்னும் அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்’. (அல்குர்ஆன் 4:11,12).

சுருக்கமாகச் சொல்வதென்றால் மேற்கண்ட எல்லா

இடங்களிலும் பெண்ணுக்கு பாதிப்பங்கே கிடைக்கும். ஆனால் உண்மைநிலை அவ்வாறன்று!. உதாரணமாக,

இருவருக்கும் ஆறிலொரு பங்கு கிடைக்கும். இறந்துபோனவருக்கு வாரிசுகள் யாரும் இல்லையென்றால் தாய்-தந்தை இருவருக்கும் ஆறிலொரு பங்கு கிடைக்கும். சில சமயங்களில் இறந்துபோனவர் பெண்ணாக இருப்பின், அவருக்கு வாரிசுகளும் இல்லாதிருப்பின், கணவருக்கு பாதிப்பங்கும் தாய்க்கு மூன்றிலொரு பங்கும் தந்தைக்கு ஆறிலொரு பங்கும் கிடைக்கும். இதிலிருந்து நாம் விளங்குவது என்னவென்றால் சில சமயங்களில் ஆணைவிட பெண்ணுக்கு இருமடங்கு அதிமாகவும் கிடைக்கும். இந்த உதாரணத்தில் தந்தையைவிட தாய்க்கு இருமடங்கு அதிகமாக கிடைத்துள்ளது.

இருப்பினும் பல சமயங்களில் ஆணைவிட பெண்ணுக்கு பாதிப்பங்கே கிடைக்கின்றது என்பதில் உங்களுடைய கருத்தோடு நானும் உடன்படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால் பொருளாதாரச் சுமையை முழுக்கமுழுக்க இஸ்லாம் ஆணின் தோள் மீதே சுமத்தியுள்ளது. அதற்காகத்தான் நியாயமாக அவனுக்கு அதிகமான பங்கை வழங்குகின்றது. ஒரு குடும்பத்தின் அனைத்துதேவைகளையிம் நிறைவேற்றியே ஆகவேண்டிய பொறுப்பு பெண்ணைவிட ஆணுக்கே அதிகமாக உள்ளது. ஆகையால் அவனுக்கு பங்கு அதிகமாக கிடைத்தாகவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நாம் இங்கு ‘ஆணுரிமை’யைப் பற்றி பேசவேண்டியிருக்கும்.

ஓர் உதாரணத்தை இங்கு கொடுக்க ஆசைப்படுகிறேன். ஒரு மனிதர் இறந்துவிட்டார். அவருடைய சொத்திலிருந்த மற்ற கடன்உடன்களை எல்லாம் அடைத்தபிறகு வாரிசுகளுக்கு என்ற ஒன்றரை லட்சம் ரூபாய் எஞ்சியுள்ளது. ஒரு ஆண்மகனையும் ஒரு பெண்மகளையும் அவர் விட்டுச்சென்றுள்ளார். இஸ்லாமிய ஷரீஅத்தின்படி ஆணுக்கு ஒரு லட்சம் ரூபாயும் பெண்ணுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் கிடைக்கும். ஆனால், அந்த குடும்பத்தின் எல்லா தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஆண்மகனுக்கே உள்ளது. அந்த செலவினங்களுக்காக தனக்குக் கிடைத்த பங்கில் அவர் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்ய

நேரிடலாம். அல்லது முழுப்பங்கையும் அதாவது ஒரு லட்சம் ரூபாயையும் செலவு செய்ய நேரிடலாம். அதேசமயம் அப்பெண்ணுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்துள்ளது. அவள் மீது எந்தக் கடமையும் இல்லை. அப்பணம் முழுக்க அவளிடமே இருக்கும். ஒரு நயா பைசாவும் செலவழியாது. அக்குடும்பத்திற்காக அவள் எதனையும் செலவழிக்கமாட்டாள்.

....

கேள்வி: வலுக்கட்டாயமாக ஒரு பெண்ணுக்கு திருமணம் முடிக்கப்பட்டால் அவளுடைய திருமணத்தை செல்லாததாக அறிவிக்கலாம் என்ற தாங்கள் தங்களுடைய உரையில் குறிப்பிட்டீர்கள். இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்க ஏதும் சுதந்திரமான அமைப்பு இருக்கின்றதா? பெண்கள் தைரியமாக அப்படிப்பட்ட அமைப்பை அணுகி தங்களுடைய குறைகளை முறையிடலாமா? என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

பதில்: நல்லதொரு கேள்வியை சகோதரி கேட்டிருக்கிறார். அவருடைய கேள்வி பெண்களுடைய உரிமைகளைப் பற்றியது!. ஒரு பெண்ணுக்கு வலுக்கட்டாயமாக திருமணம் செய்விக்கப்பட்டால் அவளுடைய திருமணம் செல்லாததாகிவிடும் என்று திருக்குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக அறிவிக்கின்றன. இப்படிப்பட்ட கல்யாணங்களை விசாரித்து இஸ்லாமிய முறைப்படி அவற்றை ஒழுங்குபடுத்தும் சுதந்திரமான அமைப்பு தற்காலத்தில் இருக்கின்றதா? இப்படிப்பட்ட திருமணம் செல்லாது என்ற அறிவிக்கும் அதிகாரத்தை அது பெற்றிருக்கின்றதா? எனில், உண்டு!. சஊதி அரேபியா போன்ற நாடுகளில் இப்படிப்பட்ட அமைப்புகள் உள்ளன. ஆனால், நம்முடைய இந்தியாவில் இப்படிப்பட்ட அமைப்புகளை நிறுவுவதற்கான அனுமதியை இந்திய சட்ட அமைப்புகள் வழங்குவதில்லை என்பது வருத்திற்குரிய விஷயம்!. இந்தியாவில் 'முஸ்லிம் தனியார் சட்ட வாரியம்' நடைமுறையில் இருந்தாலும் அது எல்லா உரிமைகளையும் உள்ளடக்கியதாக இல்லை.

இந்திய அரசாங்கதித்டம் கோரிக்கை வைக்கப்பட்டு

அனுமதியும் கிடைத்துவிட்டால் இப்படிப்பட்ட அமைப்புகளை நிறுவுவது இங்கும் சாத்தியமே!. தற்போது வரையறுக்கப்பட்ட குறைவான உரிமைகளே கொடுக்கப்படுகின்றன. முழுமையான உரிமைகள் கொடுக்கப்படுவதில்லை.

....

கேள்வி: ஆண்களும் பெண்களும் ஒன்றாக ஒரேயிடத்தில் வேலை செய்ய இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இதை தாங்கள் பழமை என்று கூறுவீர்களா? நவீனம் என்பீர்களா? இன்னொரு கேள்வி ஏர்ஹோஸ்டஸாக பெண் பணிபுரியலாமா? அதிகமான வருமானம் ஈட்டித்தருகின் றநல்லதொரு பணி அது!

பதில்: இக்கேள்வியின் முதற்பகுதியைப் பொருத்தவரை, ஆணும் பெண்ணும் சுதந்திரமாக கலந்துறவாடுவதை இஸ்லாம் அனுமதிக்கவே இல்லை. இந்தப்போக்கு பழமையானதா? புதுமையானதா? என்று கேள்வி எழுப்புவதற்கு முன்னால் ‘புதுமை’ என்பதற்கான ஒரு வரையறையை நாம் செய்துகொள்ளவேண்டும். ஆண்-பெண் இருபலினரும் தங்குதடையில்லாமல் ஒன்றாகக் கலந்து உறவாடுவதைத்தான் நீங்கள் ‘புதுமை’ என்று கருதுகிறீர்களா? வாங்கப்படும் விற்கப்படும் ஒரு பொருளாக பெண்ணை மாற்றுவதையும் மாடலிங் போன்ற தொழில்களைச் செய்யவைத்து ரசிப்பதையும் நீங்கள் ‘புதுமை’ என்று கருதுவீர்களாயின், இஸ்லாம் ‘பழமைவாதம்’தான் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

தாங்கள் ஏதோ பெண்களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுத்திருப்பதாக மேற்குலகின் பத்திரிகைகள் தம்பட்டம் அடித்துக்கெள்கின்றன. உண்மையில் ெண்களுடைய மதிப்பையும் மரியாதையும் பிடுங்கிவிட்டிருக்கிறார்கள்.

பல்கலைக் கழகங்களிலும் பணியிடங்களிலும் படிக்கின்ற, பணியாற்றுகின்ற பெண்களில் சரிபாதிப் பெண்கள் மீது (அதாவது 50%) அத்துமீறல்கள் நடக்கின்றன என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஏன், என்ன கரணம் என்று எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறீரகளா?

ஆண்களும் பெண்களும் தங்குதடையின்றி கலந்து

உறவாடுவதுதான் காரணம். வலுக்கட்டாயமக ெண்களை பலவந்தப்படுத்தி உறவு கொள்ள அனுமதிப்பதுதான் 'புதுமை' என்று நீங்கள் சொன்னால் இஸ்லாம் காலத்துக்கு ஒவ்வாத பழமைதான். அவ்வாறு நீங்கள் கருதவில்லை என்றால் இஸ்லாம் இந்தக் காலத்துக்கும் பொருந்துகின்ற புதிய கொள்கைதான்.

கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு வருவோம். ஏர்ஹோஸ்டஸ் போன் பணிகளில் சேர்ந்து பணியாற்றுவதை இஸ்லாம் அனுமதிக்கின்றதா? ஏனென்றால் கைநிறைய சம்பளம் பெறுகின்ற பெண்களுக்கு பொருத்தமானதொரு பணி இது. நல்ல சம்பளம் கிடைக்கும் பணி என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால், பெண்களுக்கு பொருத்தமான நல்ல பணி என்பதை கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தபின்பே ஒப்புக்கொள்ள முடியும்.

ஏர்ஹோஸ்டஸ் பணிக்கான முதல் தகுதியே 'அழகு'தான். அழகற்ற பெண்ணொருத்திணை ஏர்ஹோஸ்டஸாக எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அழகாக இருப்பதால்! இளமையோடு இருப்பதால்! கவர்ச்சியாக இருப்பதால்!

இஸ்லாமிய ஒழுக்கத்துக்கு முரணான ஆடைகள் அணியுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பயணிகளை சுண்டியிழுக்கும் வகையிலான ஆடம்பரமான, டாம்பீக உடைகளை அணியுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. பயணிகளுடைய சிலபல தேவைகளை அவர்கள் நிறைவேற்றியாக வேண்டும். பயணிகள் பெரும்பாலும் ஆண்களாகவே இருப்பார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இவ்விதமாக நெருக்கம் ஏற்படுகின்றது. சிலசமயங்களில் பயணிகள் அத்துமீறவும் செய்கிறார்கள். ஆனால், அப்பெண்களால் எதுவும் செய்யயியலாது. 'வேலை'யை நினைத்து பயந்தாகவேண்டும். உதாரணமாக, ஒரு பயணி 'மிஸ்! என்னுடைய சீட்டின் பெல்ட்டை கொஞ்சம் கட்டிவிடுங்கள்!' என்று கூறினால் என்னபண்ண முடியும்? ஏர்ஹோஸ்டஸ் கட்டிவிடத்தான் வேண்டும்.

பெரும்பாலான விமானக்கம்பெனிகள் தங்களுடைய பயணிகளுக்கு மதுவையும் வினியோகிக்கின்றன. இஸ்லாமைப்

பொருத்தவரை மதுவைக்குடிப்பது மட்டுமல்ல, அதைப் பறிமாறுவதும் ஹராமான செயலே!

விமானங்களில் பரிமாறுவோர் அனைவரும் பெண்களே! ஆண் பணியாளர்களும் விமானங்களில் இருப்பார்கள். ஆனால் அவர்கள் பரிமாறமாம்டடார்க்ள. அவர்கள் சமையல் கூடத்தில் இருப்பார்கள். விமானங்களில் நிலைமையே தலைகீழாக இருக்கின்றது. ஆண் ஆடுக்களையில் இருக்க, பெண் பயணிகளுக்கு பரிமாறுகிறாள்.

இந்த பணிப்பெண்கள் இல்லாத விமானக் கம்பெனிகளே கிடையாது. ‘இஸ்லாமைக் கடமைகளை’ நிறைவேற்றும் சஊதி ஏர்லைனில் கூட பணிப்பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் நாட்டுநப் பெண்களை அப்பணிகளில் நியமிக்காமல் வெளிநாடுகளில் இருந்து பெண்களை வரவழைத்து பணியில் அமர்த்திக் கொள்கிறார்கள்.

இதற்குப் பெயர்தான் இரட்டை அளவுகோள்! எதற்காக இந்த இரட்டை அளவுகோள் என்றால், விமானத்தொழில் இதில்லாமல் நடைபெறாதாம். விமானத்தில் பயணிக்கும் பயணிகளை ஈர்ப்பதற்காக அழகுப்பதுமைகளைப் போன்ற பெண்கள் அவசியம் தேவையாம்.

விமானக்கம்பெனிகள் தங்களது பணியாளர்களை எவ்விதம் தேர்ந்தெடுக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொண்டால் மிகவும் மனவருத்தம் அடைவீர்கள். உதாரணமாக, இந்தியன் ஏர்லைன் மற்றும் ஏர் இந்தியா கம்பெனிகளில் வேலைக்கு தேர்வாகும் ஏர்ஹோஸ்டஸ்கள் நான்காண்டுகளுக்கு திருமணம் செய்து கொள்ளக்கூடாது. இன்னும் ஒருசில கம்பெனிகளில் ‘கர்ப்பம் தரித்துவிடடால் பணியிலிருந்து விலகிவிடவேண்டும்’ே என்று விதியே இருக்கின்றது. 35 வயதில் அவர்கள் ரிடையர்ட் ஆகிவிடுவார்கள். ஏனென்றால், ஈர்க்கும் திறனை அவர்கள் இழந்துவிடுகிறார்கள்.

இதைப்போய் நல்லவேலை, பொருத்தமான வேலை என்று சொல்கிறீர்களே?

…………………………………

கேள்வி: ஆணும் பெண்ணும் சேர்ந்து வஹகல்வி பயில்வதை

இடஸ்லாம் ஆதரிக்கின்றதா?

பதில்: இருபாலர் கல்வியை இஸ்லாம் ஆதரிக்கின்றதா? என்று என்னுடைய சகோதரர் கேள்வி கேட்டுள்ளார். அதாவது மாணவர்களும் மாணவிகளும் ஒரே பள்ளிக் கூடத்தில் ஒரே கல்லூரியில் சேர்ந்து படிக்கலாமா? கூடாதா?

முதலில் பள்ளிக்கூடத்தை எடுத்துக்கொள்வோம். ஒரே பள்ளியில் மாணவர்களும் மாணவிகளும் சேர்ந்து படிப்பது சரியா? கடந்த வருடம் ஓர் அறிக்கை வெளியானது. 'The World This Week' என்ற இதழில் அந்த ரிப்போர்ட் வெளியானது. தனிப்பள்ளிகளைப் பற்றியும் இருபாலரும் சேர்ந்து பயிலும் பள்ளிகளைப் பற்றியும் அதில் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. பிரிட்டன் பள்ளிக்கூடங்களைப் பற்றியது அந்த அறிக்கை.

இருபாலரும் சேர்ந்து படிக்கும பள்ளிகளைவிட தனிப்பள்ளிகள் எல்லாவகையிலும சிறந்து விளடஙகுகின்றன என்று அந்த சர்வே தெரிவிக்கின்றது. தனிப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டுகிறார்ள் என அப்பள்ளிகளின் ஆசிரியர்கள் தெரிவித்திருந்தார்கள். மாணவர்களைக் கேட்டபோது இருபாலரும் சேர்ந்து பயிலும் பள்ளிகயையே தம் விரும்புவதாகக் கூறினார்கள். காரணம் என்னவென்று சொல்லத்தேவையில்லை.

கோ எஜுகேஷன் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலான நேரத்தை எதிர்பாலினரை கவர்கடிதலேயே செலவிடுவதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. அர்களுடைய நேரமெல்லாம் எதிர்பாலினரை ஈர்க்கும் வகையில் தம்மை மாற்றிக்கெள்வது எப்படி என்பதிலேயே கழிகின்றதே ஒழிய படிப்பில் கழிவதில்லை.

தனித்தனிப் பள்ளிகை அதிகரிப்பது குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் கல்வியில் செலுத்தும் கவனத்தைவிட சக மாணவர்களோடு பாலியல் விஷயங்களைத் தெரிந்துகொள்வதில்தான் அதிக முனைப்பு காட்டுவதாக ஒரு அறிக்ை தெரிவிக்கின்றது.

இந்தியாவின் நிலையும் ஏறக்குறைய இதேபோன்றுதான் உள்ளது.

கல்லூரிகளில் நீங்கள் இவ்விதம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டால்

பள்ளிகளில் காணப்படுமஅ நிலைமைகள் அங்கு இன்னும் கூடுதலாகக் காணப்படுகின்றன.

பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவிகள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் அத்துமீறல்கள் குறித்த ஓர் அறிக்கை 1980 ம் ஆண்டு மார்ச் மாதம் நியூஸ்வீக் இதழில் வெளியானது. நேரமின்மையால் அதைமுழுமையாக என்னால் இங்கு கூறயியலாது. சுருக்கமாகச் சொல்வது என்றால் பேராசிரியர்களும், லெக்சரர்களும் அதிக மதிப்பெண் ஆசைகாட்டி மாணவிகளை சீரழித்துள்ளார்கள்.

இது நியூஸ் வீக் அளிக்கும் ரிப்போர்ட். இந்தியாவிலும் இதுதான் நடக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல பயனுள்ள கல்வியைக் கற்பது கஷ்டமான விஷயமாக ஆகிவிடும். சில மாதங்களுக்கு முன்னாலும் ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியானது. எனக்கு கல்லூரியின் பெணர் நினைவில்லை. பட்டப்பகலில் கல்லூரி வளாகத்தில் ஒரு மாணவியிடம் ஒரு சில மாணவர்கள் அத்துமீறி நடந்துகொண்டுள்ளார்கள்.

நியூயார்க் டைம்ஸ், டைம்ஸ் ஆஃப் இண்டியா போன்ற பத்திரிக்கைகளில் வெறியான ஒரு கருத்துப்படி அமெரிக்காவில் பல்கலைக்கழக மாணவிகளில் 25%பேர் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

கல்வியைக் கற்றுக்கொள்வதற்காக நீங்கள் உங்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புகிறீர்களா? இல்லை, பாலியல் ரீதியாக கெட்டுக்குட்டிச் சுரவாக மாறுவதற்கு அனுப்புகிறீர்களா? கல்விக்காக அனுப்புகிறீர்கள் என்றால் தனித்தனி பாடசாலைகளுக்கு மம்டட்டுமே அனுப்புங்கள் என்றுதான் என்னால் ஆலோசனை வழங்கமுடியும். இப்படிப்பபட்ட பள்ளிகளுடம கல்லூரிகளும் நிறையவே உள்ளன.

....

கேள்வி: முந்தைய காலத்தில் குர்ஆன், ஹதீஸ் போன்றவற்றைக் கற்றுத்தேர்ந்த இஸ்லாமியப் பேரறிஞர்களாக நிறைய பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய உரையின் மூலம் அறிந்துகொண்டேன். இப்போது நம்முடைய காலத்தில் குர்ஆரனையும் ஹதீதுகளையும் விளக்க பேருரை ஆற்றும் அளவுக்கு திறமைபடைத்த உலமாக்களாக எத்தனை பெண்கள் இருக்கிறார்கள்? அவர்களுடைய விகிதம் என்ன? அப்படி இருந்திருந்தால் அவர்கள்

தஸ்லீமா நஸ்ரீனுக்கு ஆதரவாக குரல் கொடுத்திருப்பார்கள் அல்லவா?

பதில்: ஆக, இறைத்தூதரின் காலத்தில் மிகப்பெரிய மார்க்க அறிஞர்களாக பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் விளக்கம் அளிப்பதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. எண்ணற்ற ஹததுகளை மனனம் செய்தும் இருந்தார்கள். அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் இரண்டாயிரத்து இருநூறு நபிமொழிகளை அறிவித்து உள்ளார்கள். ஆனால். தற்காலத்தில் அப்படிப்பட்ட அறிஞர்களாக எத்தனை பெண்கள் உள்ளார்கள் என்பதுதான் உங்களுடைய கேள்வி. அப்படியிருப்பின் அவர்களுடைய விகிதாச்சாரம் என்ன என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறீர்கள்.

பெண் அறிஞர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கவே செய்கிறார்கள். பல இஸ்லாமிய பாடசாலைகளில் பெண்களுக்கென்று இஸ்லாமியக் கல்வி போதிக்கப்படுகின்றது. மும்பையிலுள்ள கல்லூரியையும் லக்னவ் நகரிலுள்ள நத்வத்துல் உலமா பாடசாலையையும் ஜாமிஅத்துல் பனாத், இஸ்லாஹுல் பனாத் பேன்ற பாடசாலைகளையும் உதாரணங்களாகக் கூறலாம். அங்கு பயின்ற ஆலிமாக்களைே வெளிஉலகிலும் நாம் பார்க்கலாம். எத்தனை சதவீதம் என்று என்னால் துல்லியமாகக் கூறமுடியாது. ஆனால், எண்ணற்றோர் உள்ளனர் என்றுமட்டும் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

தஸ்லீமா நஸ்ரீனைப் பற்றியும் கேட்டுள்ளீர்கள். தஸ்லீமாவை ஆதரிக்கலாமா என்பது முதல் விஷயம். தஸ்லீமா நஸ்ரீன் தொடர்பாக நடைபெற்ற ஒரு விவாதத்தில் நானும் கலந்துகொண்டேன். டாக்டர் வியாஸ், ஃபாதர் பிரேர் மற்றும் தஸ்லீமாவின் நூலான ‘லஜ்ஜா’வை மராட்டி மொழியில் மொழியாக்கம் செய்தவரான அசோக் ஷாஹானி போன்றோரும் அவ்விாதத்தில் கலந்துகொண்டனர். அதில் கலந்து கொள்ளவேண்டாம். உங்களுடைய பேச்சுக்கு தவறான அர்த்தம் கொடுக்கப்படும் என்று பல நண்பர்கள் எச்சரித்தார்கள். ஆனால், போய்க்கலந்துகொள். அல்லாஹ் உதவி செய்வான் என்று என்னை என்னுடையஅ தந்தை ஊக்கப்படுத்தினார். நான் அவ்விதாதத்தில் கலந்துகொண்டேன். இடைறயருளால்

விவாதம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. விவாதம் வெற்றிகரமைாக அமைந்தது என்று நான் எங்ஙனம் சொல்கிறேன் என்றால் அதைப்பற்றி ஒரு பத்திரிகையிலுமம செய்தி வெளியாகவில்லை. இத்தனைக்கும் டைம்ஸ் ஆஃப் இண்டியாவின் செய்தியாளல் வந்திருந்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளர், பிற பிரபல பத்திரிகைகளின் செய்தியார்களும் வந்திருந்தனர். ஆயினும் எந்தப் பத்திரிகையிலும் செய்தி வெளியாகவில்லை. ஏனென்றால், அவர்கள் எதிர்பார்த்ததைப்போல எதுவுமே நான் பேசவில்லை. அப்படி பேசியிருந்தால் ‘புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரான டாக்டர் ஜாகீர் நாயக்’ இவ்வாறு பேசினார் என்று கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டிருப்பார்கள்.

....

கேள்வி: விவாகவிலக்கு செய்யும் உரிமையை இஸ்லாம் ஆணுக்கு மட்டும் ஏன் வழங்கியுள்ளது? அவ்வுரிமை பெண்ணுக்கு ஏன் வழங்கப்படவில்லை?

பதில்: தன்னுடைய மனைவியை வேண்டாம் ன்றுெ விலக்கிவைக்கும் உரிமை ஆணுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளதே, பெண்ணுக்கு அவ்வுரிமை இல்லையா? அவள் தலாக் கொடுக்கக்கூடாதா? என்று இந்த சகோதரி கேட்டிருக்கிறார்கள். இதற்கு பதில் என்னவெனில், பெண் தலாக் கொடுக்கமுடியாது. தலாக் என்பது ஒரு அரபிச்சொல். ஓர்ஆண் தன்னுடைய மனைவியை விவாகவிலக்கு செய்யும்போது மட்டும் சொல்லப்படுகின்ற ஒரு வார்த்தை அது. கணவன் - மனைவி பிரிவதற்கு இஸ்லாத்தில் ஐந்து முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

முதலாவது, ஆணும் பெண்ணும் மனமொத்துப்போய் விலகிவிடுவது. தங்களால் இணைந்து வாழ்க்கைப் பயணஒத்தைத் தொடரமுடியாது எனக்கருதுமம தம்பதியர் இருவரும் தங்களுக்கிடையைலான டிதிருமணஒப்பந்தத்தை முறித்துக்கொள்வது.

இரண்டாவது, தன்னுடைய மனைவி தனக்குப் பிடிக்கவில்லை என்று கணவன் தானாக முன்வந்து மனைவிக்கு விவாகவிலக்கு

செய்துவிடுவது. இதுவே தலாக் என்று சொல்லப்படுகின்றது. அச்சமயத்தில் கணவன் மனைவிக்கு மஹராகக் கொடுத்ததைத் திரும்பப் பெறமுடியாது. அதுவரை கொடுக்கவில்லை என்றால் மஹரை உடனே கொடுத்தாகவேண்டும். மனைவிக்கு ஏதேனும அன்பளிப்புகள் வழங்கியிருந்தாலும் அவற்றை விட்டுவிடவேண்டும்.

மூன்றாவது, தன்னுடைய சொந்தவிருப்பத்தின் அடிப்படையில் கணவனை வேண்டாம் என்ற மனைவி கூறிவிடுவது. ஆம், மனைவியும் இதுபோன்று செய்யும் உரிமை படைத்தவளே! திருமண ஒப்பந்தத்தில் இது குறிப்பிடப் பட்டிருந்தால் மனைவிக்கும் இவவுரிமை உண்டு!

நான்காவது, தன்னுடைய கணவன் தன்னை முறைப்படி நடத்தவில்லை என்றும் தன்னுடைய உரிமைகளை வழங்க மறுக்கிறான் என்றும் வாழ்வாதார வசதிகளைச் செய்து தருவதில்லை என்றும் மனைவி நீதிமன்றத்தில் முறையிட்டால் அதை விசாரித்து இஸ்லாமிய நீதிபதி அத்திருமணத்தை செல்ாது என அறிவிப்பார். அச்சமயம் முழு மஹறையோ அல்லது பாதி மஹறையோ கணவன் வழங்கவேண்டியிருக்கும்.

ஐந்தாவது, அதாவது கடைசி, கணவனிடம் எந்தக்குறையும் இல்லை ஆயினும் தான் அவனோடு வாழ விரும்பவில்லை என்று மனைவி முறையிடலாம். அதைணு குலஃ என்று கூறுகிறோம். இது தொடர்பான உரையாடல்கள் மிகக்குறைவாகவே நடந்துள்ளன.

இவ்வாறாக, இஸ்லாம் பிரிந்துசெல்ல ஐந்து வழிகளை முன்வைக்கின்றது. உங்களுடைய கேள்விக்கு பதிலையும் தருகின்றது.

....

கேள்வி: பள்ளிவாசலுக்கு செல்லும் அனுமதி பெண்களுக்கு ஏன் வழங்கப்படுவதில்லை?

பதில்: அதாவது முஸ்லிம் பெண்கள் ஏன் பள்ளிவாசலுக்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்ற கேட்கப்படுகின்றது. இது ஒரு கடினமான கேள்வியாகும். திருக்குர்ஆனில் பள்ளிவாசலுக்கு பெண்கள் செல்லக்கூடாது என்று எங்குமே

கூறப்படவில்லை. பள்ளிவாசலுக்கு போய் தொழாதீர்கள் என்று நபிமொழிகளிலும் பெண்கள் தடுக்கப்படவில்லை. ‘பெண்கள் பள்ளிவாசலுக்கு சென்று தொழுவதைக் காட்டிலும் தங்களது வீடுகளிலேயே தொழுவதுதான் சிறந்தது. வறாண்டாவில் தொழுவதைவிட வீட்டின் உள்ளறையிவ் தொழுவதுதான் சிறந்தது!’ என்று ஒரு ஹதீதை ஒருசிலர் சுட்டிக்காட்டுகிறார்கள். இத்தகையோர் ஒரு ஹதீஸுக்கு மட்டும முக்கியத்துவம் அளிக்கிறார்களே அல்லாமல் மற்ற அனைத்து ஹதீஸ்களையும் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள்.

பள்ளிவாசலுக்கு சென்று ஜமாஅத்தோடு தொழுதால் 27 மடங்கு நன்மை அதிகமாகக் கிடைக்கும் என்ற இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லாம் அவர்கள் கூறியுள்ளார்கள். ‘எங்களுக்கு கைக்குழந்தைகள் உள்ளன. வீட்டு வேலைகளும் நிறைய உள்ளன. நாங்கள் எவ்வாறு பள்ளிவாசலுக்கு வருவது?’ என ஒரு பெண்மணி வினவியபோது, ‘பெண்களைப் பொருத்தவரை பள்ளியைவிட வீடும் வீட்டு வறாண்டாவைவிட வீட்டின் உள்ளறையும் தொழ ஏற்ற இடம்!’ என்று அண்ணலார் பதில் அளித்தார்கள். ‘குழந்தை கைக்குழந்தையாக இருப்பதன் காரணத்தால் அல்லது வேறு ஏதோ வேலைகளிக் காரணத்தால் அவளால் பள்ளிவாசலுக்கு வர முடியவில்லை என்றால் பள்ளியில் தொழுத நன்மையே அவளுக்கும் கிடைக்கும்’ என்றும் கூறினார்கள்.

பள்ளிவாசலுக்கு வருவவைவிட்டும பெண்கள் தடுக்கப்படவில்லை என்பதை பல்றே நபிமொழிகளும் தெரிவிக்கின்றன. ‘அல்லாஹ்வின் அடிமைப்பெண்களை பள்ளிவசலுக்கு வரவிடமல் தடுக்காதீர்கள்!’ என்று ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.

‘மனைவிகள் பள்ளிவாசலுக்கு சென்று தொழ நினைத்தால் அவர்களுடைய கணவர்கள் அதைத் தடுக்கக்கூடாது!’ என ஆண்களுக்கு அண்ணலார உத்தரவிட்டதை இன்னொரு ஹதீஸ் நமக்குத் தெரிவிக்கின்றது.

இப்படி இதே கருத்தை வழங்கும் பல நபிமொழிகள் உள்ளன. விரிவஞ்சி நான் விடுகிறேன். ஆக, பெண்கள் பளிவாசலுக்கு

வருவனை இஸ்லாம் தடை செய்யவேயில்லை. ஒரேஒரு நிபந்தனை பள்ளியில் பெண்கள் தொழவும் வந்துபோகவும் உரியவசதிகள் இருக்கவேண்டும். ஏனென்றால் ஆண்களும் பெண்களும் கலப்பதை இஸ்லாம் விரும்பவில்லை, இல்லையா?

மற்ற சமயத்தினரின் வழிபாட்டிடங்களில் என்ன நிகழ்கின்றது என்பதை நாம் பார்க்கத்தானே செய்கிறோம். வணக்கம் செய்யும் நோக்கத்திற்காக வருவோர் மிகவும் குறைவு! கண்களை ஓட்டும் நோக்கத்தில் வருவோரே அதிகம். ஆகையால், அதற்கான அனுமதியை இஸ்லாம் வழங்கவில்லை. எனினும் பள்ளிவாசலில் பெண்களுக்கென்று தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றால் வரும் வழியும் போகும் வழியும் ஆண்கள் பார்வையில் படாத வழிகள் என்றால் ஒழு செய்வதற்கான தனி இடம், தொழ தனி ஹால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய பள்ளிகளில் கண்டிப்பாக பெண்கள் தொழ அனுமதி உண்டு!

தொழும்போது தோளோடு தோடள ஒட்டி நிற்கவேண்டும். ஆண்களை விட பெண்களுக்கு வியர்வை வாடை அதிகம் என்று மருத்துவம் சொல்கின்றது. ஆண்களும் பெண்களும் தோளோடு தோள் ஒட்டி நின்றால் கண்டிப்பாக ஆண்களுடைய கவனம் சிதறும். ஆகையால் பள்ளிவாசல்களில் தொழும்போது ஆண்களுக்குப் பின்னால் நின்று தொழுமாறு பெண்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

சஊதி அரேபியா நாட்டிற்கு சென்றால் அங்கு சர்வசாதாரணமாக பெண்கள் பள்ளிவாசலுக்கு வந்துபோவதைக் காணலாம். அவ்வாறே அமெரிக்காவுக்கோ பிரிட்டனுக்கோ சென்றால் அங்கும் பெண்கள் பள்ளிக்கு வருவதைக் காணலாம். இந்தியா போன் ஒருசில நாடுகளில் மட்டும்தான் பெண்கள் பள்ளிவாசலுக்கு வர கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

கஅபத்துல்லலாஹ்விலும் மஸ்ஜிதுந்நபவியிலும் கூட பெண்கள் பள்ளிவாசலுக்கு வரத்தான் செய்கிறார்கள். இந்தியாவிலும் இப்போது பல பள்ளிவாசல்களில் பெண்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. இவ்வழக்கம் இன்னும்

அதிகமான பள்ளிவாசல்களில் பின்பற்றப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

....

கேள்வி: இரண்டாவது திருமணம் செய்யிம்முன் முதல் மனைவியிடம் அனுமதி பெறவேண்டியது அவசியமா?

பதில்: அதாவது, ஓர் ஆண் இரண்டாவது திருமண்ம செய்யநினைத்தால் தன்னுடைய முதல் மனைவியிடம் அனுமதி கேம்டகவேண்டுமா என்று சகோதரி கேட்கிறார். இரண்டாவது திருமணத்திற்கு முதல் மனைவியிடம் அனுமதி கேட்கவேண்டிய அவசியமில்லை என்று இஸ்லாம் சொல்கின்றது.

பல திருமணங்களை புரிய ஒரேஒரு நிபந்தனையைத்தான் திருக்குர்ஆன் முன்வைக்கின்றது. அது நடுநிலைமை! நீதம்! பல மனைவிகள் இருந்தாலும் அனைவரோடும் உங்களால் நீதமாக நடக்கமுடியும் என்றால் நீங்கள் பல திருமணங்களை செய்துகொள்ளலாம். இருப்பினும் முதல் மனைவியின் அனுமதியோடு இரண்டாவது திருமணம் செய்துகொண்டால் இருவருக்குமான உறவு சுமூகமாக இருக்கும்.

முதலாவது திருமணம் செய்யும்போது மனைவி ஒரு நிபந்தனையை விதித்தாள் என்று வைத்துக்கொள்வோம். அதாவது இரண்டாவது திருமணம் செய்வதாக இருந்தால் தன்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்யவேண்டும என்று நிபந்தனை விதித்திருந்தால் வேறுவழியில்லை. கண்டிப்பாக முதல் மனைவியிடம் அனுமதி பெற்றே ஆகவேண்டும். மற்றபடி தேவையில்லை.